Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு பாரிக்கப்படும்

நீயூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலர்: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஷூ ஆனி மீ 10 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 19 (24-06-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY விலை: 60

ஜூலை முடிவுக்குள் விலகியே ஆக வேண்டும்
இல்லையேல் முகாம்களில் இருக்க வேண்டும்

அமைதிப்படை விலகல் குறித்து பிரேமா திட்டவட்டமான அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

✶ வருகிற மாத முடிவுக்குள் அமைதிப்படையை இந்தியா விலக்கிக்கொள்ள வேண்டும்.

✶ முழுத் துருப்புக்களையும் உடனடியாக விலக்கிக் கொள்ள முடியாவிட்டால் பாசறைக்குள் இந்திய அமைதிப்படையினரை இந்தியா வைத்துக்கொள்ள வேண்டும்.

✶ அதன் பின்னர் அமைதிப்படையினர் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணிபுரிய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

✶ அமைதிப் படையினர் வாபஸானவுடன் வடக்கிலும், கிழக்கிலும் மீண்டும் அமைதி நிலைநாட்டப்படும். -ஜனதிபதி பிரேமதாஸா இவ்வாறு அறிவித்தார்.

மஹியங்கனையில் 11 ஆவது கம்உதாவ பொருட்காட்சியை அங்குரார்ப்பணஞ் செய்து வைத்துப் பேசுகையில் ஜனதிபதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குள் மட்டும் நிலவிய நெருக்கடி அமைதிப் படையினர் வந்தபின்னர் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியது.

அமைதிப்படையினர் விரைவில் வாபஸ் வாங்கப்படவேண்டும். அப்போதுதான் இந்திய - இலங்கை உறவு பலப்படுத்தப்படும்.

பாசறைக்குள் அமைதிப் படை திரும்பியவுடன் அவர்கள் எந்தப் பகுதியையும் நிர்வகிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பேச்சுக்கள் மூலம் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

இந்தியத் துருப்புக்கள் திரும்பிப் போகமறுத்தால் பாசறைகளுக்குள் இருக்கும்படி நான் அவருக்கு உத்தரவு பிறப்பிக்க இருக்கிறேன்.

இந்திய அமைதிப்படை வெளியேற மறுத்தால் உலக

(4ஆம் பக்கம் பார்க்க)

ஜீ.சி.ஈ. முடிவுகள்

கொழும்பு, ஜூன். 24

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இவ்வார இறுதியில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் நேற்று அறிவித்தது. (உ-எ)

66 ஆவது பிறந்த நாள்

கொழும்பு, ஜூன் 24

ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசவின் 66 ஆவது பிறந்த தினம் நேற்று வெள்ளிக்கிழமை ஆகும்.

அதனையொட்டி சுசரித்த மண்டபத்தில் ஏழைகளுக்குத் தானம் வழங்கப்பட்டது. (அ)

மூன்று அம்சங்கள் குறித்து

இந்தியாவிடம் விளக்கம் கேட்க
ஜனதிபதிக்கு வற்புறுத்தல்!

கொழும்பில் படையினர் இருவர் பலி!

கொழும்பு, ஜூன் 24

கொழும்பு களஞ்சியாவிலை பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று நண்பகல் 2 மணியளவில் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 2 இராணுவத்தினர் உயிரிழந்தனர். நால்வர் படுகாயமுற்றனர்.

ரி 56 ரக துப்பாக்கிகள் பத்து அபகரிக்கப்பட்டன. (உ-1)

சடலத்தில் பொறிக்குண்டு!

கொழும்பு, ஜூன் 24

கொல்லப்பட்ட ஒருவரின் சடலத்தினுள் மறைத்து வைக்கப்பட்ட பொறிக்குண்டு ஒன்றை இராணுவத்தினர் நேற்று முன்தினம் கண்டுபிடித்தனர்.

தெமோதர அருகில் வீதி ஓரத்தில் கிடந்த சடலம் ஒன்றை பொலீஸார் அகற்றும்போது இந்த பொறிக்குண்டைக் கண்டுபிடித்தனர்.

சடலத்தின் தலையில் சூட்டுக் காயம் காணப்பட்டது. சடலத்தினுள் 'கிரனேட்' வைக்கப்பட்டிருந்தது. (உ-எ)

ஆளும்கட்சியின் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்ற முஸ்தீபு

கொழும்பு, ஜூன் 24

✶ இலங்கை சமர்ப்பித்த நட்புறவு ஒப்பந்த யோசனை பற்றி பதிலளிக்காமல் இந்தியா மௌனம் சாதிப்பது ஏன்?

✶ வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இந்திய அமைதிப்படையுடன் இலங்கைப் படை கூட்டு ரோந்து மேற்கொள்ள இந்திய அரசு இணங்கி வராதது ஏன்?

✶ இந்திய அமைதிப்படையை வாபஸ் வாங்குப்படி ஜனதிபதி விடுத்த கோரிக்கையை இந்தியா ஏற்காதது ஏன்?

இக் கேள்விகளுக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் விளக்கம் கோருமாறு இலங்கை ஜனதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு வற்புறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் போது இந்த 3 அம்சங்கள் குறித்து இந்திய அரசிடம் விளக்கம் கோர வேண்டும் என்ற கோரிக்கை அங்கு எழுப்பப்படவிருக்கிறது.

இந்த விடயம் சம்பந்தமாக செயற்குழு உறுப்பினர்களிடையே ஆதரவு திரட்டப்படுவதாகவும் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த, முக்கிய பிரமுகர்கள் இந்த கோரிக்கையை எழுப்புவதற்கு ஆதரவாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது

பேசிப் பேசி சாதனை!

சென்னை, ஜூன் 24

இடைவிடாமல் 360 மணித்தியாலயம் பேசி மதுரையைச் சேர்ந்த எஸ். வி. ஜெயராமன் நேற்று உலக சாதனை ஒன்றை நிகழ்த்தினார்.

சென்னை தங்கக் கடற்கரையில் கடந்த 8 ஆம் திகதி சரியாகக் காலை 10 மணிக்கு தனது சாதனை முயற்சியை ஆரம்பித்தார்.

3 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை 15 நிமிடங்கள் ஓய்வு எடுத்துக்கொண்டு - திரு. ஜெயராமன் தொடர்ந்து 360 மணித்தியாலங்கள் பேசி நேற்றுக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

அமைச்சர்களுக்கும் தண்டனை தவிர்ப்பு வசதி!

கொழும்பு, ஜூன் 24

அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கு அவசரகாலச் சட்டத்தின் கீழ் சட்டரீதியாக தண்டனை தவிர்ப்பு (Indemnity) வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் எடுக்கும் செயல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எவரும் மேற்கொள்வதை இத் தண்டனை தவிர்ப்புச் சலுகை தடை செய்கிறது.

ஒருகுறிப்பிட்ட காலத்துக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

ஈரோஸ் பணிமனைகள் மீது கிழக்கில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூன்.24

கிழக்கில் ஈரோஸ் அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

செங்கலடியில் உள்ள அலுவலகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தாக்கப்பட்டது.

வந்தாறுமூலையில் உள்ள அலுவலகம் கடந்தவார இறுதியில் தாக்குதலுக்கு இலக்கானது.

அங்கிருந்த ஒன்பது பேர் கூட்டிச் செல்லப்பட்டனர் என்றும் எண்மர் விடுவிக்கப்பட்டனர் என்றும் ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சம்பவங்களில் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. (ஒ-10)

கொழும்பில் வேலைநிறுத்தம் நாளுக்கு நாள் மோசமாகிறது

கொழும்பு, ஜூன் 24

கொழும்பில் வேலை நிறுத்த நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. கொழும்பு நகரமே முற்றுகை ஸ்தம்பிக்கும் நிலைமைநெருங்கி வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று மத்திய தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலைய ஊழியர்களும், கொழும்பு பெரியாஸ்பத்திரி மற்றும் அரச, தனியார் வங்கி ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

போக்குவரத்துத் துறை ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகவே இவர்களும் வேலை நிறுத்தததில் குதித்தனர்.

ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் நேற்றுக்காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை கொழும்பில் தொலைபேசிச் சேவை முற்றுகச் சீர்குலைந்தது.

வங்கிகளில் அலுவல்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

எரிபொருள் தட்டுப்பாடு நேற்று ஓரளவு நீங்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். நகரில் ஏற்பட்டிருந்த எரிபொருள் தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளது.

நேற்றுக் காலை நகரின் பல பெற்றோல்விற்பனைநிலையங்களிலும் பெற்றோல் தாராளமாக விநியோகிக்கப்பட்டது.

இதேவேளை எரிபொருள் ஏற்றிக்கொண்டு நேற்றும் ரயில் ஒன்று யாழ். நகர் வந்தது.

இதனை அடுத்து நேற்று நகரில் கறுப்புச் சந்தையில் பெற்றோலின் விலை திடீரெனக் குறைந்தது. (உ-9-3)

ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுபநேரம்

24—06—1989
ஆனி — 10
சனிக்கிழமை

சுபநேரம்:
02.55 முதல் 04 25 வரை
ராகுகாலம்:
08 55 முதல் 10.25 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அமைச்சரவை மாற்றம் விரைவில் ஏற்படும்?

கொழும்பு, ஜூன் 24

அமைச்சரவையில் விரைவில் மாற்றம் நிகழவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்த மாற்றத்தின்படி ஆளும் கட்சியைச் சேர்ந்த—அனுபவம் மிக்க— பிரமுகர்கள் சிலருக்கு முக்கிய பொறுப்புக்கள் கொடுக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

"தமிழ் தேசிய மன்றம்" பத்மநாபா அறிவிப்பு

புதுடில்லி ஜூன் 24

ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ ஆகியவை இணைந்து "தமிழ் தேசிய மன்றம்" ஒன்றை அமைத்திருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஈழத்தமிழர் நலன்களுக்கு எதிரான சக்திகளை எதிர்த்துப் போராடவே இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் திரு. பத்மநாபா திருமலைப் பொதுக்கூட்டத்தில் நேற்று அறிவித்தார்.

"இலங்கை சிதறுண்டால் அதற்கு இலங்கை அரசே பொறுப்பு" -இப்படி இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய வடக்கு, கிழக்கு மாகாண முதலவர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார். (உ)

கொழும்பு மாநகரில் மக்கள் வண்டிலில் சவாரி!

யாழ்ப்பாணம், ஜூன் 24

கொழும்பு மாநகரில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து சீர்குலைவை அடுத்து மக்கள் வண்டில்கள், லொறிகள் மற்றும் சைக்கிள்களில் பிரயாணம் செய்கிறார்கள்.

கடந்த இருவாரமாக இடம் பெற்று வரும் போக்குவரத்து வேலைநிறுத்தத்தால், மக்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிப்பதாக அறிய வருகிறது.

சில தனியார் நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்துள்ளன.

ஈரோஸ் பணிமனைகள் மீது கிழக்கில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூன்.24

கிழக்கில் ஈரோஸ் அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

செங்கலடியில் உள்ள அலுவலகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தாக்கப்பட்டது.

வந்தாறுமூலையில் உள்ள அலுவலகம் கடந்தவார இறுதியில் தாக்குதலுக்கு இலக்கானது.

அங்கிருந்த ஒன்பது பேர் கூட்டிச் செல்லப்பட்டனர் என்றும் எண்மர் விடுவிக்கப்பட்டனர் என்றும் ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் சம்பவங்களில் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. (ஒ-10)

தியேட்டர் முகாமையாளர் நகரில் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், வின்ஸர் தியேட்டர் முகாமையாளர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9-30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது சடலம் சூட்டுக் காயங்களுடன் யாழ் மனோகராச் சந்தியில் கிடக்கக் காணப்பட்டது.

கொலையுண்டவர் சிறில் பிரான்சிஸ் சுவாம்பிள்ளை (வயது55). இவர் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் ஆசிரியராவார். இவர் யாழ்ப்பாணம், 4ஆம் குறுக்கு தெருவைச் சேர்ந்தவர். (ஒ-10-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

Avery 250 K.G Weighing Machine 'அவேரி' 250 கிலோ பிளாட்போம் தராசு மிகவும் நல்ல நிலையில் படி செட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 220 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (1010)

புதிய Casio S.K-10 Music Organ விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 3900/- 268/5 நாவலர் ரோட், ஆனைப்பந்தி. (11344)

Broiler இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. K. திருவருட் சோதி திருச்செல்வம் வீதி, பலாலிரோட், கோண்டாவில். [11345]

தடுப்பூசி, பூச்சிமருந்து கொடுக்கப்பட்ட நல்ல இன அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு 107, சங்கமகள் வீதி, சுன்னாகம். [1008]

Broiler பேட்டுக்கோழி சேவல், சூப்குஞ்சு, விருத்துக் குஞ்சு எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். உடன் தொடர்பு கொள்ளவும். Lucky farm House மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. [11340]

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத்தளபாடங்களும் புத்தக அலுமாரிகள் Fan, Sisil Fridge Bicycle, Singer தையல் மெசின் விலை உயர்ந்த குத்துவிளக்குகள் T.V. மற்றும் பல மின்சார உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. Supeka 343, பருத்தித்துறை ரோட், அரசடி நல்லூர். (11311)

தேவை

தொழிற்சாலை அமைக்கக் கூடிய ஆகக் குறைந்தது 1000 சதுர அடி பரப்பளவுள்ள சட்டிடம்தேவை. அ. ஜெறூட் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். [1007]

கைக்கடிகாரம் திருத்துவதில் தேர்ச்சி பெற்றவர்கள் தேவை. Winting Automatric திருத்துவதில் தேர்ச்சி பெற்றவர்கள் உடன் தேவை. திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். சிவா வாச் வேக்ஸ் 185, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (1009)

டாக்டர் குடும்பத்திற்கு சமையல் செய்வதற்கு உதவியாளர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். க. பொன்னம்பலம் மெடிக்கல் கிளினிக் ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (1001)

மணமகன் தேவை

யாழ்ப்பாண வேளாள சுத்தோலிக்க A/L சித்தியடைந்த 21 வயது ஒரே மகளுக்கு, அதே இனத்தைச் சேர்ந்த, இலங்கையில் நிரந்தர தொழில் புரியும் 30 வயதிற்கு மேற்படாத மணமகன் தேவை. சீதனம் உண்டு. C/o உதயன், யாழ்ப்பாணம். (11307)

உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த 31 வயது நிரம்பிய அழகிய படித்த 8 இல் செவ்வாய்க் குற்றமுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. சீதனம் தகுதிக்கு ஏற்ப கொடுக்கப்படும். கனடாவிற்குச் செல்வதற்கான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும். சாதகக் குறிப்பு மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 546, C/o உதயன், யாழ்ப்பாணம். (1002)

யாழ்ப்பாண இந்து வேளாளர் 29 வயது 12இல் செவ்வாயுள்ள Accountant பெண்ணுக்கு சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியாவை விரும்பும் AccountantEngineer தேவை போதிய சீதனம் தரப்படும். மங்களஎஞ்சினீரிங், கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். Srilanka. (779)

மணமகன் தேவை

சைவ வேளாள குலமிகுந்த அழகுடைய 30 வயது எக்கவுண்டன் பெண்ணுக்கு டாக்டர், எக்கவுண்டன், எஞ்சினியர்மணமகன் தேவை. சீதனம் கொடுக்கப்படும். சாதகக்குறிப்புடன் உடன் தொடர்புகொள்ளவும்:544C/o உதயன், யாழ்ப்பாணம். (798)

சேவை

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கு அண்மையில் பெண்களுக்கு உணவுடன் இருப்பிட வசதி உண்டு. 547, C/o உதயன் யாழ்ப்பாணம். (1003)

கெட்டிக்காரர்கள்

நடித்து மகிழ, படித்துச் சுவைக்க, வயிறு குலுங்கச் சிரிக்க, கண்ணீர் சிந்த, வாசியுங்கள் கெட்டிக்காரர்கள். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய 9 இலங்கை வானொலி நாடகங்களின் தொகுப்பு. விலை ரூபா 25.00 (11300)

தவறிவிட்டது

நடராசா சிவபாதசுந்தரம் ஆகிய எனது அடையாள அட்டை No: 383541812 V அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது கௌசிகாஸ்ரோஸ் அச்சுவேலி ஆகியவற்றில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (1005)

S M. சுல்த்தான் பேக்கறி உரிமையாளரின் மகன் முனுஸ் என்பவரின் பணப்பார்சல் தவறி விட்டது. கிடைத்தவர்கள் ரயவு செய்து சோனகத்தெரு பெரிய பள்ளிவாசல் அன்றி உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (11341)

தபால் மூலம் கல்வி

தபால் மூலம் ஆங்கிலம் பேச, வாசிக்க அல்லது இலக்கணத்துடன் பயில பயிற்சிகள் நடைபெறுகின்றன. சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய தபாலுறை அனுப்பி விபரங்களை அறியலாம். இம்பீரியல் இன்ஸ்ரிரியூட், 25 மாட்டின் லேன், யாழ்ப்பாணம். (713)

கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம், சிங்களம் ஆரம்ப அறிவில் இருந்து கற்பிக்கப்படுகின்றது. வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்; கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 64 ஸ்ரேசன் ரோட், சுன்னாகம் (சுன்னாகம் சந்திக்கும் றெயில்வே கடவைக்கும் இடையில்) (575)

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம், சிங்களம் ஆரம்ப அறிவிலிருந்து கற்பிக்கப்படுகின்றது. வீடுகளுக்கும் வந்து கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்; I. E T 11B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல்மாடி.) (574)

கேள்வி அறிவித்தல்

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் அமைக்கப்பட்ட விருக்கும் மகாமண்டபத்தையும், தர்சன மண்டபத்தையும், சீமேந்தால் மூடுசாந்திட்டுக் கட்டுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை பரிபாலனசபைத் தலைவரிடம் பெற்று கேள்விப்பத்திரங்களை 05-07-1989 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை, ஊரெழு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மு. சங்கரப்பிள்ளை
செயலாளர்
பரிபாலனசபை.

(சி/2898)

நினைவு அஞ்சலி

ச. கனகரெட்ணம்

தோற்றம்: 24.06.1921 மறைவு: 10.03-1978

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப்பிரார்த்திக்கும்:

மனைவி:
மேரி லீலாவதி,

பிள்ளைகள்:
ஷிராணி, வினோலினி, வரலக்ஷ்மி, வரராஜன், பிரியதர்ஷன்.

பேரப்பிள்ளைகள்:
டினேஸ், அஜந், ஷகிலா,

சகோதரர்:
தம்பையா, துரைசிங்கம்.

'சண்முகவாசா' தேவாலய வீடு, சங்கானை.

(899)

ஜனவரிமுதல் ஜூன்வரை மொத்தம் 1705 கொலைகள்

கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதி அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது.

அதன் பின்னர் மாதா மாதம் இடம்பெற்ற கொலைகளின் விவரம் வருமாறு;

ஜனவரி	— 254
பெப்ரவரி	— 494
மார்ச்	— 287
ஏப்ரல்	— 250
மே	— 259
ஜூன் (இதுவரை)	— 161

கொலையுண்ட இந்த 1,705 பேரில்—

★ அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் — 650

★ அரசு ஊழியர் - 120
★ பொலீஸார் - 91
★ படைவீரர் - 50
★ பொதுமக்கள் - 740
★ ஊர்காவல் படையினர் மற்றும் தகவல் கொடுப்போர் -54

31 ஆம் நாள் நினைவஞ்சலி

கரல்ட் தேவராஜா

மலர்வு: 06 - 09 - 1933 மறைவு: 24 - 05 - 1989

வந்த பணி முடிந்ததென்று வானுலகம்
— மீண்டீரோ
இப்படியும் ஓர் நொடியில்
— எம்மையெல்லாம் விட்டு விட்டு
அப்படியே போவீரென்று — ஆர்
அப்பா எண்ணி நின்றோம்!
கலங்கரையாய் எமையெல்லாம்
— கரை சேர்த்த அப்பாவே!
கலங்குகின்றோம் துயரத்தால்
— கண்ணீரைக் கொட்டுகின்றோம்!

இவரின் ஆன்ம சாந்திக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் 24 - 06 - 89 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இத் திருப்பலியில் பங்கு பற்றி பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

120/2, சலமோன் லேன், கொய்யாத்தோட்டம். (951)

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. க. செல்லையா [அதிபர்]

தோற்றம்: 05-12-1936 மறைவு: 24-06-1985

திதி: 08-07-1989

என் அருமைத் தெய்வமே! அன்பான சோதியே! ஆண்டு பல சென்றாலும் அழியாது உமதுருவம் மீண்டும் உமது ஒளியை கண்டிடவே மாட்டோம் ஐயா! தங்கள் பணிப்புரையும், தாராள சிந்தனையும் அன்பான வார்த்தைகளும், அறிவூட்டும் போதனையும் என்றென்றும் எம்முள்ளால் அழியாத ஜோதி ஐயா! தங்கள் ஆத்ம சாந்திக்கு இறையருள் வேண்டுகின்றோம்

தங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, மகன், மகள்மார், உறவினர்கள்.

'திருவேரகம், ஆதிரியமணி செல்லையா வீதி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி. (11327)

முல்லைத்தீவுப் பகுதியில் கடன் அடிப்படையில் தெளிகருவிகள் விநியோகம்

ஒட்டுசுட்டான், ஜூன் 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கமநலசேவை நிலையங்கள் ஊடாக அறுபதுக்கும் மேற்பட்ட மருந்து 'தெளிக்கும் கருவிகள்' கடன் அடிப்படையில் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் உள்ள ஒன்பது கமநலசேவை நிலையங்களும் அவ்வப்பகுதி விவசாயிகளுக்குத் தெளிகருவிகளை 6 மாத கடன் அடிப்படையில் வழங்கியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட கமநலசேவை ஆணையாளர் திரு. எஸ். பஞ்சலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

தெளிகருவி பெற விரும்புவோர் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

31ஆம் நாள் நினைவு அஞ்சலி

இளமுல்லைச் சிரிப்பே — எம்
இதயத்தின் துடிப்பே!

பிறப்பு: 02 02-1978

இறப்பு: 25-05-1989

பெர்ஞண்டோ
● பெல்த்மன் சியாந்தகுமார் ●

முகிலோடும் வானத்து முழுமதியே முத்தமிழே
அலையாடும் ஆழ்கடலின் அடிவிலைந்த முத்தினமே
கலையோடு குறள் கூறு நெறிநிறை பொற்குடமே
நிலையாகா நீநலகு நீயல்லால் வெற்றிடமே!

உனது பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரிகள், உறவினர்கள்.

873, கடற்கரை வீதி, பாஷையூர் — யாழ்ப்பாணம். (11346)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திரு. க பாலகிருஷ்ணபிள்ளை
(காந்தி)
(திக்கம் அம்பாள் மில் உரிமையாளர்)

தோற்றம்: 04 - 09 - 1942 மறைவு: 24 - 05 - 1989

கடந்த 25 - 05 - 1989இல் நடைபெற்ற அன்னாரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் வழங்கி உதவிகள் புரிந்த அனைத்து அன்பு மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்வதுடன் 25 - 06 - 1989 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகளும், சகோதரங்களும், குடும்பத்தினரும்.

திக்கம், அல்வாய். (970)

ஓராண்டு கண்ணீர் அஞ்சலி

கதிரமலை கிருஷ்ணானந்த மூர்த்தி

அன்னையின்மடியில்: 31-12-1961 ஆண்டவன்அடியில்: 24-06 1988

திதி: 13-07-1989

பண்பிற்கு நீர் குன்று! பாசத்திற்கு பல இதயங்கள் அப்பா! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் ஓய்வில்லை கண்களுக்கு! உமது ஆன்மா கூத்தப்பிரானின் குஞ்சிதபாத நிழலில் இன்புற்றிருக்க கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.

அன்புடன்
மனைவி,
பிள்ளைகள் றஜினி, சசிதரன், நளினி.
மாமி, மச்சான்மார்.

அரசடிலேன், தாவடி வடக்கு, கொக்குவில். (11342)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WANTED

Experienced English / Tamil Typist

Vacancy Exist for an English/Tamil Typist in a Reputed Firm at Jaffna. Should have minimum five years experience. A Lady with experience in Stencil Cutting, English / Tamil Tutes, Proof Reading and Maintaining Official Records Preferred.

Salary Negotiable

Applications close on 5th July, 1989.

(C/2895) 548 C/o. UTHAYAN

ஆசார்யாபிஷேக அழைப்பு
(குரு பட்டாபிஷேகம்)

நிகழும் சுக்கில வருடம் ஆனி மாதம் 10 ஆம் திகதி (24. 06. 1989) சனிக்கிழமை காலை 5.30 மணி முதல் 7.30 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் கரந்தைக்குளவத்தை முருகமூர்த்தி கோவில் மண்டபத்தில்

எமது புத்திரன்

செல்வன் பா. சதாசிவம் ஐயாவுக்கு

நடைபெறும் ஆசார்யாபிஷேக, குருப்பட்டமளிப்பு வைபவங்களில் கலந்து கொண்டு சிற பிக்கும் வண்ணம் அன்பர்கள், அடியார்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி பாலசுப்பிரமணிய ஐயா
குடும்பத்தினர்

சாத்திரியார் மடம்,
முருகமூர்த்தி கோவில்,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (975)

புங்குடுதீவு-நயினாதீவு பல. நோ. கூ. சங்கம்

வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் 3000 வெற்றுச்சாக்குகள் கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன, விண்ணப்பிக்க விரும்புவோர், ரூபா 5/- கட்டி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று மீளத்தக்கவைப்புப் பணமாக ரூபா 250/- கட்டி விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் 10-07-1989 ஆம் திகதிக்குப் பிந்தாமல், பொதுமுகாமையாளர், புங்குடுதீவு-நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். என்வலப்பில் இடதுபக்க மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
புங்குடுதீவு-நயினாதீவு பலநோ. கூ. சங்கம், புங்குடுதீவு
(சி/2893)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து குப்பை கூளங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரம் (சாரதி, ஏற்றியிறக்குதல் உட்பட) வாடகைக்குத் தேவைப்படுகிறது

விருப்பமானோர் பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளருடன் 28 - 06 - 1989 காலை 10.00 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

சகல கேள்விதாரரும் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 500/- செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் உழவு இயந்திர உரிமையாளருக்கு இப் பணம் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட பின்பே மீள அளிக்கப்படும்.

— பதில் பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

(சி/2722)

உங்கள் தேவை! எங்கள் சேவை!!

★ தரமான
★ தெளிவான
★ சிக்கனமான

தமிழ், ஆங்கில தட்டச்சு · றேனியோ வேலைகளுக்கு

★ ★ ★

"ஷிப்ரு" (சேவைப் பகுதி)

இல. 19, 2 ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2876)

சைவ மக்களின் வரலாறு அறிய ஆலய சரித்திரங்கள் உதவும்
நூல் வெளியீட்டு விழாவில் உரை

சாவகச்சேரி ஜூன் 24

ஆலய வரலாறுகளை அறிந்தால்தான் யாழ் குடாநாட்டு சைவ மக்களது வரலாற்றையும் நன்கு தெரிந்து கொள்ள முடியும். எல்லா ஊர்களிலும் கோயில்கள் இருப்பதால் இக் கூற்று மிகவும் பொருத்தமானதாகும்.

மட்டுவில் திரு ஆ. நடராசா எழுதிய சந்திர மௌலீசர் ஆலய வரலாறும் திருப்பதிகமும்'' எனும் நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை ஆற்றுகையில் யாழ்பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் மேற்கண்டவாறு கூறினார்.

கொடிகாமம் கொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பியின் தலைமையில் மட்டுவில் வடக்கு சந்திர மௌலீஸ்வரர் வித்தியாசாலையில் விழா இடம் பெற்றது.

கலாநிதி சுப்பிரமணியன் தொடர்ந்து பேசுகையில் ''ஆய்வில் பலவகைகள் உண்டு. யாழ் பல்கலைக்கழகம் 16 வருடங்களாக மேற்கொண்ட ஆய்வுகள் 1987 இல் அழிக்கப்பட்டு விட்டன.

தல வரலாறுகளைப் பாடும் போது உண்மையான பக்தி பாவத்துடனேயே பாடவேண்டும். இந் நூல் வெளியிடு குறிப்பிட்ட ஆலயத்தில் நடைபெற்றிருந்தால் அது சிறப்புடைத்தாகும்'' எனக் கூறினார்.

அதிபர் திரு. சி. இராசசேகரத்தின் வரவேற்புரையைத் தொடர்ந்து சிவஸ்ரீ சிவசாமிக்குருக்கள் ஆசி உரை வழங்கினார்.

புலவர் மா பார்வதிநாதசிவம் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

திரு. சி. கந்தசாமி முதற் பிரதியைப் பெற்றதைத் தொடர்ந்து ஓய்வு பெற்ற அதிபர் பண்டிதர் செ. சிவலிங்கமும் ஆய்வுரை நிகழ்த்தினார். (ச - 31)

1990 முதல் ஏழாம் எட்டாம் ஆண்டுகளில்
வாழ்க்கைத் திறன் பாடத்தை கற்பிக்க அமைச்சு முடிவு

மானிப்பாய், ஜூன் 24

ஏழாம், எட்டாம் ஆண்டுகளில் இப்போது கற்பிக்கப்படுகின்ற தொழில் நுட்பப் பாடத்துக்குப் பதிலாக 1990 ஆம் ஆண்டிலிருந்து வாழ்க்கைத்திறன் பாடத்தை கற்பிப்பதென வாழ்க்கைத்திறன் தொழில்நுட்பக் கல்விப்பணிப் பாளர் திரு. யூ. எஸ். பி. சேனரத்ன அறிவித்துள்ளார்.

பாடசாலைகளில் ஏற்கெனவே வாழ்க்கைத்திறன் கற்பித்தலால் ஏற்பட்ட அனுபவத்தை பயன்படுத்தியும் பாடநெறி வழிகாட்டிகள் முதலியவற்றை உபயோகித்தும் எல்லாப் பாடசாலைகளிலும் வாழ்க்கைத்திறன் கல்வியை ஏழாம் எட்டாம் ஆண்டுகளில் கற்பிக்க வேண்டுமென கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

1983 ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் 600 முதல் 1000 பாடசாலைகளைத் தெரிவு செய்து வாழ்க்கைத்திறன் கல்வியை போதிப்பதென்றும். ஆறு ஆண்டு காலத்தில் சகல பாடசாலைகளிலும் அப்பாடத்தை போதிப்பதற்கு விரிவுபடுத்துவதென்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

வாழ்க்கைத்திறன் பாடத்தை கற்பிப்பதற்கென யூ. என். டி. பி. ஸ்தாபனத்தின் உதவி பெறப்பட்டு 1982 ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

வாழ்க்கைத்திறன் கல்வியைப் போதிப்பதற்கு வேண்டிய ஆசிரியர்களை திரட்டுவதற்கான விபரங்களை கல்வி அமைச்சு சேகரித்து வருகின்றது.

இது சம்பந்தமான விபரங்களையும், புள்ளி விபரங்களையும், ஆசிரியர் பற்றிய விபரங்களையும் அனுப்பி வைக்குமாறு கல்விப்பணிப்பாளர் திரு. சேனரத்ன தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களை கேட்டுக்கொண்டுள்ளார். (க-90)

ரூ. 10 லட்சம் நஷ்டஈடு கோரி 'குமுதம்' மீது ஜெயலலிதா வழக்கு

சென்னை, ஜூன் 24

அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நஷ்டஈடு கோரி குமுதம், Aside ஆகிய வார சஞ்சிகைகள் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

தன்னைப் பற்றிய பொய்யான தகவல்களைப் பிரசுரித்ததற்காக 'குமுதம்' வார சஞ்சிகை 10லட்சம் ரூபாவும் 'எஸைட்' ஆங்கில வார சஞ்சிகை பத்து லட்சம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்க உத்தரவிடும்படி கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை செல்வி ஜெயலலிதா சார்பில் இவ்வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

குமுதம் தனது ஜூன் 16 ஆம் திகதி இதழில் 'வெண்ணைப் பதுமை' என்ற தலைப்பில் செல்வி ஜெயலலிதாவைப் பற்றி ஒரு கட்டுரை வெளியிட்டது.

அதில் 'அரசியல் சூட்டை' தாங்க முடியாத நிலையில் செல்வி ஜெயலலிதா குழம்பிய மனதுடன் காணப்படுகிறார் என்றும் அதிகமாகக் தூக்க மாத்திரைகளை விழுங்கி வருகிறார் என்றும் அதனால் தீவிர போதை பாவனையாளராக (Drug addict) மாறி விட்டார் என்றும் கூறப்பட்டிருந்தது.

இக்கட்டுரை அவதூறானது என்று செல்வி ஜெயலலிதா வழக்கில் தெரிவித்திருக்கிறார். (ா)

சென்னையில் இலங்கையர் கைது!

சென்னை, ஜூன் 24

களவாடப்பட்டதாகக் கருதப்படும் பின்லந்து யூலியன் வங்கிக்குச் சொந்தமானகடன் அட்டை (Credit Card)யைக் கூட்டி தியாகராயநகர் நகை மாளிகை ஒன்றில் நகைகளை வாங்க முயற்சித்ததாகக் கூறப்படும் இலங்கையர் ஒருவரை மாம்பலம் பொலீஸார் கைது செய்தனர்.

28 வயதான சந்தேக நபரின் பெயர் முகமட் இம்னியாஸ் என்று சொல்லப்பட்டது. (ஏ)

யாழ். கல்வித் திணைக்களத்தில்
ஊழியர் பற்றுக்குறையால் வேலைகள் தாமதம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். கல்வித் திணைக்களத்தில் ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் வேலைகள் தாமதமாவதாகக் கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி தெரிவித்தார்.

வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (இ-3)

விவசாய அபிவிருத்திக்காக ஐந்து குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ் மாவட்டத்தில் விவசாய அபிவிருத்திக்காக ஐந்து சிறிய குளங்களை ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் புனர் அமைக்கவிருக்கிறது.

பல லட்சம் ரூபா செலவில் கைதடியில் மூன்று குளங்களையும் வேலணை, அம்பன் ஆகிய இடங்களில் தலா ஒவ்வொ குளத்தையும் இவ் அமைப்பு புனர் அமைக்கவிருக்கிறது.

மிக விரைவில் இவ்வேலைகள் ஆரம்பமாகும் என தெரிவித்த இவ் அமைப்பின் அதிகாரி, விவசாயிகளுக்கு பயன் அளிக்கும் வகையில் இரு விதிகளையும் புனரமைக்க இருப்பதாகத் தெரிவித்தார். (ச-3)

கவனிப்பாரற்ற நிலையில் தமிழ்க் கலவன் பாடசாலை

கல்முனை, ஜூன் 24

கல்லோயா குடியேற்றப் பகுதியான ருணமடு கொத்தணிப் பாடசாலைகளில் ஒன்றான 4 ஆம் கிராம வேப் படித்தொட்டம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆப் பகுதியிலேயே மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது.

மத்திய அரசின் கல்வி அமைச்சு கூட இது விடயத்தில் பாராமுகமாக இருப்பதாக இங்குள்ள பெற்றோர்கள் குறை கூறுகின்றனர்.

350 மாணவர்களுக்கு மேல் கல்வி பயிலும் இப்பாடசாலையில் தளபாட பற்றுக்குறையும் ஆசிரியர்கள் பற்றுக்குறையும் காணப்படுகின்றன.

13 பேர் கல்வி போதிக்கப்பட வேண்டிய இடத்தில் இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர்.

மற்றும் மலசலகூட வசதி, தண்ணீர் வசதி எதுவும்மில்லை. கட்டட வசதியுமில்லை.

மாணவர்களும், ஆசிரியரும், அதிபரும் கூட தரையில் இருந்தே கல்வி புகட்டி வருகின்றனர். (ச-84)

காயமடைந்த நால்வர்

சரவெட்டி, ஜூன் 24

வியாபாரிமூலையில் 20 ஆம் திகதி செல்வாய்க்கிழமை நடைபெற்ற சம்பவத்தில் நான்கு பொதுமக்கள் காயமுற்றார்கள்.

அல்வாயைச் சேர்ந்த மரியாம்பிள்ளை பீற்றர் 28வயது) கந்தசாமி பரமநாதன் (42வயது), நாராயணபிள்ளை சிவகப்பிரமணியம் (50 வயது) ஆகியோரும் பருத்தித்துறை செட்டித் தெருவைச் சேர்ந்த செல்வப்பா சுப்பிரமணியம் (50 வயது) என்பவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-70)

கூட்டம் பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 24

நாளை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் உள்ளூராட்சி ஆணையாளரால் ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது. (க-13)

கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 24

முன்னைநாள் குச்சவெளி அரசாங்க அதிபர் அமரர் க. பரராசசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக ''செற்-அப்'' முறையிலான கரபந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

யாழ். கரபந்தாட்டச் சங்கம் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று 24 ஆம் திகதி முதல் தினசரி பிற்பகல் 3.30 மணிக்கு இப் போட்டிகள் நடைபெறும்.

தினமும் நல்லூர் மக்கள் சனசமூகநிலைய மைதானத்தில் இரண்டு போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (உ-9)

யாழ். கல்வித் திணைக்களத்திலும், பாடசாலை, கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் ஊழியர்கள், சிற்றூழியர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் வேலைகள் தாமதமாவதாகக் கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி தெரிவித்தார்.

வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (இ-3)

இருளில் மூழ்கும் வைத்தியசாலை

பச்சிலைப்பள்ளி, ஜூன் 24

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அடிக்கடி இருளில் மூழ்கிறது. இதனால் நோயாளர்களும் ஊழியர்களும் பெரிதும் சஷ்டத்திற்குள்ளாவதாக அறியப்படுகிறது.

வைத்தியசாலைக்கு அருகில் முகாம் இருப்பதால் வெளிச்சம் இல்லாததால் வெளியில் நடமாட முடியவில்லை என வார்ட்டில் உள்ள நோயாளர் கவலை தெரிவிக்கின்றனர். (ச- 117)

வெள்ளி விழா

குருநகர் ஜூன் 24

குருநகர், றெக்கிளமேஷன் சனசமூக நிலைய வெள்ளிவிழா 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3- மணிக்கு நிலையத்தில் நடைபெறும்.

நிலையத்து தலைவர் திரு. ம. இம்மானுவல் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக புனிதயாகப்பர் ஆலய பங்குத்தந்தை பி. எம். இம்மனுவேல் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக டாக்டர் ஏ. எல். ஏப்பிரகாம் கலந்து கொள்வார்.

வெள்ளிவிழா மலர் வெளியிட்டு வைக்கப்படுவதை அடுத்து 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட மென்பந்து, கரப்பந்து பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டிகளில் வெற்றி பெற்ற கழகங்களுக்கும் இறுதிப் போட்டிகளில் கலந்து கொண்ட கழகங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

விழா இறுதியில் நிலையமாதர் முன்னணியினர் தயாரித்து வழங்கும் சிறுவர், சிறுமிகளின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும். (இ-51)

சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்
'அர்ச்சுனா' — மே-ஜூன் இதழ்

மாத இதழ் ரூபா 4. 00 ஆண்டுச் சந்தா ரூபா 55. 00

காசோலை அல்லது காசுக்கட்டளை ''நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்'' என்று எழுதப்பட்டு ''அர்ச்சுனா'' த. பெ. எண். 23, யாழ்ப்பாணம் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(C/2888)

பொது அறிவுப் போட்டி இல. 27

பரிசு பெறுபவர்கள் விபரம்:

முதலாவது பரிசு:-
நா. தம்பித்துரை
குடாரப்பு, நாகர் கோவில்.

இரண்டாவது பரிசு:-
செல்வன் வே. பவதாரணன்
வீரபத்திர கோவில் தெற்கு,
உடுப்பிட்டி.

மூன்றாவது பரிசு:-
பே. ஸ்ரீ துவாரகா பாலகிருஷ்ணா
33, சிலப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமானத்திற்குரிய நுரைவளம் கூடிய ''மில்க்வைற் நீல சோப்'' தற்பொழுது பெரிய அளவில் கூடிய நிறையுடன் விற்பனையாகின்றது.

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி ஔவையாரின் ''ஆத்திசூடி'' என்ற சிறந்த நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

சுஞ்சீவி

24 - 06 - 1989 சனிக்கிழமை

''சுடர்விளக்காயினும்தூண்டுகோலொன்று வேண்டும் அல்லவா''?

''உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம், உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு ஆதரவு கொடுப்போம்.''

100 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி உள்ளூர் கைத்தறியில் தயாரித்த அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

சம்மாந்துறைப் பகுதியில் இன்னும் பதற்றம்

அம்பாறை, ஜூன் 24

இன மோதல்களுக்குள்ளான சம்மாந்துறை - வீரமுனைப் பகுதிகளில் தற்பொழுது அமைதி நிலவுகின்ற போதிலும் பதற்றமும், அச்சமும் நீடித்து வருகின்றன.

பாதிக்கப்பட்ட முஸ்லிம் பகுதியான சம்மாந்துறைக்குள் தமிழ் க்கள் வந்து செல்லவும், வீரமுனைப் பகுதிக்குள் முஸ்லிம்கள் வந்து செல்லவும் தக்கதான சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை. (ஒ-14)

குறைந்த சம்பளம் ரூ. 2500 கோரி

12 தொழிற் சங்கங்கள் இணைந்து போராட்டம்

கொழும்பு, ஜூன் 24

தொழிலாளர் இணைப்பு இயக்கம் என்ற பெயரிலான பன்னிரண்டு தொழிற் சங்கங்களின் கூட்டணி, ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இயக்கம் ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறது.

ஐந்து கோரிக்கைகளில் ஒன்று ஊழியர் ஒவ்வொருவருக்கும் குறைந்தது மாதச்சம்பளமாக 2 ஆயிரத்து 500 ரூபா வழங்க வேண்டும் என்பதாகும்.

வாழ்க்கைச் செலவு வேகமாக உயர்ந்து செல்வதை உடனடியாக தடுக்க வேண்டும் என்றும் தொழிற் சங்கக் கூட்டணி வற்புறுத்துகிறது. (உ-எ)

பேசிப் பேசி-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 11 மணிக்கு தனது சாதனையை நிறைவேற்றினார். சமயம், தத்துவம், கலை உட்பட பல விஷயங்கள் பற்றிப்பேசிய திரு. ஜெயராமன் அரசியல் பற்றி மட்டும் பேசவில்லை.

சாதனை முடிவில் பிரபல தொழிலதிபர் திரு. வி. சந்தோஷம் திரு. ஜெயராமனுக்கு 10 ஆயிரம் ரூபா பணம் பரிசாக வழங்கினார். 'செந்தமிழ் முரசு' பட்டமும் அவருக்குச் சூட்டப்பட்டது (உ-எ)

IN TREASURED MEMORY
OF

BORN:
08.10.1972

CALLED TO REST
24-06-1988

ROHAN GAJANANDAN THAMBIAHPILLAY
ON HIS
First Death Anniversary

The tears in our eyes could be wiped away,
But the pain and ache in our hearts will always stay,
Though you are beyond our sight and care,
You are not beyond our love and prayer.

For ever loved and affectionately remembered
BY
Dada, Amma, Brothers and Sister,
Peri Amma and Peri Appa,
Uncles, Aunts, Cousins, Nephews and neices.

151 Hospital Road,
Jaffna. (C/2724)

நன்றி நவிலல்

பொன்னுத்துரை இரத்தினராசா
(சிவராசா, கோப்பாய்)
(யாழ் ஐக்கிய வியாபார சங்க உத்தியோகத்தர்)

திரு. பொ. இரத்தினராசா அவர்கள் 20-06-89இல் காலமானார். இறுதிக்கிரியைகள் 21-06-89 இல் கைதடியில் நடைபெற்றது.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், மற்றும் வேறு விதங்களில் உதவி புரிந்தோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், யாழ் வைத்தியசாலையில் ஒரு மாதகாலமாகத் தங்கி இருந்த போது வைத்திய சேவை அளித்த டாக்டர்களுக்கும், தாதிமார்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தி. பொன்னுத்துரையும்
குடும்பத்தினரும்.

கைதடி தெற்கு,
கைதடி. [11343]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, இல. 292/2 இல் உள்ள அச்சகத்தில் 24-06-1989 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இரு பஸ்கள் தீக்கிரை! சாரதி, இரு பயணிகள் பலி!!

புத்தளம் பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 24

புத்தளம் பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு பஸ்கள் எரிக்கப்பட்டன. ஒரு பஸ் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பயணிகளும், பஸ் சாரதி ஒருவரும் உயிரிழந்தார்கள்.

புத்தளம் கரிக்கட்டி என்ற இடத்தில் நேற்று முன்தினம் காலை இந்தியத் தயாரிப்பான டாட்டா ரக பஸ் ஒன்று ஆயுதபாணிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டது. பயணிகளை இறக்கிவிட்டே பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டது. இது தனியார் ஒருவருக்குச் சொந்தமானதாகும்.

சிலாபத்திலிருந்து சென்ற போக்குவரத்துச் சபை பஸ் உடப்பு பத்துஞறயாவில் வைத்து ஆயுதபாணிகளால் மறிக்கப்பட்டது. பஸ் நிறுத்தாமல் செல்லவே பஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதனால் பஸ் சாரதியும் இரு பயணிகளும் உயிரிழந்தனர்.

அதனையடுத்து பஸ்ஸில் இருந்தோர் இறக்கப்பட்டனர். பஸ் தீக்கிரையாக்கப்பட்டது. (உ)

வியாழனன்று முல்லைத்தீவு அல்லோலகல்லோலம்

முல்லைத்தீவு, ஜூன் 24

முல்லைத்தீவு வண்ணான்குளப் பகுதியில் வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் திடீரென துப்பாக்கி வேட்டுகள் கேட்டன.

இதைத் தொடர்ந்து முல்லைத்தீவு பட்டினம் அல்லோலகல்லோலப்பட்டது.

காலை 11 மணி வரை நாலா பக்கத்திலுமிருந்து துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. கடற்கரையில் மீன் தெரிவு செய்துகொண்டு நின்ற மீனவர்கள் மீன்களையும் வலைகளையும் விட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர்.

கருவாட்டு வியாபாரியான கருக்கும்பனையைச் சேர்ந்த மேரி அல்லது குட்டியம்மா (வயது 45) படுகாயமுற்று முல்லை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். வேறு உயிரிழப்புகள் பற்றித் தெரியவில்லை. (ஒ-92)

வயோதிபர் இல்லத்திற்கு பிரிகேடியர் விஜயம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

இந்திய அமைதிப்படையில் யாழ் பிரிவு கமாண்டர் பிரிகேடியர் என். எஸ்கில்நேற்று நண்பகல் கைதடியில் உள்ள வயோதிபர் இல்லத்திற்கு விஜயம் செய்தார்.

அங்குள்ள நிலைமைகளை சுற்றிப் பார்வையிட்ட பிரிகேடியர் இல்லத்திற்குஉணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகளை அன்பளிப்பாக வழங்கினார்.

வயோதிபர் இல்லத்தில் தங்கியுள்ளவர்களுடன் அவர் உரையாடினார்.

இல்லத்தில் தங்கியுள்ளவர் மருந்து வசதிகளை கவனிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைத் தாம் செய்வதாகவும்:

உடனடியாக கண் சிகிச்சை முகாம் ஒன்றை இல்லத்தில் நடத்துவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் பிரிகேடியர் அங்குள்ள வயோதிபர்களுக்கு உறுதியளித்தார்.

1987 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தாங்கள் கஷ்டமுற்ற வேளையில் அமைதிப் படையினர் வழங்கிய உதவிகளுக்கு வயோதிபர்கள் இந்தச் சந்திப்பின் போது நன்றி தெரிவித்தனர்.

இலங்கைப் பிரச்சினையை கட்சி விவகாரமாக்காதீர்!

கலைஞரிடம் மூப்பனார் கோரிக்கை

சென்னை, ஜூன் 24

இலங்கைத் தமிழர் பிரச்சினையை இரண்டு அரசியல் கட்சிகளுக்கு இடையேயான பிரச்சினையாகக் கருத வேண்டாம் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதியை, தமிழக சட்டசபை இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் கேட்டிருக்கிறார்.

தேசிய அணுகுமுறையுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண பிரதமர் காந்தி முயற்சித்து வருகிறார். அதற்கு உறுதுணையாக திரு. கருணாநிதி இருக்கவேண்டும் என்றும் திரு. மூப்பனார் கேட்டுக்கொண்டார். (உ-எ)

யாழ். ரயில் நேற்று இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 24

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நடத்தப்படும் வார இறுதி ரயில் சேவைகளில் வெள்ளிக்கிழமை சேவை நிறுத்தப்பட்டதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து பிரயாணிகள் ரயில் இராணுவப் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் வர ஏற்பாடாகி இருந்தபோதும், இறுதிநேரத்தில் இச் சேவை ரத்துச் செய்யப்பட்டது.

இன்று சனிக்கிழமை நடைபெறவிருக்கும் சேவை குறித்து நேற்றிரவு வரை முடிவு, எடுக்கப்படவில்லை. (ஒ-3-9)

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் 4 இளைஞர் சுட்டுக்கொலை!

கல்முனை, ஜூன் 24

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் ஒரே இரவில் நான்கு இளைஞர்கள் வீடுகளிலிருந்து கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த வார இறுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது. உயிரிழந்தோர் விவரம் வருமாறு:- திருஞானதரன் (வயது 22) செட்டிப்பாளையம், ரவீந்திரம் (வயது 21) களுதாவளை, ராஜா (வயது 24) களுதாவளை, நவம் (வயது 21) கோட்டைக்கல்லாறு.

செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த ஜீவன் (வயது 23) என்ற இளைஞர் படுகாயங்களுடன் மட்டக்களப்பு இந்தியப் படையின் வைத்திய பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை பாண்டிருப்பைச் சேர்ந்த இரு இளைஞர்கள் அன்னமலைப் பகுதியில் வைத்து கழுத்து வேறு, உடல் வேறாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

சிறிதரன் (வயது 26), ரவி (வயது 24) ஆகியோர் [illegible] (ஒ-84)

இன்று நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூன் 24

வவுனியா திலீபனின் 'எனது இராகங்கள்' என்னும் கவிதை நூலின் அறிமுக விழா இன்று பி. ப. 2 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருக்கிறது. (ஒ-3)

இன்றைய கருத்தரங்கு

குருநகர், ஜூன் 24

எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்குஒன்று இன்று சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலையமண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர், கலாநிதி வண. நீ. ம. சவரிமுத்து அடிகள் தலைமை வகிப்பார். (ஒ-51)

சீனி விலை உயர்ந்தது!

கொழும்பு, ஜூன் 24

சீனியின் விலை கிலோவுக்கு ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

இதுவரை 23 ரூபா 50சதமாக விற்ற ஒரு கிலோ சீனியின் புதிய விலை 24 ரூபா 50 சதம் என்று சீனி இறக்குமதியாளர் சங்கப் பேச்சாளர் சொன்னார். (உ-எ)

போக்குவரத்து வழமைக்கு?

யாழ்ப்பாணம், ஜூன் 24

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் இன்று முதல் வழமைக்குத் திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டதை அடுத்துபோக்குவரத்துச் சேவைகள் மட்டுப் படுத்தப்பட்டது தெரிந்ததே. (ஒ-10)

நெல்லியடியில் சுவரொட்டி

வடமராட்சி, ஜூன் 24

பூட்டிக்கிடக்கும் கடைகளை இன்று சனிக்கிழமை இறக்கும்படி நெல்லியடியில் சுவரொட்டிகள் காணப்பட்டன.

நெல்லியடியில் கடந்த 13 ஆம் திகதி வர்த்தகர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து அங்குள்ள கடைகள் திறக்கப்படவில்லை என்பது தெரிந்ததே. (ஒ-160)

தேடுதல்

வடமராட்சி, ஜூன் 24

நேற்று வெள்ளிக்கிழமை நாகர்கோவில், குடத்தனைப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் குடத்தனைச்சந்தி, அம்பன் வைத்தியசாலை, நாகர்கோவில் சந்தி போன்ற இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்கள். (ஒ-160)

ஜூலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள் அவர்களை ஆக்கிரமிப்பு இராணுவமாகவே கருதும்.

—இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா சொன்னார். (உ-எ)

அமைச்சர்களுக்கு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச்சட்டவிலக்கு இவர்களுக்கு வழங்க அரசு முடிவு செய்திருப்பதாக கொழும்புச் செய்தி தெரிவிக்கிறது. (உ-எ)

கொழும்பில்-..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்தம்பித்தன. இதனால்வர்த்தகர்கள் பெரிதும் பாதிப்படைந்தனர்.

இதேவேளை கொழும்பில் போக்குவரத்து நிலைமை நேற்று மிகமோசமான கட்டத்தை அடைந்தது.

அனேகமான அரச, தனியார் அலுவலகங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. இதனால் அலுவல்கள் யாவும் [illegible] (ஒ)

கொழும்பை நோக்கி பிரிட்டிஷ் நாசகாரி

கொழும்பு, ஜூன் 24

பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த நாசகாரிக் கப்பல் 'எச். எம். எஸ். பிரேவ்' இலங்கை வந்து கொண்டிருக்கிறது.

புத்தம் புதிய, நவீன வசதிகள் கொண்டஇந்த நாசகாரிக் கப்பல் வழமையான பயணத்தின் ஒரு கட்டமாகவே இலங்கை வருவதாக கொழும்பில் உள்ள பிரிட்டிஷ்தூதரகச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. (உ-எ)

மரண அறிவித்தல்கள்

முருகேசு வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் சுப்பிரமணியம் 22-06-89இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பவளம் அவர்களின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, மகாதேவா (மேற்கு ஜேர்மனி), இரத்தினசபாபதி, பாக்கியநாதன் (B. A, மேற்கு ஜேர்மனி), பரமேஸ்வரி, ஞானேஸ்வரி (பிரான்ஸ்), கமலேஸ்வரி, அசோக்குமார் (சுவிஸ்-லாந்து) ஆகியோரின் அருமைத் தந்தையும், தேவசகாயம் (ஓய்வுபெற்ற யா/ அரசினர் வைத்தியசாலை), இராஜேஸ்வரி, விக்னேஸ்வரி (B. A, மேற்கு ஜேர்மனி), குகதாசன் (பிரான்ஸ்), சிறிசுகுமார் (பிரான்ஸ்), தர்மரட்ணம் (துரைராஜா அசோசியேற்), றஞ்சினி (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (23-6-89) வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (978)

திரு. சிறில் F. சுவாம்பிள்ளை

திரு. சிறில் F. சுவாம்பிள்ளை (சம்பத்தரிசியார் கல்லூரி முன்னாள் ஆசிரியரும், தற்போதைய வின்ஸர் தியேட்டர் முகாமையாளரும்) 23-06-1989 அன்று அகால மரணமானார்.

இவர் திரு. A. சுவாம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற ஜொயிஸ், பவளம் (ஆசிரியை, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புக் கணவரும், விவித்தா, பிரபாகரன், நரேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரியன், தமயந்தி, வத்சலா ஆகியோரின் மாமனாரும், சரோ நிக்கலஸ், அதி. வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை (மேற்றிராணியார், திருகோணமலை - மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல், 25-06-1989 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கொஞ்சேஸ்ஸி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
71, 4-ம் குறுக்குத் தெரு, திருமதி சுவாம்பிள்ளை
யாழ்ப்பாணம். (981)

திரு. வேலுப்பிள்ளை முருகேசு

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வே. முருகேசு (றெயில்வே பென்சனர்) அவர்கள் 23-06-1989 அதிகாலை அகால மரணமடைந்துவிட்டார். அன்னார் மனைவியையும், நான்கு மகன்களையும், ஒரு மகளையும் விட்டுப் பிரிந்துவிட்டார். திரு. வே. நாகலிங்கம் (றெயில்வே என்ஜின் ரைவர், K. K. S.), திருமதி பொ. நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

65 வயது நிரம்பிய அவரின் பூதவுடல் 24-06-1989 இன்று சனிக்கிழமை தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பளை பொதுமயானத்திற்கு காலை 11-00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் யாவரும் ஏற்றுக்கொண்டு தகனக்கிரியைகளில் பங்குபற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
வே. நாகலிங்கம்

தெல்லிப்பளை றெயில்வே ஸ்ரேசனடி, (தமையன்)
ஆஸ்பத்திரி வீதி, தெல்லிப்பளை. (11348)

திரு. அப்பாப்பிள்ளை சின்னத்துரை

திரு. அப்பாப்பிள்ளை சின்னத்துரை (மலாயன் பென்சனியர்) காலமானார்.

அன்னார் டாக்டர் கணேசையாவின் அன்புத் தந்தையும், திரு. அ. கைலாஸபிள்ளை, காலம்சென்ற அ. அம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஷ்பராணி கணேசையாவின் அன்பு மாமனாரும், தாரிணி, நந்தீசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-06-1989 இன்று சனிக்கிழமை பிற்பகல் 12-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பளை குடும்பமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(11349) கி. விஸ்வநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 89, 90, 91
பொருளியல்
திரு. ஸ்ரீரங்கநாதன், திரு. உதயன்
கணக்கியல்
திரு. வன்னியசிங்கம்
வர்த்தகமும் நிதியும்
திரு. தேவா
புவியியல்
திரு. வேலாயுதபிள்ளை

சஞ்சிகை
24 - 06 - 1989 சனிக்கிழமை

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 89, 90, 91
இந்துநாகரிகம், தமிழ்
திரு. பாலா
அளவையியல்
திரு. சந்திரராஜா
அரசியல்
திரு. செபராஜா
வரலாறு
திரு. புஷ்பரட்ணம்
A/L 89 Paper Class நடைபெறுகின்றது.

கருத்துக் கலசம்

ஆலயங்களும் பாடசாலைகளும்

கிராமங்களில் கோவில்கள் பல புதிதாகக் கட்டப்படுகின்றன. மற்றும் பல புதுப்பிக்கப்படுகின்றன. அவற்றுக்குச் செலவு செய்யும் பெருந்தொகைப் பணத்தில் ஒரு பகுதியை யாவது அங்கிருக்கும் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவ வேண்டும். இப்படி ஒரு குரல் எழுந்திருக்கிறது.

தமிழ்ப்பகுதிகளில் கிராமந்தோறும் பல ஆலயங்கள்எழுந்து நிற்கின்றன. அவை எமது பிரதேசத்தின் ஆன்மீகப் பின்னணியை எடுத்தியம்புகின்றன.

ஆதியில் ஊருக்கு ஒரு கோயில் என்றும், அந்த ஆலயமே அப்பகுதி மக்களின் கல்வி கலாசார வளர்ச்சிக்கு வித்திடும் பிரதேசமாகவும் விளங்கியதைக் காண்கிறோம். இன்னமும் ஆலயங்களுக்கு அருகில் கல்விச்சாலைகளும், நூல்நிலையம், கலாசார மண்டபம், விளையாட்டு மைதானம் போன்றவையும் இருப்பதைக் காணலாம்.

காலப்போக்கில் ஒவ்வொரு குடும்பத்தினரும் பக்தியுடன் வணங்கி வந்த இடங்களில் ஆலயங்களைச் சிறிய அளவில் கட்டுவிக்கும் பழக்கம் வந்ததால் கிராமங்களில் கோவில்களின் எண்ணிக்கை உயர்ந்தது.

இப்போது பல கிராமங்களில் ஆலய விவகாரங்கள் ஊரை இரண்டுபடவைக்கும் அவலத்தைக் காண்கிறோம். ஆலயங்களில் ஒழுங்கான பூசைகள் நடக்காமல் சீரழியும் நிலையும் உண்டு.

எனவே போட்டி,குடும்பமோதல், நிர்வாகமோகம் என்பன கருதி கிராமங்களில் ஆலயங்களின் எண்ணிக்கை பெருகுவது உண்மையான ஆன்மீகக் குறிக்கோள்களுக்கு ஒவ்வாதது.

ஊருக்கு ஒரு சில ஆலயங்கள். அவை சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு, நித்திய பூசைகள் நடந்து ஆலயவழிபாடு சிறப்பாக நடந்தால் அதுவேபோதும். இருக்கும் கோவில்களை புனரமைத்து, புதுப்பித்து நெறிதழுவிய, கிரியா பூரணத்துவத்துடன் பக்திபரப்பி ஆன்மீக வாழ்க்கைக்கு மக்களை இட்டுச் செல்வதே பொருத்தம்.

ஆலயங்களுக்குச் செலவிடும் பணத்தில் ஒரு பகுதியையேனும்அந்தந்தக் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு, பாடசாலைகள் அபிவிருத்திக்கு ஆற்றுப்படுத்துவது பெரிதும் விரும்பத்தக்கது; வரவேற்கக் கூடியது. ஆலயங்களைப் போலவே பாடசாலைகள், கல்விச்சாலைகளும் ஊர்மக்களின் மேம்பாட்டுக்கு அவசியம்.

கல்வி வளர்ச்சி இல்லாமல் சமய வாழ்க்கையை சமூகத்தில் மலர்விக்க முடியாது. ஆகவே ஆலயங்களும், பாடசாலைகளும் இரு கண்களாக நோக்கப்படுதல் அவசியம்.

★

நாடு பொருளாதார வளம்பெற கடல் தரும் கனிமச் செல்வங்கள்

நாம் வாழும் புவிப்பரப்பில் மூன்றில் இரு பகுதி கடலாக இருக்கிறது. இருப்பினும் இவற்றிலுள்ள கடல் நீரின் கன அளவு புவியின் பரப்பில் எண்ணூறில் ஒரு பங்கே ஆகும்.

இச்சிறிய பரப்பில் பெருமளவு கனிமச் செல்வங்கள் பரந்து கிடக்கின்றன.

இன்றைக்கு மானுடம் அறிந்து உள்ள 106 கனிமங்களில் பெருமளவு நிலப்பகுதியில் காணப்படுகிறன்ன.

எனினும் இவற்றில் சிலவற்றைக் கடல் நீரில் இருந்து மட்டுமே பெற முடிகின்றது.

இத்தகைய கனிமங்களில் சுமார் 70 வரை கடல் நீரில் உள்ளன.

இவற்றில் சோடியம் மக்னீசியம், பொட்டாசியம் புரோமின் போன்றவை பெரும்பாலும் கடல்நீரில் இருந்து மின்னூற் பகுத்தல் மூலம் பெறப்படுகின்றன.

இவற்றைக் கடலில் இருந்து எடுப்பதற்கு ஆகும் செலவு நிலப்பகுதித் தாதுக்களில் இருந்து பெறுவதை விட மலிவானது.

உலக கடல்களில் உள்ள கனிமங்களில் சோடியம் உப்புக்கள் 77. 8 சதவீதமும், பொட்டாசியம் உப்புக்கள் 2. 2 சதவீதமும் மக்னீசிய உப்புக்கள் 9. 3 சதவீதமும் கல்சியம் உப்புக்கள் 3. 8 சதவீதமும் பிறசேர்மங்கள் 6. 9 சதவீதமும் உள்ளன.

புவியின் மேற்பரப்பில் கிடைக்கின்ற தாதுக்களைப் பிரிப்பதற்குத் தாதுவை அடர்ப்பித்தல், செறிலூட்டுதல், மாசுகளை நீக்குதல் போன்ற பல்வேறு செயல்களுக்குப் பின் தாது தூய நிலையில் பெறப்படுகிறது.

ஆனால், இத்தகைய எளிய முறைகளால் கடல் நீரில் இருந்து தாதுக்களைப் பிரிக்க இயலாது.

கடலில் உள்ள பல்வேறு அரிய வேதிப்பொருள்களில் தகுந்த தொழில்நுட்பங்கள் உடைய மிகச் சில மட்டுமே பிரிக்கப்படுகின்றன.

கடல்நீரில் இருந்து சோடியம் குளோரைட், மக்னீசியம், பொட்டாசியம், புரோமின் இவற்றை எடுக்கும் துறைகள் இலாபகரமானவை.

கடல்நீரைப் பாத்திகளில் செலுத்தி ஆவியாக்குவதால் சாதாரண உப்புக் கிடைக்கிறது. இம்முறையில் பெறப்படும் உப்பு ஆயிரம் கன மீற்றர் கடல் நீருக்கு 1.3 தொன் ஆகும்.

கடல்நீரை மின்னூற் பகுப்பதால் சோடியம் உலோகமும், சோடியம் ஹைரோக்ஸைட் போன்ற சேர்மங்களும் பெறப்படுகின்றன.

கடல்நீரில் மிகக் குறைந்த அளவே இருக்கிற மக்னீசியம், அதன் குளோரைட் மற்றும் சல்பேட் உப்புக்களாகக் காணப்படுகிறது.

மக்னீஷியம்

கடல்நீரில் சுண்ணாம்பு நீரைச் சேர்த்து மக்னீஷியம் ஹைட்ரோக்ஸைடாக மாற்றிய பின் அதில் இருந்து மக்னீஷியம் குளோரைட் பெறப்படும். மின்னூற் பகுத்தலினால் அதில் இருந்து மக்னீஷியம் பெறப்படுகிறது. இன்று உலக மக்னீஷிய உற்பத்தியில் சுமார் 40 சதவீதம் இவ்வாறு தான் பெறப்படுகிறது.

பிரிட்டன் தனது தேவையில் 50 சதவீதமும் அமெரிக்கா 80 சதவீதத்தையும் கடல் நீரில் இருந்து பெறுகின்றன.

கடல்நீரில் இருந்து பெறப்பட்ட முதலாவது கனிமம் புரோமின் தான்.

நிலப்பகுதியில் உள்ள இதன் சேர்மங்களில் இருந்து இதனைப் பிரிப்பது இயலாத ஒன்று.

கடல்நீரில் சிறிது அமிலம் சேர்த்து பின் அதன் வழியே குளோரினைச் செலுத்தி புரோமின் பெறப்படுகின்றது. உலக உற்பத்தியில் சுமார் 90 சதவீத புரோமின் கடலில் இருந்து பெறப்படுகிறது. இத்தகைய ஆலைகள் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், கனடா, ஆர்ஜென்டீனா ஆகிய நாடுகளில் உள்ளன.

அமெரிக்காவில் கலிபோர்னியோ, லூசியானா மற்றும் சோவியத்யூனியனில் உள்ள ஆழமான எண்ணெய்க் கிணறுகளில் காணும் உவர் நீரில் இருந்து அயோடின் பெறப்படுகிறது. இவை தவிர மிகச்சிறிய அளவில் கடலில் காணப்படும் 'மைக்ரோ கனிமங்' களான லிதியம், போரான், கந்தகம், தங்கம், யுரேனியம் இவற்றையும் கடலில் இருந்து பெற உலகநாடுகள் முயற்சி செய்து வருகின்றன.

ஜப்பானில்

ஜப்பானில் உள்நாட்டுக் கடற்கரையில் கடல்நீரில் இருந்து யுரேனியத்தை எடுக்கும் தொழிற்சாலை தினமும் 36 ஆயிரம் தொன் கடல் நீரை பயன்படுத்தி பத்து கிலோ யுரேனியத்தை உற்பத்தி செய்து வருகிறது.

சாக்கடல் (Dead Sea) பகுதியில் காணும் உப்புக் கரைசலில் இருந்து வணிக ரீதியில் பெருமளவில் பொட்டாசியம் உப்புக்கள் பெறப்படுகின்றன. அங்குள்ள பொட்டாஷ் மட்டுமே உலகின் தேவைகளை இன்னும் இருநூறு ஆண்டுகளுக்குப் பூர்த்தி செய்யமுடியும்.

ஆறுகள் கடலுடன் கலக்கின்ற கழிமுகங்களில் தெளிந்த வண்டல்கள் உருவாகின்றன. ஆறுகளில் கலந்து வரும் வண்டல்கள் கூழ்மக் கரைசல்களாகும். இவை கடல் நீருடன் கலக்கும் போது கடல் நீரில் உள்ள உப்புக்களால் வீழ்படிவமாக்கப்படும். இச்செயல் 'தோய்தல்' எனப்படும்.

இத்தோய்தலின் போது கடல் நீரில் உள்ள உப்புக்களும் கழிமுகங்களில் படிவதால் இவ்விடங்களில் கனிம வளங்கள் மிகுந்துள்ளன.

அவற்றில் முக்கியமானவை இல்மனைட், ரூட்டைல் சேர்க்கோன், மொனஸைட், மன்னஸைட், கரசிட்டரைட், டன்டலம், தங்கம், பிளாட்டினம் என்பன.

இலங்கையில் இல்மனைட்

இலங்கையில் கிழக்குப் பகுதியில் புல்மோட்டைப் பகுதியில் யான் ஓயா கடலுடன் சேருகிறது. அங்கு கடற்கரையில் இல்மனைட் கனிம வளம் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது இல்மனைட் ரூட்டைல், சேர்க்கோன், மொனஸைட் ஆகிய கனிம வளங்களையும் புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலை உற்பத்தி செய்கின்றன.

பெரும்பாலான கடலோரப் படிவுகள் உலகக் கடல்களின் வெப்ப மண்டலம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளிலே உள்ளன.

இல்மனைட், றூடைல், சேர்க்கோன் மொனஸைட் போன்ற தாதுக்களின் படிவுகள் கரையோரமாகவும் பல சமயங்களில் தமது முக்கிய மூல ஊற்றுக்களில் இருந்தும் கிடைக்கின்றன.

அபூர்வமாக உள்ள தங்கம், பிளாட்டினம், வைரம் இவற்றின் படிவுகள் கடல் மட்டத்தின் அடியில் தாம் தோன்றிய இடங்களுக்கு அருகிலேயே உள்ளன.

கனடாவில் நியூபவுண்ட்லாந்தின் கிழக்குக் கரையின் கடலடியில் உள்ள இருநூறு கோடி தொன் இரும்புத்தாதுவில் ஆண்டுக்கு சுமார் 30 லட்சம் தொன் எடுக்கப்படுகிறது.

இவ்வாறே பின்லாந்து வளைகுடா, ஜப்பானில் கையூஷு தீவு ஆகிய இடங்களிலும் இரும்புத் தாது எடுக்கப்படுகிறது.

இரும்புத்தாது

உலக இரும்புத்தாது உற்பத்தியில் ஒரு சதவீதம் கடலில் இருந்து பெறப்படுகிறது.

செம்பு, நிக்கல் இவை மிகக் குறைந்த அளவில் ஹட்சன் வளைகுடா, பிரிட்டனில் கார்னோல் தீபகற்பம் ஆகிய இடங்களில் கிடைக்கின்றன.

துருக்கியில் ஏஜியன் கடற்கரையில் பாதரசம் கிடைக்கிறது.

செங்கடலின் அடியில் ஒரு சில பள்ளங்களில் 'சிறப்புக் கனிமப் பொருள்' ஒன்று உள்ளது.

இதில் உலோகங்கள் அடங்கிய சூடான உவர் நீரும் வண்டல் மண்ணும் உள்ளன.

இந்த உவர் நீர் இரும்பு, மாங்கனீஸ், துத்தநாகம், ஈயம், தாமிரம், வெள்ளி, தங்கம் போன்ற கனிமங்கள் அடங்கியது.

இவற்றின் இருப்பு சுமார் 1 கோடி 30 லட்சம் தொன் ஆகும்.

இலங்கையிலும் தமிழ்ப் பகுதியைச் சுற்றி உள்ள கடல் வளமும் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டால் பொருளாதாரம் சிறக்க வழியேற்படும் அல்லவா!

★

கடலடியில் உள்ள சில முக்கிய கனிமங்கள் (% இல்)

கனிமம்	பசுபிக் கடல்	அத்லாந்திக் கடல்	இந்துமா கடல்
மங்கனிஸ்	24.20	16.30	15.40
இரும்பு	14.00	17.50	14.50
கோபால்ட்	0.35	0,31	0.25
நிக்கல்	0.99	0.42	0.45
தாமிரம் (செம்பு)	0.53	0.20	0.15
காரீயம்	0.10	0.10	0.07
சிலிக்கன்	9.40	11.00	9.40
அலுமினியம்	2.90	3.10	3.00

கனாக் கண்டேன் தோழி!

கருத்தொருமித்த காதலர்கள் பலநாட்களாக யாரும் காணாதபடி காதல் வாழ்க்கை நடத்தினர். இன்னும் களவு மணத்திலேயே காலம்போக்குதல் நன்றன்று என்று நாயகனும் நினைத்தான். நாயகியும் நினைத்தாள்.

இருவரும் வெளிப்படையாக மணந்துகொண்டு இல்லறம்நடத்த முடிவு செய்தனர். தலைவியின் தோழிக்கும் இச்செய்தி தெரியும்.

தலைவன் தலைவியைமணந்து கொள்வதற்கும், தனிக்குடும்பம்'நடத்துவதற்கும் பொருள் தேடப்பிரிந்துபோனான்.

தலைவிக்கு தலைவன் பிரிவு தாங்கமுடியாத துக்கம் தருவதுதான். ஆயினும் எல்லோரும் காண இல்லறம் நடத்தும் காலம் வாய்க்கப் போவதை எண்ணித் துக்கத்தை அடக்கிக்கொண்டிருந்தாள். துக்கமற்றவள்போலவே நடந்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்கும்போது ஒரு நாள் தலைவியிடம் என்றுமில்லாத ஒரு மாறுதல் உண்டாயிற்று. அவள் அகத்தில் முளைத்தெழுந்த துக்கம் முகத்திலே விளையாடிக்கொண்டிருந்தது.

வழக்கம்போல சிரித்துப் பேசாமல் முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டு இருந்தாள். நடைப்பிணமாக உலாவிக்கொண்டிருந்தாள். தலைவியிடம் ஏற்பட்ட இந்தத் திடீர் மாறுதலைக் கண்டாள் தோழி:

'தலைவியே..!ஏன் ஒருமாதிரியாக இருக்கிறாய்...?! என்றும் போல் இன்றில்லையே...! உன் உள்ளத்தில் ஏதோ கலக்கம் இருப்பதுபோல் தெரிகின்றதே...! திடீர் என்று இந்த மாறுதல் உன்னிடம் தோன்றியதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டாள்.

'தோழியே என் மாறுதலுக்கு காரணத்தைக்கேள்! நேற்றுவரையிலும் என் துக்கத்தை வெளியில் காட்டாமல் இருந்தேன். தலைவன் வரவை எதிர்பார்த்து மகிழ்ந்திருந்தேன். ஆனால் நேற்று இரவு ஒரு கனவு கண்டேன். கனவிலும் அது பொய்க் கனவு. அந்தப் பொய்க் கனவு என்னைக் கண்கலங்கவைத்து விட்டது'. பெருமூச்சுவிட்டபடி தொடர்ந்தாள்.

'பொய்புகழ்வதிலே வல்லவனான என் காதலன் இரவிலே வந்தான். என் உடலை அன்போடு அணைத்துக்கொண்டான். உண்மையிலே நிகழ்வது போன்ற இத்தகைய பொய்க்கனவு ஒன்றைக் கண்டேன். இக்கனவு என் அறிவைத் தடுமாறும்படி செய்து விட்டது. உடனே தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டேன். என்னைத் தழுவிக்கொண்ட தலைவன் என் படுக்கையில் இருக்கின்றானா என்று தடவிப் பார்த்தேன். அவனைக் காணவில்லை. வண்டுகள் விழுந்து கலங்கிய குவளை மலரைப்போல நான் கலங்கினேன். உடல் தளர்ந்தேன். இந்தப் பொய்க்கனவுதான் என் உள்ளக் கவலைக்கும், உடல் மாற்றத்துக்கும் கார

இலக்கியம்

ணம்' என்று தலைவி கூறினாள். இந்நிகழ்ச்சியைக் காட்டுவதே கீழ் வரும் பாடல். கேட்டிசின் வாழி தோழி...!

அல்கல்
பொய்வல் ஆளன்
மெய் உறல் மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனா
மருட்ட, ஏற்று எழுந்து
அமளி தைவந்தன்னே; குவளை
வண்டு படு மலரின் சாஅய்த்
தமியேன் மன்ற அளியேம்
யானே.

இப்பாடல் பாலைத் திணையில் வருகிறது. பாடலை கச்சிப்பேட்டு நன்னாகையார் என்னும் புலவர் பாடினார்.

—தமிழறிஞர் சாமி சிதம்பரனாரின் 'குறுந்தொகைச் செல்வம்' நூலில் இருந்து

பண்ணிசைக்கு இடம் கொடுத்த பண்பாடு

தமிழர் வாழ்விலும், தமிழ்மொழி வளர்ச்சியிலும் பண் இடம்பெற்றிருநத வரலாற்றுப் பெருமை பெரிது.

பண் என்பதற்குப் பல கருத்துக்கள் வழக்கில் நிலவுகின்றபோதிலும் அமைவு, சீர், செம்மை, இசைப்பாட்டு, நிறைநரம்புடையது என்பன முக்கியமானவை.

பண்ணுக்குப் பயன் இன்னிசை என்பர்.

விண்ணின் பயன் மழை போல, பண்ணின் பயன் இசை என்ப. இசையென்பதும் முத்தமிழ் வளப்பில் இயலையும் கூத்தையும் இசைவிக்கும் வகையில் நடுவணுள்ளதாகும்.

இசையும் தான் இணக்கம், இனிய ஒலி, ஐக்கியம்,பண்பு, பாட்டிசை என்றெல்லாம பரவும். இனி பண் என்பது பண்டைத் தமிழர் வாழ்வில் முக்கிய இடம் பெற்றிருந்தது.

பண்வல்ல பாணர்கள் பெருகி மதிப்புப் பெற்றிருந்தார்கள்.

பல்லவர் காலத்துப் பக்தி இலக்கியங்களில் பலவித பண்கள் மலிந்துள்ளன. பின்வந்த சோழர்காலத்திலும் பண் தலைநிமிர்ந்து இசைத்தது.

இசையும் கூத்தும் காமம் பயப்பனவென்று சமணும் புத்தும் அவற்றைக் கேட்டு முட்டும் கண்டு முட்டும் கொண்டு ஒதுக்கி வந்தனர்.

திருமுறை வளர்ச்சியாலும் தில்வியபிரபந்த வளர்ச்சியாலும் அவை பரவலாக ஆலயங்கள் தோறும் ஒலித்து வந்தன.

பண்ணோடு தேவாரம் முதலாய ஓதவல்லாருக்கு இராசராசசோழப் பேரரசன் போதிய பொன்னும் நெல்லும் குடியிருப்பு வசதிகளும் கொடுத்திருந்தான்.

தேவார முதலிகள் வழியில் வந்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு தந்தவர்கள் பண் நிரம்பிய பாடல்களையே பாடியருளினார்கள். முன்னர் தேவாரப் பதிகங்களில்லாத சாளரபாணி திருவிசைப்பாவில் ஒலிக்கிறது.

பண்ணில் தோயப்பொருள் முடிப்புக்கட்டிப் பாடும் பாவலர்களையே எங்கள் யாழ்ப்பாணத்து ஆரிய சக்கரவர்த்திகள் பெரிதும் விரும்பினார்கள்.

அவர்கள் பண்ணில் தோயவும் பொருள் தழுவும் பாடுபவர்களுக்குப் பொன்னை எண்ணி எண்ணி முடிச்சாகக் கட்டி ஈந்தார்கள்.

யாழ்ப்பாணம் பண்ணினால் பயர் பெற்றது. யாழிசை, வீணாகான ஒலித்த நாடு. ஐம்பதாண்டுகளுக்கு முன், குப்பிளான் செல்லத்துரை தூத்துக்குடியில் தமிழ்நாட்டுப் பண்ணார்ந்த பாடல் வல்லாரைவென்று பொற்பதக்கம் பெற்று வந்தவர்.

நூறுண்டுகளுக்கு முன் நாவலர் அவர்கள் சுப்பிரமணிய ஓதுவா மூர்த்திகளை இங்கே வரவழைத்து வந்தவர்.

குப்பிளான் செந்திநாதஐயர் அவர்கள் தமது பன்முகத்துவத் தன்மைகளுள், சாரங்கி வாத்தியம் இசைத்து மிடற்றோசை நயம்பழுத்தத் தேவாரம் பாடி நாவலர் அவர்களின் சிவபூசை வேளையைச் சிறப்பித்தவர்.

நாங்கள் பறங்கி வாத்தியத்தைப் பெரிதெனப் பழகி மெல்லிசை என்ற போர்வையில்பண்ணைப் புறக்கணித்துப் பாடி மகிழ்ந்தோம்.

பாட்டுக்குருகும் பரமசிவன் எங்கள் பரமேஸ்வரன் எங்கள் மேற்கொண்ட தடங் கருணைப் பெருங்கடலில் தோய்ந்த நம்மவர் இன்று பண்ணினுக்கு ஏற்றம் கொடுத்துப் பீடமேற்றி நம் நம்பியர், நங்கையர் நாளும் அதனைப்பழகி ஓதப் பெருவாய்ப்புத் தந்துள்ளார்.

எம்பெருமான் திருவருள் எல்லோரையும் வாழ்விப்பதாக. இராமநாதன் கல்லூரி கூடத்துக்கூடாக இசைத் தமிழை இயக்கும் பண் எங்கும் பரவுவதாக.

— மில்க்வைற் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையை மாற்றிய போதை!

சிறுகதை

- தர்மலிங்கம் சிவனேசன் -

அந்நிசாயும் நேரம் தெருவில் நின்ற மனித உருவங்கள் கலைந்து மணி 7 அடித்து நின்றது. களைப்பு எடுத்த அவள் கண்களுக்கு டேவிட்டை இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லை.

அவன் எங்கு சென்றிருப்பான்?

சில தினங்களாக டேவிட் இப்படித்தான் வீட்டுக்கு நேரகாலத்துடன் வருவதில்லை. எங்கோ அலைகிறான், அவனைப் புரிந்து கொள்ள முடியவே இல்லை. 'தந்தை இருந்தால் இப்படி எல்லாம் திரிவானா?' டேவிட்டின் தாய் விடும் பெருமூச்சு அந்த இரவின் நிசப்தத்தைக் கலைத்தது.

ஓ, இளிமையானவர், பண்பாளர். அவரின் மறைவு டேவிட்டின் தாயால் சகிக்க முடியவே இல்லை. அதன் பிறகுதான் டேவிட்டின் இந்தப் புதுமையான நடைமுறைகள் பழக்கவழக்கங்கள்.

இந்துவாக இருந்து கிறிஸ்தவனாக என்னை மணந்து சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக இருந்த அந்தத் திருமணம், உறவினர், சமூகம் எல்லாவற்றிலும் ஏற்பட்ட விரிசல் இவை எல்லாவற்றையும் ஏற்ற அந்தத் துணிவு, தியாகம்,

இவற்றின் பிராயச்சித்தமாகப் பிறந்த டேவிட், வாணி, இவை எல்லாவற்றையும் கால்டியில் வைத்து நசித்து விடுவானோ?

தந்தையின் சாடை சிறிது கூட இவனிடம் இல்லையே ஏன்?

டாண், டாண் எனக் கடிகாரம் அடித்து மணி பத்தைக் காட்டியது. வீதியில் இடையிடையே வாகனங்கள் செல்லும் ஓசை தவிர சத்தம் சிறிதும் இல்லை. ஆனால் டேவிட்டை இன்னும் காணவில்லை.

பெற்றமனம் தவியாய்த் தவித்துக் குமுறியது ஆனால் டேவிட்டின் தாயால் சகிக்க முடியாத ஏக்கம், பரபரப்பு. இவற்றை எல்லாம் டேவிட் புரிந்துகொள்ள முடியாதவனாகவே இருக்கின்றான்.

இரண்டு மூன்று நாட்களாக தங்கை வாணியுடன் கூடப் பேசுவதில்லை. ஏன் பெற்ற தாயிடம் கூடப் பேசுவதைக் குறைத்து விட்டான்.

தங்கை வாணி மட்டும் இடையிடையே அண்ணன் வந்து விட்டானா என்று டேவிட்டின் அறையை சற்றுக் கவனிப்பாள். மற்றும்படி அவள் படிப்பில் ஆழ்ந்து விடுவாள். வாணியின் அன்பு, தாயின் அன்பு இவற்றுக்கு எல்லாம் அப்பாற்பட்டு அவன் எப்படி மாறினான்?

ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. டேவிட் தன்னையே இழந்துள்ளான். ஏதோ ஒரு பிரச்சினை அல்லது விடுபடமுடியாத தீய பழக்கத்தில் அவன் சிக்கித் தவிக்கிறான்.

எது எவ்வாறு இருப்பினும் அவள் மனத்தில் இந்த நினைப்பை ஒரு கணிப்பீட்டு அடிப்படையிலேயே வைத்து இருந்தாள்.

இடையிடையே வீதியில் விரைந்த வாகன இரைச்சல் கூட அடங்கி விட்டன. கடிகாரம் மணி பதினொன்று காட்டியது. ஆனால் டேவிட்டை இன்னும் காணவில்லை. அவன் எங்கு சென்றான்.

தெரு நாய் ஒன்று தீவிரமாகக் குரைத்துக் கொண்டு ஓடி இரவின் அழகான அந்த அமைதியைக் குழப்பியது. நாய் யாரைக் கண்டு குரைக்கிறது. யாரோ நாயை விரட்டுகிறார்களா?

அது ஏன் பீதியுடன் ஓடுகின்றது?

ஒருவேளை டேவிட்தான் வருகிறானோ?

காய்ந்து விழுந்த சருகுகளில் கால்ப்பகுதியும் சரக், சரக் என்ற சத்தம். இந்த நேரத்தில் டேவிட்டாகத்தான் இருக்கும்.

டக், டக்... அவனின் முறட்டுக் கரங்கள் கதவில் அவசரமாகப் பதிந்தன.

சீ இவன் ஏன் முரட்டுத் தனமாகக் கதவைத் தட்டுகிறான். மனசு இல்லாதவன்... நாலு வீட்டுக்கு இடைஞ்சலாகக் கூப்பாடு செய்கிறானே!

கதவைத் திறக்காட்டி உடைத்து விடுவான் முரடன். அவளின் கைகள் பதற்றத்துடன் கதவைத் திறந்தன.

ஏய் டேவிட் ஏன் இவ்வளவு நேரம்? அவளின் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை. அவனின் கண்கள் சிவந்து உதடுகள் ஏதோ உளறினான்.

இவன் என்ன சொல்கிறான்?

டேவிட் உனக்கு என்ன பிடித்து விட்டது? ஒழுங்காக வாரிவிடப்படாத தலையை மீண்டும் தன் கைகளால் கிளறிய டேவிட், நேரே தன் அறையின் கட்டிலில் விழுந்தான்.

தாயின் வேதனை, தங்கையின் விசும்பல் அவனைப் பாதிக்கவில்லை. அவன் அபாரமான எண்ணங்கள் இனம் புரியாத மயக்க நிலை, பிரமை கலம், தீயபழக்கம் செயல் இவற்றின் முன் தாய், தங்கை பாசம், கௌரவம், அந்தஸ்து, பரம்பரை நடைமுறைகள், பழக்கவழக்கம் எல்லாம் என்ன செய்துவிட முடியும்.....?

'டேவிட் சாப்பிடவா'..... டேவிட் சாப்பிட மறுத்து விட்டான். இவன் ஏன் சாப்பிட மறுக்கிறான்? வெளியில் சாப்பிட்டு விட்டானோ...?

கேள்விகள் எல்லாம் அழுகையாக மாற அவன் அறையில் சிறிதுநேரம் நிற்கக் கூடப் பிடிக்காமல் வெளியேறினாள்.

டேவிட் சிறிய வயதில் வளர்ந்தமுறை அவனின் இன்றையநிலை எல்லாம் நினைவில் மாறிமாறி வந்தன.

அவன் சிறு வயதில் பாடசாலை செல்லும் அந்தக் காட்சி இன்னும் அவள் மனக்கண் முன் ஆடும். பாடசாலை விட்டு மாலை திரும்பியவுடன் அன்று படித்த பாட்டுக்களை எல்லாம் ஒன்றும்விடாமல் படித்துக் காட்டுவான்.

தாளம்போடுவான், சிரித்துக் கும்மாளம் போடுவான். தந்தையின் சாரில் கடற்கரைக்கு உல்லாசமாகப் போவான் ஆனால்,

தந்தையின் சொல்லுக்கு மறு பேச்சுப் பேசமாட்டான்.

அவனின் கண்டிப்பு, அன்பு எல்லாவற்றுக்கும் அடங்கி நடந்த டேவிட் அவர் மறைவின்பின் நினைத்துப்பார்க்க முடியாதவாறு எதிர்மாறாக மாறிவிட்டான்.

கண்களில் வடிந்த கண்ணீர் உவர்ப்பாக வாயில்பட்டது.

எங்கோ இராக்குருவி ஒன்று அவலமாகக் கத்தியபடி வானத்தின் ஒரு மூலையில் இருந்து மறு மூலைக்குப் பறப்பதுபோல் இருந்தது.

ஓ. பிரமையோ? உண்மைதான் இராக்குருவி தான் அதன் அலறல் அவள் மனதில் சிறிது பயத்தை ஊட்டியது.

அது என்ன சத்தம்? டேவிட் ஏன் இன்னும் தூங்கவில்லையோ? விளக்கை அணைத்து விட்டு அவன் என்ன செய்கிறான்?

தண்ணீர் குடிக்க எழுந்தாள். விளக்கை எரியவிட்டுத் தண்ணீர் எடுக்கலாமே? இவன் ஏன் இருட்டில் தடுமாறுகிறான்?

சீ... இவனுக்கு என்ன பிடித்துவிட்டது?

நாட்களின் நகர்வு டேவிட்டை பலவாறு மாற்றி இருந்தன. முகம் ஒட்டி உலர்ந்து களையிழந்து இருந்தன. துருதுருவென்ற கண்கள் கவர்ச்சிமங்கிக் குழி விழுந்து இருந்தன.

உடல் நன்றாக இளைத்துத் தளர்ந்திருந்தான். அவன் பேவசுதுகூட விளங்கவில்லை.

சொல்லுக்கும், செயலுக்கும் பலமாறுதல்கள் கோபம், எரிச்சல், முரட்டுத் தனம் எல்லாம் அவனுக்கு மாறி மாறிவரும். தன் உடைகளைக் கூட அவன் துப்பரவாக வைத்திருப்பதில்லை. அவனுக்கு அருகில் ஒரு வாடை வீசும். தலை எண்ணெயின்றி பறட்டையாக வளர்த்திருந்தான்.

டேவிட்டின் இந்த நிலைக்கு என்ன காரணம்?

இவற்றுக்கு எல்லாம் விடையாக பக்கத்துவீட்டுப் பாத்திமா சொன்ன அந்தச்சொல்.

டேவிட்டின் தாயால் இவற்றை எல்லாம் சகிக்க முடியவில்லை என்மகன் இல்லை, இல்லை...

அவன் நல்லவன். அவனுக்கு இந்தப்பழக்கம் நிச்சயமாக இருக்காது. அவளின் மனச்சாட்சி அவளை விடுவதாக இல்லை. அந்த வார்த்தை இல்லை அவர்கள் பொய்சொல்கிறார்கள் என்மகன் நல்லவன்.

ஆனால் பாத்திமாவின் அந்த வார்த்தை திரும்பத் திரும்ப அவள் காதில் கேட்டவண்ணமே இருந்தது.

'இஞ்ச பாருங்கம்மா...' உங்கமகன் நடத்தை ஒன்றும் சரியில்லை என்மகனைக்கூடக் கெடுத்து விடுவான்போல் இருக்கு...'

டேவிட் போதை மருந்து பாவிக்கிறானாம். என்மகன் தான் சொன்னான். இருவரும் இனிப் பழகக்கூடாது என்று என்மகனைக் கண்டிச் சுச் சொல்லிப் போட்டேனம்மா...

உங்கமகன் என்னவேண்டுமானாலும் பழகியிருக்கலாம், ஆனால் என்மகனோட பழகி அவனையும் அழிக்கக்கூடாதம்மா...

ஊசியாக ஊடறுத்த அவனின் ஒவ்வொரு சொல்லும் அவளைத் திகைப்படையவைத்தது.

'அம்மா கடைசியாகச் சொல்லிவிடுறேனம்மா உங்கமகன் டேவிட், என்மகனுக்கு போதைமருந்து ஏற்றப்பழக்கி இருந்தா நான் நிச்சயமாக உயிரோடு இருக்கமாட்டேன் அம்மா...'

பாத்திமாவின் சொற்கள் ஒவ்வொன்றும் அவளை நடைப்பிணமாக்கியது.

ஐயோ! பாத்திமா நீ என்ன சொல்கிறாய்... தலையிலிருந்து உள்ளங்கால்கள்வரை விறைப்பதுபோன்றஉணர்வுக்கால்கள் தரையில் நிற்கமறுத்தன.

டேவிட்டின் புதுமையான நடைமுறைக்கும் இந்தப் போதை மருந்துதான் காரணமோ?...'

அவளுக்கு கண்கள் இருண்டு வருவதுபோல் இருந்தது. அவளை யாரோ தாங்கிப்பிடிப்பது போல் ஒரு உணர்வு.

யாராக இருக்கும் வாணியா? வாணியின் உருவம் கலங்கி அவன் கண்முன் தெரிந்தது.

அம்மா என்ன செய்யுது கண்ணத்திறந்து பாருங்கம்மா...'

வாணியின் படபடப்பு அழுகை இவற்றுக்கு ஆறுதல் சொல்ல அங்கு யாரும் இல்லை. அண்ணன் டேவிட் கூட இரவு நெடு நேரமாகியும் வீடு திரும்பவில்லை.

சற்றுமுன் சென்ற பக்கத்து வீட்டுப் பாத்திமாவை கூடக் கூப்பிடலாம். ஆனால் இந்தப் பயங்கர இருட்டில் வாணியால் செல்ல முடியவில்லை.

வாணி ஆற்றாமையால் அழுகிறாள். வாணி நீ அழக் கூடாது...'

டேவிட் வந்துவிட்டானா?...

'இல்லை அம்மா...' வாணியின் பதில் அவளை பலவாறு வருத்தியது. மனம் ஓ என ஓலமிட்டு அழுதது.

காலையில் சென்ற டேவிட் இரவாகி இன்னுமா வரவில்லை. டேவிட் நீ எப்பொழுது வருவாய்?'

உன்னை வளர்த்து அன்பு செலுத்திய உன் தாயைக் கூடப்பார்க்க வரமாட்டாயா?...

அவன் நிச்சயம் வருவான். எனக்கு ஆறுதல் சொல்லுவான். டேவிட் உன்னைப் பிடித்து ஆட்டும் அந்தப் போதைப் பழக்கத்திற்கு ஒரு முடிவுகட்டுவேன் என்று சத்தியம் செய்து தருவான் என்மகன்...

'கீறிச்' கதவுப் பிணைச்சல் அவலமாகக் கத்தியது. விரைவாகத் திறந்த கதவு மறுசுவரில் அடித்து நின்றது. டேவிட் இப்படி வேகமாகத் திறப்பது சாதாரணம்தான். டேவிட் எப்பொழுதும் நிற்பதுபோலவே நின்றான்.

அவன் கண்கள் சிவந்து எதையும் செய்யத்தயாராக இருந்தான். அன்பு, கடமை இவற்றுக்கு அப்பாற்பட்டு அவன் ஒரு மனித மிருகமாகவே இருந்தான்.

'அண்ணா அம்மாவைப் பாத்தியா?...'

வாணியின் அழுகை அவனை ஒன்றும் செய்யவில்லை. அவன் உண்ட போதை மருந்துக் குளிசை அவனைப் பிற உலகில் சஞ்சாரம் செய்யவிட்டு இருந்தன.

யார் யாரோ வீட்டு நகைகளை விற்று வாங்கும் போதை மருந்துகள் அவனுக்குக் கொடுக்கும் இந்த அற்ப சுகத்தில் தாயின் அந்தக் கடைசி மரணப்படுக்கையைக்கூட அவன் பெரிதாக எடுத்து நோக்கவில்லை.

அழுகை இவற்றுக்கு ஆறுதல் சொல்ல அங்கு யாரும் இல்லை. அண்ணன் டேவிட் கூட இரவு நெடு நேரமாகியும் வீடு திரும்பவில்லை.

சற்றுமுன் சென்ற பக்கத்து வீட்டுப் பாத்திமாவை கூடக் கூப்பிடலாம். ஆனால் இந்தப் பயங்கர இருட்டில் வாணியால் செல்ல முடியவில்லை.

வாணி ஆற்றாமையால் அழுகிறாள். வாணி நீ அழக் கூடாது...'

டேவிட் வந்துவிட்டானா?...

'இல்லை அம்மா...' வாணியின் பதில் அவளை பலவாறு வருத்தியது. மனம் ஓ என ஓலமிட்டு அழுதது.

காலையில் சென்ற டேவிட் இரவாகி இன்னுமா வரவில்லை. டேவிட் நீ எப்பொழுது வருவாய்?'

உன்னை வளர்த்து அன்பு செலுத்திய உன் தாயைக் கூடப்பார்க்க வரமாட்டாயா?...

அவன் நிச்சயம் வருவான். எனக்கு ஆறுதல் சொல்லுவான். டேவிட் உன்னைப் பிடித்து ஆட்டும் அந்தப் போதைப் பழக்கத்திற்கு ஒரு முடிவுகட்டுவேன் என்று சத்தியம் செய்து தருவான் என்மகன்...

'கீறிச்' கதவுப் பிணைச்சல் அவலமாகக் கத்தியது. விரைவாகத் திறந்த கதவு மறுசுவரில் அடித்து நின்றது. டேவிட் இப்படி வேகமாகத் திறப்பது சாதாரணம்தான். டேவிட் எப்பொழுதும் நிற்பதுபோலவே நின்றான்.

அவன் கண்கள் சிவந்து எதையும் செய்யத்தயாராக இருந்தான். அன்பு, கடமை இவற்றுக்கு அப்பாற்பட்டு அவன் ஒரு மனித மிருகமாகவே இருந்தான்.

'அண்ணா அம்மாவைப் பாத்தியா?...'

வாணியின் அழுகை அவனை ஒன்றும் செய்யவில்லை. அவன் உண்ட போதை மருந்துக் குளிசை அவனைப் பிற உலகில் சஞ்சாரம் செய்யவிட்டு இருந்தன.

யார் யாரோ வீட்டு நகைகளை விற்று வாங்கும் போதை மருந்துகள் அவனுக்குக் கொடுக்கும் இந்த அற்ப சுகத்தில் தாயின் அந்தக் கடைசி மரணப்படுக்கையைக்கூட அவன் பெரிதாக எடுத்து நோக்கவில்லை.

அண்ணா... வாணியின் அந்தக் கடுகடுப்பான குரல்... நீ நீ ஒரு மிருகம், பிசாசு, ஒரு கொலைப்பிறவி...

கடுமையான வார்த்தைகள் அவள் வாயில் இருந்து வெளிவந்தன.

ஆனால் டேவிட் சுரிக்கிறான். தன்னுள் ஏதோ பிதற்றுகிறான். வாணியின் இந்தக் கடும் சொற்கள் அவன் காதில் ஏறவில்லை. தன்னை மயக்கும் போதை மருந்து தனக்கு தானே ஏற்றும் ஊசிமருந்துகள்தான். அவனுக்கு இன்னும் நினைவாக இருந்து மீண்டும் அவன் சிரிக்கிறான். சிரித்தவண்ணமே இருக்கிறான்.

டேவிட்டின் தாய் தன் மகனின் அந்தப் போதைச் சிரிப்பை பார்த்தவண்ணமே சிறுகச் சிறுக கண்களை மூடுகிறாள்.

அவள் இறுதியாகவே கண்களை மூடுகிறாள். டேவிட்டினால் இதை அறியமுடியவில்லை. அறியும் நிலையில் அவன் இல்லை.

காரணமின்றிப் பேசுகிறான். பொருள்களை முரட்டுத்தனமாகத் தரையில் வீசுகிறான்.

டேவிட்டும் தயாராகிவிட்டான் சாவின் வரவை எதிர்பார்க்க.

ஆனால் வாணியின் வாழ்க்கை? அவள் எதிர்காலம்...?

வாணி அழுகிறாள்... தன் எதிர்காலம், தனிமையை நினைத்து அழுகிறாள். ★

(யாவும் கற்பனை)

ஏக்கங்கள்

ஏ! நந்தவனத்துக்குயிலே
நீ முகாரியை
உன் முந்தானையில்
முடித்து வைத்து
கீதம் இசைப்பது ஏன்...?

நான் என்ன
பூப்பறிக்கவந்த
திருடனா அல்லது
நந்தவனத்தையே
அழிக்கவந்த புயலா?
என்னைப் பார்த்ததும்
நீ முகத்தைத்
திருப்புவது ஏனோ...?

உன் ஏக்கங்களை
என்னுடன் பரிமாறு!
ஏனெனில்
நான் உன்னைமட்டுமல்ல
இந்த நந்தவனத்தையே
காக்கவந்த காவலன்.

—குப்பிளான் ஜெகன்

தண்டனை

விதிபிலே
சென்றவளை
விழி எடுத்துப்
பார்த்து விட்டேன்.

அதற்கு
தண்டனை
படுக்கையிலே
விழி—
மூட
முடியாமல்
வாடுகின்றேன்.

— சாவ. சண்முகதாசன்

வீண் விரயங்கள்...

காதலர்களே!
சற்று கவனியுங்கள்!!
காதலிப்பவர்கள்.....
எல்லாம்
சிரிப்பவர்கள்தான்.
ஆனால்,
சிரிப்பவர்கள்.....
எல்லாம்
காதலிப்பவரல்லர்.
கவனிக்காவிடின்!
உங்கள்
கனவுகள்.....
கற்பனைகள்.....
''வீண் விரயங்கள்''....

— ராஜேந்திரன்

வானத்து நட்சத்திரங்கள்

தூரத்தில் மின்னும்
வானத்து நட்சத்திரங்கள்
சந்தோஷத்திலா
கண் சிமிட்டுகின்றன?
இல்லை இல்லை
அவை பூவுலகில்
நல்ல உள்ளங்கள் தேடி,
வெளிச்சம் போட்டுப்
பார்க்கின்றன.

சாந்தி

விண்வெளியில் அணு உலைகள்

உலகெங்கிலும் அணுமின் நிலையங்கள் – அவற்றில் அடங்கிய அணு உலைகள் காரணமாக மவுசு இழந்து வருகின்றன.

பல நாடுகளிலும் மக்கள் குறைந்தபட்சம் தாங்கள் வசிக்கும் பிராந்தியங்களில் அணுமின் நிலையங்களை அமைக்கக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க வேறு புறத்திலிருந்து புதுப்பிரச்சினை முளைத்துவருகிறது. அதாவது உலகில் மக்கள் அனைவரின் தலைக்கும் மேலாக அணு உலைகள் பறக்கத்துவங்கியுள்ளன.

இந்தப் 'பறக்கும் அணுஉலைகள்' பூமியைச் சுற்றுகிற செயற்கைக்கோள்கள் சிலவற்றில் இடம்பெறுகிறவையாகும்.

பொதுவில் அணு உலை இடம்பெறுகின்ற செயற்கைக் கோள்கள் வானிலிருந்து வேவுபார்ப்பவையாகும்.

செயற்கைக்கோள்களில் இடம்பெறுகின்ற அணு உலைகள், அணுமின் நிலையங்களில் இடம்பெறுவது போன்ற பெரிய அணு உலைகள் அல்ல என்பது வாஸ்தவமே.

எனினும் என்னதான் சிறியதாக இருந்தாலும் அவையும் அணுசக்திப் பொருள்கள் அடங்கியவையே.

அந்தவகையில் தலைக்கு மேலே பறக்கின்ற அணுஉலைகள் நிச்சயம் கவலையை உண்டாக்குபவையே.

கீழே பாய்ந்த அணு உலை

பூமியைச் சுற்றுகின்ற செயற்கைக்கோள் ஒன்று ஏதோ காரணத்தால் நிலை குலைந்து கீழ்நோக்கி இறங்க முற்பட்டு துண்டு துண்டாக உடைந்து பூமியில் விழுவதாக வைத்துக் கொள்வோம்.

அப்படிப்பட்ட செயற்கைக் கோளில் இருக்கிற அணு உலை சிதைந்து பூமியில் துண்டு துண்டாக விழுந்தால் அதனால் பாதக விளைவுகள் ஏற்படாதா என்று கேட்கத் தோன்றும்.

உண்மையில் அப்படிப்பட்ட சம்பவம் ஒன்று 1978 ஆம் ஆண்டில் நடந்தது. ரஷ்யாவின் காஸ்மோஸ-954 செயற்கைக்கோள் நிலை குலைந்து பூமியை நோக்கி இறங்கி காற்றுமண்டலத்தில் நுழைந்ததும் தீப்பற்றி எரிந்தது.

அதில் அடங்கியிருந்த சிறிய அணு உலையும் எரிந்து போயிற்று. எரிந்து போன பொருள்கள் கனடா நாட்டின்மீது வந்து விழுந்தன.

நல்லவேளையாக அவை கனடாவின் வடகோடியிலே நடமாட்டமற்ற பனி மூடிய பிராந்தியத்தில் விழுந்ததால் யாருக்கும் தீங்கு ஏற்படவில்லை.

எனினும் அப்போது இச்சம்பவம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. விண்வெளியில் அணு உலைகள் இடம் பெறக்கூடாது என எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அணு உலைகள் அடங்கிய ரஷ்ய செயற்கைக் கோள் ஒன்று நிலைகுலைந்து பூமியைச் சுற்றியபடி மெல்ல மெல்ல கீழ்நோக்கி நகர ஆரம்பித்தபோது அது பூமியில் எங்காவது வந்து விழலாமோ என்று அச்சம் கிளம்பியது.

அது எப்போதும் பூமியில் வந்து விழக்கூடும் என்பது பற்றி மேற்கத்திய நாடுகளின் பத்திரிகைகளில் ஹாஷ்யங்களும் உலவின. எனினும் அப்படிப்பட்ட விபரீதம் எதுவும் ஏற்படவில்லை.

ஏற்கனவே ஏற்பட்ட ஓர் அனுபவம் காரணமாக ரஷ்யர்கள் இவ்விதச் செயற்கைக் கோள்களில் தக்க மாறுபாடுகளைச் செய்துள்ளனர் என்பதே அதற்குக் காரணம்.

அமெரிக்கர்கள் பூமியை நெருங்க முற்பட்டபோது அதில் அமைந்த தானியங்கி பாதுகாப்புச் சாதனம் செயல்பட்டது.

செயற்கைக் கோளிலிருந்து அந்த அணு உலை மட்டும் தானியங்கி ரொக்கெட் ஏற்பாடு மூலம் தனியே பிரிந்தது.

அந்த ரொக்கெட்டானது அணு உலையை பூமியிலிருந்து மிக உயரத்துக்குக் கொண்டு சென்றது.

இந்த ஏற்பாடு மூலம் அந்த அணு உலை பூமியில் வந்து விழுவது தவிர்க்கப்பட்டது.

அமெரிக்கா இப்போது நட்சத்திரப் போர் என வருணிக்கப்படும் நவீன தற்காப்பு ஆயுதத்திட்டத்தின்கீழ் அணு உலைகளைக் கொண்ட செயற்கைக் கோள்களைச் செலுத்த விருக்கிறது.

நட்சத்திரப் போர்த் திட்டம்

இயல்பாக அமெரிக்காவில் இதற்கு எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

சந்திரனுக்கும், இதர கோள்களுக்கும் அனுப்பப்படும் விண்கலங்களைத் தவிர மற்றப்படி விண்வெளியில் அணு உலைகளைப் பயன்படுத்தலாகாது என்று தடை கோரி அமெரிக்க சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர் மசோதாவைக் கொண்டுவந்துள்ளார்.

ஆனால் இதனால் பலன் எதுவும் ஏற்படும் என்று தோன்றவில்லை; ஏனெனில் ரஷ்யா முதலில் இதை நிறுத்தவேண்டும் என்று அந்த மசோதாவில் நிபந்தனை உள்ளது. ஆகவே இது நடக்காத காரியம்.

அமெரிக்கா மறுபடியும் விண்வெளி அணு உலைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

'நட்சத்திரப் போர்' திட்டத்தின் கீழ் அமெரிக்கா உருவாக்க உத்தேசித்துள்ள நவீன விண்வெளிப்போர் ஆயுதங்கள் செயல்பட நிறைய ஆற்றல் தேவைப்படும்.

இவ்வித ஆற்றலை விண்வெளி அணு உலைகள் மூலம் தான் பெறமுடியும்.

எதிர்காலத்தில் நம் அனைவரின் தலைக்கு மேல் நிறைய அணு உலைகள் சுற்றிக் கொண்டிருப்பதற்கான வாய்ப்பு உள்ளதாகவே தோன்றுகிறது. ★

மாறிவிடு!

உன் எண்ணப்படி
வாழ்க்கை
அமையும் என்று
எண்ணியே வாழ்வதில்
அர்த்தமில்லை...
மனிதா...
அமையாத வாழ்வை
மறந்துவிட்டு
அமைந்துவிட்ட
வாழ்க்கைகேற்ப
எண்ணங்களை
மாற்றிடு!

-நல்லூர் தாஸ்

'பிடிப்பு'

என் வெற்றிகளை
தோல்விகள்
விழுங்கியபோது
எனக்கு மிஞ்சியதெல்லாம்
ஏமாற்றம் தான்
ஆனால்
அவையென்னைத்
துடிக்க வைக்கவில்லை.
மாறாக என்
துடிப்பைக் கூட்டி
வாழ்வில் மேலும்
பிடிப்பையே ஏற்படுத்தின.

துதிகாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறத்தைப் பிரித்தறியும் திறமை பசுவுக்கு உண்டா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பசுக்கள் மிகவும் உயரமாக இருந்தன.

மனிதர்கள் நின்றுகொண்டுதான் பால் கறந்தனர்.

பசுக்களின் கலப்பினமுறை 18 ஆம் நூற்றாண்டில்தான் தொடங்கியது. இந்த முறையைக் கண்டுபிடித்தவர் ரொபர்ட் பாக்வெல் என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி.

தற்போது 960 வகைக் கால்நடைப் பெருக்கு முறைகள் உள்ளன.

சிவப்பு நிறம் பசுவை மிரட்டும் என்பர். அது உண்மையன்று.

வெள்ளை நிறத்தைத் தவிர எந்த நிறத்தையும் பிரித்தறியும் திறமை பசுவுக்கு இல்லை.

பசுவின் மோப்ப சக்தியும் அவ்வளவு வளர்ச்சியடைந்ததாகச் சொல்லமுடியாது.

புல்லைத் தின்னும் முன் நிலத்தை மிகக் கவனமாக மோந்து பார்க்கும்.

மண்ணில் தாது உரம் இருப்பின் அங்குள்ள புல்லைத் தின்னாது பசுவுக்கு உப்பு மிகவும் பிடிக்கும் என்று சொல்லப்படுகிறது. தன் உடம்பில் உள்ள உப்புச்சக்தி குறையும் போதுதான் அதிக அளவில் உப்பை விரும்புகிறது. மற்றப்படி அதற்கு விருப்பமானது இனிப்புத்தான்.

பசு 1.5 மீற்றர் உயரமுள்ள வேலியைத் தாண்டும். ஆபத்து நெருங்கும்போது மணிக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் கொம்பு தெறிக்க ஓடும்.

இங்கு சர்க்கஸில் நாய் செய்யும் சில வேலைகளை சோவியத் சர்க்கஸில் பசுக்கள் செய்கின்றனவாம்; அங்கு அவை பந்தாடுகின்றன; ஸ்கூட்டர் ஓடுகின்றன; பாலே நடனம் ஆடுகின்றனவாம்.

பசு ஏற்ற இறக்கமில்லாத குரலில் ஒரே மாதிரியாகக் கத்துவது போலத் தோன்றும். அது உண்மையன்று.

பசு 11 வகைப் பொருளுடைய குரலில் கத்துகிறது.

தனது கன்றுக்குட்டியோடு தொடர்பு கொள்ளவிரும்பும் போது அது வெவ்வேறு குரல் அளவைப் பயன்படுத்கிறது.

இசையில் ஒலி நயத்திற்கு ஏற்ப அதைப் பிரித்தறியும் இயல்பும் பசுவுக்கு உண்டு.

மெல்லிய இசை ஒலிக்கும் போது அருகில் நின்று கேட்கும் (கண்ணனின் குழலோசைக்குப் பசுக்கள் மயங்கியது உண்மைதான் போலும்)

உலகில் தற்போது 20 கோடி பசுக்கள் (23 பேருக்கு ஒரு பசு வீதம்) இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.

—'அறிவியல் பண்ணை'யில் இருந்து

இருண்ட கண்டத்தை விழுங்கிக் கொண்டிருக்கும் எய்ட்ஸ்

எய்ட்ஸ் (Aids) என்னும் பயங்கரநோய் ஆசியாக் கண்டத்தைத்தான் மேலோட்டமாகத் தொட்டிருக்கிறது.

இலங்கையில் ஆக 14 பேருக்கே எய்ட்ஸ் கண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த விஷயந்தில் அலட்சியமாக இருப்பது பேராபத்தாக முடியும்.

உண்மையில் நீரில் மிதக்கும் பனிமலையின் சிறுபகுதி மட்டுமே வெளியில் தெரிகிறதைப்போல உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையைவிட கண்டுபிடிக்கப்படாதவர்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகம்.

எய்ட்ஸ் வைரஸின் விளைவு வெளித்தெரிய ஐந்து முதல் ஏழு ஆண்டுகள் வரையாவது இதற்கு முக்கிய காரணம்.

உலகிலே ஆபிரிக்காவைத்தான் இந்தநோய் முன்னெச்சரிக்கை ஏதுவுமின்றித் தாக்கிப் பலகோடி ஆண், பெண், குழந்தைகளைப் பீடித்திருக்கிறது.

அந்தவசையில் ஏனைய கண்டங்களில் வாழுபவர்கள் அதிஷ்டசாலிகளே!

ஆபிரிக்க அரசுகள் எய்ட்ஸ் நோயை மூடிமறைக்கவிரும்புகின்றன.

கெட்டசெய்தி கிளின் மேலுள்ள வெறுப்பு, எய்ட்ஸ் வைரஸ் ஆபிரிக்காவில்தான் தோன்றியது என மேலைநாட்டார் கூறிவருவதால் ஏற்படும் எரிச்சல் ஆகியவையே இதற்குக் காரணம்.

ஆனால் உண்மையில் எய்ட்ஸ் ஆபிரிக்காவில் மிக விரிவாகவும் ஆபத்தான அளவிலும் பரவியிருக்கிறது.

இந்த நோயினால் படித்தவர்கள், திறமைசாலிகள், ஆபிரிக்காவை வளப்படுத்தி முன்னேற்றுவதற்கு உதவக் கூடியவர்கள் எல்லாம் 5 முதல் 15 ஆண்டுகளுக்குள் இறந்து விடுவார்கள்.

இதனால் ஆபிரிக்காவின் எதிர்காலம் கேள்விக்குறியாகி இருக்கிறது.

இருண்ட கண்டத்தின் மீது இப்படியும் ஒரு தாக்குதலா? ★

வளிமண்டலத்தைப் பாதிக்கும் குளிர்சாதனப் பெட்டிகள்

மேற்கு ஜேர்மனியில் மக்கழித்துக்கட்டுகிற பழைய 'பிரிட்ஜ்'களை (Refrigerators) ஆழ்குளிர்ப் பெட்டிகளையும் (Deep Freezers) சேகரிக்க அரசு திட்டம் வகுத்து செயலாற்றிவருகிறது.

மேற்கு ஜேர்மனியில் ஆண்டுதோறும் சுமார் 20 லட்சம் 'பிரிட்ஜ்'களும் 'ப்ரீஸர்'களும் பயனற்றவையாக கழித்து விடப்படுகின்றன.

இவற்றிலுள்ள குளோரோ-புளோரோ - கார்பன்கள் (Chloro - Fluro - Carbons) எனப்படும் வாயுக்களை பத்திரமாக அகற்றுவதே இதன் நோக்கமாகும்.

இந்த வாயுக்கள் சாதாரணமாக வெளியே விடப்பட்டால் அல்லது கசிந்துவெளியேறினால் காற்று மண்டலத்தில் உயர் படலத்தை அடைந்து ஓஸோன் படலத்தை சிதைத்துவிடும்.

ஓஸோன் படலம் பாதிக்கப்பட்டால், சூரியனிலிருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள் Ultra-Violet Rays) நேராகபூமியின் மேற்பரப்பை அடைந்து மக்களுக்கு பல வகைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

தோல்வியாதி, புற்றுநோய் இதனால் ஏற்படும். உலகம் எங்கிலும் விஞ்ஞானிகள் ஓஸோன் படலத்தை பாதுகாப்பதில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

மக்கள், உதவாக்கரையாகிப்போன குளிர்சாதனப் பெட்டிகள், ஆழ்குளிர் பெட்டிகள் ஆகியவற்றைக் குப்பைமேட்டில் எறிந்தால் அவற்றில் அடங்கிய குளோரோ - புளோரோ கார்பன்கள் நாளாவட்டத்தில் வெளியே கசிந்து ஓஸோன் படலத்தைப் பாதிக்கும்.

குளிர்சாதனப் பெட்டிகளில் அடங்கிய மேற்படி வாயுக்கள் தான் பெட்டிகளின் உட்புறத்தில் குளிர்நிலை ஏற்படுவதற்கு உதவுகின்றன. ★

ஸியாவின் ஆட்சியில் பெனுசிருக்கு விஷம்!

பாகிஸ்தான் ஜனாதிபதியாக ஸியா - உல் ஹக் இருந்த சமயம்...

தற்போதைய பிரதமர்பெனுஸிர் பூட்டோ சிறைவைக்கப்பட்டிருந்தார்.

அப்போது பெனுஸிருக்கு விஷம் கொடுத்து கொல்ல அதிபர் ஸியா முயற்சித்ததாக அவரது தாயார் நுஸ்ரத் பூட்டோ குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இஸ்லாமபாத்தில் இருந்து வெளியாகும் நவா-ஈ.-வக்த் பத்திரிகைக்கு நுஸ்ரத் பூட்டோ பேட்டியளித்தார்.

சிறையில் பெனுஸிர் நோய்வாய்ப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு ஆட்சியாளர் சிகிச்சையளித்தனர்.

விஷம் கலந்த மருந்து பெனுஸிருக்குக் கொடுக்கப்பட்டது.

நோயில் இருந்து தேறாமல் பெனுஸிரின் உடல் நாளுக்கு நாள் மோசமாகவே சந்தேகம் எழுந்தது.

பெனுஸிர் உடனே மருந்து சாப்பிடுவதை நிறுத்தி விட்டார். அதனால் பெனுஸிர் உயிர் பிழைத்தார்.

இளையமகன் ஷா நவாஸையும் கொன்றவர் அதிபர் ஸியா தான்—

இப்படி மறைந்த பிரதமர் பூட்டோவின் மனைவி நுஸ்ரத் குற்றஞ்சாட்டியிருக்கிறார். ★

பெனுஸிர்

ஸியா - உல் ஹக்

இப்படி ஓர் உத்தரவு!

பாகிஸ்தானில் பொலீஸாருக்கு அரசு புதுமையான உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது

இதன்படி அவர்கள் வயிறு பெருத்து தொப்பையுடன் இருந்தால், தண்டனை விதிக்கப்படும்.

தொப்பையைக் குறைக்க 6 வாரகால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

அதற்குள் தொப்பையைக் குறைத்து இடுப்பு அளவை 34 அங்குலம் அளவுக்குக் கொண்டு வர வேண்டும்.

இதைச் செய்யத் தவறினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை அடுத்து உடல் பெருத்த பொலீஸார், கயிறு குதித்துப் பயிற்சி செய்வதில் ஈடுபட்டுள்ளனர். ★

கண்டங்கள் மோதிய போது...

இமயமலை எப்படித் தோன்றியது?

மலைகள் பலவிதமான காரணங்களால் உண்டாக முடியும்.

ஆசியாக் கண்டத்துடன் இந்தியக் கண்டம் மோதியதால் அவற்றின் விளிம்புகள் மேலே எழும்பி இமயமலை தோன்றியதாகச் சொல்லப்படுகிறது.

எரிமலைக் குழம்புகள் வெளிப்பட்டுக் குவிந்து எரிமலைகளாக வளரும்.

கண்டத்திட்டுக்களின் அடியில் எரிமலைக் குழம்புகள் சேர்ந்து கண்டத்திட்டின் ஒரு முனையை மேலே தூக்கி விடுவதாலும் மலைகள் உண்டாகும். ★

16 முறை சூரியஉதயம்பார்க்கும் விண் வெளி வீரர்கள்

பூமியில் உள்ளவர்களால் சூரிய உதயத்தை நாள் ஒன்றுக்கு ஒரு தடவையே பார்க்க முடிகிறது.

அதுபோல விண்வெளியைச் சுற்றி வலம்வரும் விண்வெளி வீரர்களாலும் சூரிய உதயத்தைப் பார்க்கமுடிகிறதா?

பதில்: முடியுமாவா?

தாழ்புவி வட்டப்பாதையில் ஏறத்தாழ ஒன்றரை மணிநேரத்திற்கொரு முறை பூமியைச் சுற்றிவரும் விண்வெளி வீரர்கள் ஒரு நாளில் 16 தடவை சூரிய உதயங்களைக் கண்டு இரசிக்கின்றனர் என்பதே உண்மை! ★

'வரும்படி' ஏன் அழைத்தீர்கள்?

ஒரு பெரிய செல்வந்தரை நிதி உதவி நிகழ்ச்சிக்கு மிகவும் வற்புறுத்தி அழைத்து வந்தார்கள்.

தலைமை வகிக்கும் படியும் கேட்டுக் கொண்டார்கள், செல்வந்தர் நன்கொடை அளிப்பார் என்ற எண்ணத்தில்,

அந்தச் செல்வந்தர் சொல்லிலும் செல்வர். அவர் நசைச் சுவையோடு பேசினார்.

'இந்த நிகழ்ச்சிக்கு என்னை வரும்படி மிகவும் வற்புறுத்தினார் செயலாளர். எனக்குத் தெரியும் உங்களின் வரும் படிக்காத்தான் என்னை வரும்படி அழைத்தீர்கள் என்று!

கூட்டத்தில் கரகோஷம் அடங்கச் சில நிமிட நேரமாயிற்று. ★

ஒரு சந்திப்பு

விஸ்கியும் சோடாவும் சந்தித்துக் கொண்டன.

சோடாவைப் பார்த்து விஸ்கி,

என்னிடம் தான் உனக்கு எவ்வளவு கோபம்! ஏன் என்னோடு கலந்து என் சக்தியைப் பலவீனப்படுத்துகிறாய்?

அதற்கு சோடா,

'இது இறைவன் ஆணை! ஒவ்வொரு தனிச்சிறப்புச் சக்தியும் பலவீனப்படுத்தப் படவேண்டும் என்பது அவன் கட்டளை. இல்லாமலா ஆண் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விதி வகுத்திருக்கின்றான்.....?

கண்ணதாசனின், குட்டிக் கதைகளில் இருந்து ★

சொர்க்கம் - நரகம் போக மறுத்து ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஆப்ரஹாம்லிங்கன் போட்டியிட்ட சமயம்...

ஒருநாள் லிங்கன் தனக்கு எதிராகப் போட்டியிடுகிற வேட்பாளருக்கு ஆதரவாக நடைபெற்றுக்கொண்டிருந்த கூட்டத்துக்குச் சென்று அருகே அமர்ந்துகொண்டார்.

அக்கூட்டத்தில் லிங்கனை எதிர்த்து ஒரு பாதிரியார் பேசினார்.

'நீங்கள் லிங்கனுக்கு எதிராக வாக்களித்தால் நல்வாழ்வு வாழ்ந்து சொர்க்கம் போகலாம். இதை விரும்புபவர்கள் எழுந்து நில்லுங்கள்

லிங்கனைத் தவிர அனைவரும் எழுந்து நின்றனர்.

மறுபடியும் பாதிரியார், லிங்கனுக்கு ஆதரவாக வாக்களித்து நரகத்திற்குச் செல்ல விரும்புபவர்கள் எழுந்திருங்கள் என்றார்.

கூட்டத்தில் இருந்து எவருமே எழுந்திருக்கவில்லை. லிங்கனும் எழுந்திருக்கவில்லை.

இதைக் கண்டு பாதிரியாருக்குச் சலிப்பு. அவர் லிங்கனை நோக்கி,

ஐயா, நீங்கள் சொர்க்கத்திற்குப் போகவும், நரகத்திற்குப் போகவும் விரும்பவில்லை. வேறு எங்கு தான் செல்ல விரும்புகிறீர்கள்?—என்று எரிச்சலோடு கேட்டார்.

உடனே லிங்கன் எழுந்து பொதுமக்களை நோக்கி, 'நண்பர்களே! நான் வெற்றி பெற்று வெள்ளைமாளிகை செல்ல விரும்புகின்றேன்; சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் அல்ல'—

என்று சொல்லவும் 'குபீர்' சிரிப்பு எழுந்தது. ★

குடையின் பயன் நிழல் தருவது மட்டுமா? பெரும்புலவர் ஒட்டக்கூத்தர் விளக்கம்

'குடையின் பயன் நிழல் தருவது மட்டுமே!'

இது தமிழர்களின் நெடுங்காலக் கருத்தாக இருந்துவந்துள்ளதாகத் தெரிகிறது.

பொதுவாக மன்னர்கள் அரியாசனத்தில் ஒரு குடையும் சேர்ந்து இருக்கும்.

நிழலான மண்டபத்துக்குள் அரியாசனம் போட்டு அதில் குடைமாட்டிவைத்தால் அதுவும் அற்பத்தனம்தானா?

அது அப்படியல்ல.

மன்னர்களின் அரியாசனத்தில் குடை ஒன்றை நிறுத்தி வைத்ததற்கு அர்த்தம், மன்னன் மக்களுக்கு தன் நல்லாட்சி மூலம் நிழல் தருபவனாய் இருக்கிறான் என்பதை உணர்த்தவே அந்தக்குடை!

அது மட்டுமல்ல: மன்னன் வீதி உலா இரவில் போனால் கூட அவனுக்கு ஒரு சேவகன் குடை பிடித்துக்கொண்டுவருவான்.

இதுவும் மேலே சொன்ன அர்த்தத்தில்தான்.

ஆனால் ஒரு மன்னன் அவ்வாறு இரவு வீதி வலம் வரும் போது அவனுக்குக் குடை பிடிப்பதைக் கண்டு ஒரு வீட்டிலுள்ள இரு குமரிகள் கேலியாகப் பேசிவிட்டனர்.

'இராத்திரியில் குடை பிடிக்கிற இந்த அரசரைப் பார்த்தாயா? என்று அந்தப்பெண்களில் ஒருத்திசொல்ல,

மற்றவள் அதற்குச் சிரிக்க.

இது மன்னன் காதிலும் விழுந்து விட்டது.

மன்னனுக்கோ அவமானத்தில் முகம் சுறுத்தது.

நல்ல வேளையாக அச்சமயம் மன்னனுடன் பெரும்புலவர் ஒட்டக்கூத்தன் வந்துகொண்டிருந்தார்.

அவர் சமயமறிந்து ஒரு பாடலை அங்கேயே பாடி நிலைமையைச் சமாளித்தார்.

மன்னன் முகமும் மலர்ந்தது.

அந்தப் பெண்களும் அறியாமல் செய்த கேலிக்கு வருந்தினர்.

ஒட்டக்கூத்தர் அப்படி என்ன பாடினார்?

அவர் பாடலின் பொருள் இதுதான்.

இந்த இரவு நேரம் வானுலக தேவதைகள் வான வீதியில் உலாவுவார்கள்.

இச்சமயம் மன்னனின் அழகிய முகம் அவர்கள் கண்ணிலே பட்டால் அவனைக் கவர்ந்து போய் விடுவார்கள்.

அதற்குமேல் இந்த அருமையான மன்னனையும் அவனுடைய நல்லாட்சியையும் நாம் இழந்து நிற்கவன்றோ நேரிடும்?

எனவே தேவ கன்னியர் பார்வையில் மன்னனின் முகம் படாமல் இருக்கவே ஒரு குடை கொண்டு அவன் முகம் மறைத்தோம்! — என்பதே ஒட்டக்கூத்தர் பாடிய பாடலின் பொருள்.

ஆகக் குடை என்றால் வெயிலுக்கு மட்டும் தான் என்று எண்ணிவிடக்கூடாது. ★

காற்றைத் தூய்மையாக்கும் நீல நிற 'சிக்னல்'

வீதி சந்திப்பில் தானியங்கி போக்குவரத்து சிக்னலில் சிவப்பு விளக்கு எரியுமானால்கார், லொறி, ஓட்டோ ஸ்கூட்டர் இப்படியாகப் பல வகை வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அணி வகுத்து நிற்கும்.

இந்த வாகனங்களில் அநேகமாக அனைத்திலுமே என்ஜின்கள் இயங்கிக்கொண்டிருக்கும்.

பச்சை விளக்கு வந்ததும் உடனே பாய்ந்து முன்னேறும் பொருட்டு யாருமே என்ஜினை 'ஒஃப்' செய்வதில்லை.

இந்த வாகனங்கள் அனைத்திலிருந்தும் வெளிப்படுகின்ற புகையானது தேவையற்ற வகையில் சுற்றுச் சூழலைக் கெடுக்கிறது.

அத்துடன் வீதி சந்திப்பில் பச்சை சிக்னலுக்காகக் காத்திருக்கிற வாகனங்களில் இருக்கிற அனைவரின் ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது.

வீதிச் சந்திப்பில் காத்திராமல் வாகனங்கள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தால் அப்போது வெளிப்படும் புகை காற்றுமண்டலத்தைப் பாதிக்காதா? உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்காதா? என்று வாகன ஓட்டிகள் கேட்கலாம்.

வீதிச் சந்திப்புகளில் ஏராளமான வாகனங்கள் ஒன்று திரண்டு நின்று ஒரேசமயத்தில் புகையை வெளிப்படுத்துகிற காரணத்தால் வீதிச் சந்திப்புகளில் இருக்கும் காற்றானது மற்ற இடங்களைவிட மிகவும் பாதிக்கப்பட்ட அளவில் உள்ளதாக ஆய்வுகள் காட்டியுள்ளன.

எனவே வீதி சந்திப்பில் சிவப்பு சிக்னலைக் கண்டதும் வண்டியை நிறுத்தும்போது என்ஜினை 'ஒஃப்' செய்து வைத்தால் அந்த அளவுக்கு வாகனங்களிலிருந்து புகை வெளிப்படுவது குறையும். காற்றுக்கெடுவதும் குறையும்.

மேற்கு ஜேர்மனியில் பிராங்க்ஃபர்ட் நகரில் போக்கு வரத்து அதிகாரிகள் இப்பிரச்சினையை உணர்ந்து ஒரு புது ஏற்பாட்டைக் கைக்கொண்டுள்ளனர்.

வீதி சந்திப்புகளில் பச்சை, மஞ்சள், சிவப்பு விளக்குகள் தவிர, நீல நிற விளக்கு ஒன்று தனியே பொருத்தப்பட்டுள்ளது.

சிவப்பு விளக்குத் தோன்றி நிறைய வாகனங்கள் வரிசை வரிசையாக நிற்க ஆரம்பித்ததும் 'Aus' என்று எழுதப்பட்ட நீல நிற சிக்னல் எரிய ஆரம்பிக்கிறது.

ஜேர்மன் மொழியில் 'Aus' என்றால் 'ஒஃப்' என்று அர்த்தம். வாகன ஓட்டிகள் தங்களது வாகனத்தின் என்ஜினை 'ஒஃப்' செய்து வைக்க வேண்டும் என்று கோரும் வகையில் தான் இப்புதிய நீல நிற சிக்னல் பொருத்தப்பட்டுள்ளது.

கார், லொரி, ஸ்கூட்டர் போன்ற வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகையில் கார்பன், நைட்ரஸ் ஆக்சைடுகள் உட்பட பல நச்சுப் பொருள்கள் கலந்துள்ளன என்பதும் இவை உடல் ஆரோக்கியத்துக்குத் தீங்கானவை என்பதும் குறிப்பிடத்தக்கது. ★

சீனத்துச் சிற்பக்கலையிலான தரங்கம்பாடி சிவாலயம்

தரங்கம்பாடியின் கடலோரம் அமைந்துள்ள மாசிலாமணீஸ்வரர் சிவாலயம்.

13 ஆம் நூற்றாண்டில் குலசேகரப் பாண்டியனால், (1268 - 1310) கட்டப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

இத்திருக்கோயிலின் மகா மண்டபத்தின் முதற் பகுதி வரை கடலால் அழிக்கப்பட்டு கற்குவியலாகக் கடலுக்குள் அமிழ்ந்து கிடக்கின்றது.

கிழக்கு நோக்கியுள்ள இவ்வாலயத்தின் நுழைவு வாயிலில் உயரமான ஐநிலைக் கோபுரம் இருந்தது.

இந்த இராஜகோபுரத்திலும் இரண்டாம் பிரகாரவாயிலில் அமைந்துள்ள கோபுரத்திலும் சீனச் சிற்பக் கலையின் தாக்கம் ஏற்பட்டிருந்தது.

சங்க காலத்தில் பொறையாறும், பிற்காலப் பாண்டியர் ஆட்சி முதல் தரங்கம்பாடியும் சோழ மண்டலக் கடற்கரையில் துறைமுகங்களாக விளங்கி வந்தன.

பாண்டியராட்சியின்போது தரங்கம்பாடி வாணிபத்தில் ஏற்றம் பெற்றது. சீனத்து வாணிபரும், மேற்காசிய அராபியரும் தரங்கம்பாடிக்கு வாணிபத்தின் பொருட்டு வந்தனர்.

பாண்டிய மன்னன், சீன வணிகரைக் கவரும்பொருட்டு அவர்களது சிற்பக்கலையில் (சீனச்சிற்பக் கலை) சிறப்பம்சங்களை இச்சிவாலயத்தில் புகுத்தி இருக்கலாம் எனக் கருதலாம். இது சம்பந்தமாக 18-ஆம் நூற்றாண்டில் தரங்கம்பாடிக்கு விஜயம் செய்த ஐரோப்பிய பயணி ஒருவரின் ஓவியம் டென்மார்க்கில் உள்ள கோப்பன்ஹேகன் ஆவணப் பாதுகாப்பு மையத்தில் இப்பொழுதும் பாதுகாக்கப்பட்டுள்ளது. ★

பஞ்சாமிர்தம் பலாச சுமர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் பயில்வோம்

க. பொ. த. உயர்தர வகுப்பிற்குரியது

தமிழ் இலக்கண வினா விடை

1. வழுவமைதி என்றால் என்ன? வகைகளைத் தந்து விளக்குக.

இலக்கணவிதிகளை மீறிவருகின்ற சொற்கள், சொற்றொடர்கள் வழுக்களாம் (குற்றம்) ஆனால் இலக்கண அமைவை மீறினும் 'ஆன்றோர் வழக்காக, அவ்வாறும் அமையலாம் எனக் கருதி மொழியில் வழங்கிவரும் பிரயோகங்கள் வழுவமைதிகள் எனப்படும்.

இது, 1. திணைவழுவமைதி.
2. பால்வழுவமைதி.
3. எண்வழுவமைதி.
4. இடவழுவமைதி.
5. மரபுவழுவமைதி என பலவகைப்படும்.

திணைவழுவமைதி:

உயர்வு, சிறப்பு, இழிவு, கோபம் போன்ற காரணங்களினால் ஒரு திணையாடு சேர்ந்த வேறொரு திணைப்பெயர் ஒரே திணைமுடிவு பெறுவதும், ஒரு திணைப் பெயர் வேறோர் திணைப்பெயர் கொண்டு அழைக்கப்படுதலும் 'ஆன்றோர் வழக்காதலால்' இவை திணைவழுவமைதிகளாம்.

அ. உயர்வு காரணமாக உயர்திணையோடு சேருகின்ற அஃறிணைப் பெயர் உயர்திணை முடிபே பெறும்.
உ+ம்: திங்களும் சான்றோரும் ஒப்பர்.

ஆ. இழிவு காரணமாக அஃறிணைப் பெயரோடு வருகின்ற உயர்திணைப் பெயரும் அஃறிணை முடிபே பெறும்.
உ+ம்: இவனும் குரங்கும் ஒருமாதிரி புடிச்சா விடாது.

இ. தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் சேர்ந்துவரின் அஃறிணை முடிபே பெறலாம்.
உ+ம்: நானும் நாயும் திருடனைத் துரத்தினோம்.

ஈ. உவப்பு காரணமாக அஃறிணை உயர்திணையாகச் சொல்லப்படலாம்.
உ+ம்: ஓர் பசுவை உவப்பினால் 'என் இராசாத்தி வந்தாள்' எனச் சொல்லுதல்.

உ. 'உயர்வு காரணமாகவும் அஃறிணைப் பெயர் உயர்திணையாகச் சொல்லப்படும்.
உ+ம்: 'மயிலார் வந்தார்' (முருகனின் வாகனம் என்ற புராண மரபால் உயர்வுபெற்றது)

ஊ. கோபம் காரணமாகவும் உயர்திணை அஃறிணையாக சொல்லப்பட்டது.
உ+ம்: ஒருவனைக் கோபத்தில் 'இவன் ஒரு நாய்' எனச் சொல்லுதல்.

பால்வழுவமைதி:

சிலசந்தர்ப்பங்களில் ஒருபாற் சொல் இன்னொரு பாற் சொல்லால் அழைக்கப்படுதல் வழு ஆயினும் அவை ஆன்றோர் வழக்கில் வழங்கிவரின் பால்வழுவமைதி எனப்படும்.

அ. மகிழ்ச்சி காரணமாக தன் மகளை 'என் இராசா வாடா' என அழைத்தல்.

ஆ. உயர்வு காரணமாக 'பெண்பால் ஆண்பாலாகச் சொல்லப்படலாம்.
உ+ம்: காரைக்கால் அம்மையார் வந்தார்.

இ. கோபம் காரணமாகவும் பால்வழுவமைதி ஏற்படும். 'சண்டைக்குப் போக பயந்த ஒருவன்' இவன் ஒரு பெட்டை எனக்கூறுதல்

ஈ. இவள் வெட்கத்தைத் துறந்து ஆண் என்ற விடத்து பெண்பால் ஆண்பாலாகச் சொல்வப்படுவதும் பால் வழுவமைதியேயாம்.

இடவழுவமைதி:

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய இடங்கள் சில சந்தர்ப்பங்களில் மாறி அழைக்கப்படுதலும் வழுவமைதியாம்.

அ. மதிப்பு காரணமாக முன்னிலை இடத்தாரை படர்க்கையிடத்தாராக வழங்குதல் வழக்கு.
உ+ம்: தங்கள் வரவு நல்வரவாகுக
குறிப்பு:- யானே, அவனே யார் இது செய்தார்?
நீயோ அவனே யார் இது செய்தார்?
நீயோ யானே யார் இது செய்தார்?
என ஓரிடம் இன்னோரிடத்துடன் மயங்கிவருதலும் வழுவமைதியாம்.

காலவழுவமைதி:

ஒரு காலத்துக்குரியதை வேறொரு காலத்தால் சொல்வது வழுவாயினும், விரைவு, மிகுதி, துணிவு போன்ற சில காரணங்களினால் அவ்வாறு சொல்லலாம் என்பதால் அவ்வாறு வழங்குவது காலவழுவமைதியாகும்.

அ. விரைவு காரணமாக 'எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்படுதல்.
உ+ம்: உணவருந்திக்கொண்டிருப்பவன் அவசரம் (விரைவு) காரணமாக உணவருந்திவிட்டேன் எனக் கூறுதல்.

ஆ. மிகுதி: 'நீ அவனுடன் சேர்ந்ததால் அழிந்தாய்' (ஏனெனில் அவனுடன் சேர்ந்த பலபேர் அழிந்திருப்பதால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது).

இ. துணிவு (நிட்சயம்) காரணமாக ஒரு காலம் இன்னொரு காலமாகச் சொல்லப்படும்.
உ+ம்: 'நீ நன்றாக பயிற்சிசெய்துள்ளாய் ஆகவே வெற்றியடைந்தாய்' எனக்கூறுதல்.

ஈ. வழக்கு: 1. நாங்கள் முன்பு இங்கே தான் படம் பார்ப்போம்' காரணமில்லாமல் வழக்கிலே இறந்தகாலம் எதிர்காலமாகச் சொல்லப்பட்டது.
2. முக்காலத்தும் உள்ள பொருளை 'நிகழ் காலமாக' சொல்லுதல் வழக்கம்.
உ+ம்: மலை நின்றது.
கடவுள் இருக்கின்றார்.
3. நாடகம், கதை போன்றவற்றில் - கால வழுக்கள் கதைச் சுவைக்காக இடம் பெறும்போது அமைதிபெறும்.

ஆக்கம்: **வேலணையூர் தாஸ்**

பறவைகள் அலகினால் இறகுகளைக் கோதுவது ஏன்...?

அநேகமாக எல்லாப் பறவைகளும் ஓய்வு நேரத்தில் அலகுகளினால் இறக்கைகளைக் கோதுவதைப் பார்த்திருப்பீர்கள். இதன் காரணம் என்ன...?

இது பற்றி ஆராய்ச்சி செய்ததில் உடலில் இறகு ஆரம்பித்த காலத்தில் இருந்தே பறவைகள் இறகுகளைக் கோதுகின்றன என்பது தெரிய வந்தது.

இச்செயல் அவற்றின் உடலுக்கு வலுவூட்டுகிறது. கோதுவதால் இறகுகள் மென்மை பெறுகிறது.

எல்லாப் பறவைகளுக்கும் வால் பகுதியின் மேல் எண்ணெய்ச் சுரப்பிகள் உண்டு.

அலகுகள் இதன் அருகே செல்லும் போது எண்ணெய் வெளிவந்து இறகுகளில் பரவுகிறது. இந்த எண்ணெய் இறகுகளைச் சுத்தமாக்குவதுடன் பளபளக்கவும் செய்கிறது.

இறகுகளின் மீது எண்ணெய்ப் பசை பரவுவதால் தண்ணீர்பட்டு அவை நனைவதில்லை.

ஒரு பேனை இந்த எண்ணெய் அலகு வழியாக உள்ளுக்குச் சென்றாலும் கூட பறவைகளுக்கு இதன் மூலம் வலுவளிக்கும் விட்டமின் 'டி' கிடைக்கிறது.

சில பறவைகள் தமது இறகுகளைச் சுத்தம் செய்ய தண்ணீரையும் மணலையும் பயன்படுத்துகின்றன.

உதாரணமாக, வாத்து நீரினுள் மூழ்கி, மூழ்கி எழுவதைக் காணலாம். சில பறவைகள் தமது விசித்திரமான இறக்கைகளைச் சுத்தம் செய்ய அரும் பாடுபடுகின்றன.

ஜப்பானில் நீள வால் கொண்ட ஒரு வகைச் சேவல் உண்டு இதற்கு உடலில் இறகுகள் தவிர 30 அடி நீளமான வாலும் உண்டு.

இந்த ஜப்பானியச் சேவல் தனது இறகுகளைத் தூய்மையாக்க மிகவும் பிரயாசை எடுத்துக் கொள்ளுகிறது. ★

காகமும் கோழியும்

எங்கள் வீட்டு வெள்ளைக்கோழி
எட்டுக்குஞ்சு பொரித்தது
ஐந்தும் வெள்ளை அதில் மூன்று
இருண்ட கறுப்பானது

வட்டக் கண்கள் குட்டக் கால்கள்
எட்டும்கூடி நிற்கையில்
கிட்டவந்து அண்டங்காக்கா
கொத்திப் போகப் பார்த்தது

சத்தம்போட்டுத் தாய்பறந்து
தாவிக் கொத்தக் காக்கையை
அத்தனையும் ஓடிச் சென்று
அடுப்படிக்குள் ஒளித்தன

குய்யோ கூவோ என்று அம்மா
குளறிக்கொண்டு வந்ததும்
ஐய்யோ குஞ்சைக் காணோமென்று
அதுகள் கீகீ என்றன.

— முல்லைக்கவி

புகழ்பெற்ற விஞ்ஞானியின் துயரக் கதை!

'என்னைச் சிதையிட்டு உயிருடன் எரித்தாலும், எனது முடிவுகளை மாற்றிக் கொள்ளமாட்டேன்'—

நிக்கொலாய் வாவிலோவ் (Nikolai Vavilov) என்ற ரஷ்ய விஞ்ஞானி நீதிமன்றத்தில் முழக்கமிட்டார்.

அதற்காக அவர் யன்னல்களே இல்லாத ஒரு நிலவறையில் சிறைவைக்கப்பட்டார்.

அவருக்குப் போதுமான உணவு வழங்கப்படவில்லை.

இறுதியில் சிறையிலேயே உயிர்நீத்தார்.

அவர்செய்த குற்றம்என்ன? அரசு அங்கீகரித்திருந்த போலிமரபியல் விஞ்ஞானக் கொள்கையான லேஸன் கோய்ஸ்ம்(Lysenkoism) என்ற தத்துவத்தை மறுத்து மரபியலில் புதிய கருத்துக்களைப் பரப்ப முயன்றது தான்.

(லேஸன் கோயிசம் தத்துவம் என்றால் என்ன?

லேஸன்கோ(T.D. Lysenko) என்ற தாவர வளர்ப்பாளர் நவீனமரபியல் கருத்துக்கள் தவறானவை என்றுகூறி ஸ்டாலினை நம்பவைத்தார்.

ஜீன்கள் என்று ஒன்றும் கிடையாது என்றும் வாழிடத்தின் சூழ்நிலைகள்தான் ஒரு தாவரத்தின் பண்புகளை மாற்றி அமைக்கின்றன என்றும் வாதிட்டார்.

இதுவே லேசன் கோயிசம் என்று அழைக்கப்பட்டது.

வாவிலால் உணவு உற்பத்தியைப் பெருக்க உதவக்கூடிய பயிர்களும் தாவரங்களும் கிடைக்கிற இடங்களைத் தேடிக்கண்டுபிடித்தார்.

தோட்டத்தில் செய்ய வேண்டிய ஆய்வாகக் கருதப்பட்டு வந்த தாவரவிலுக்கு தேட்டையும் பூகோள அறிவும் தேவை என நிரூபித்து அதன் தன்மையையே மாற்றினார்.

அவர் தனது வாழ்நாளில் 180 முறை பயணம் மேற்கொண்டு 52 நாடுகளுக்குச் சென்று ஏறத்தாழ இரண்டு லட்சம் புதிய பயிரினங்களைச் சேகரித்தார்.

அவற்றைக் கொண்டு ஒரு பயிர் அறிவியல் பயிற்சிக் கழகத்தையே நிறுவ முடிந்தது.

இப்போது அதற்கு வாவிலாவின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

உலகம் முழுவதில் இருந்தும் ஆய்வு நிலையங்கள் அந்தத் தாவரச் சேமிப்பைப் பயன்படுத்தி மரபியலிலும் விவசாயத்திலும் ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றன.

முதன் முதலாக நிறுவப்பட்ட ஜீன் வங்கி(Gene Bank) என அது புகழ்பெற்றது.

மரபியல் தேய்மானம் (Genetic Erosion) என்ற கருத்தை அவர்தான் முதன் முதலாக வெளியிட்டார் எனலாம்.

தாவரங்களிலும் பயிர்களிலும் விரும்பத்தக்க பண்புகளைக் கொண்ட ரகங்களைக் கண்டுபிடிப்பதில் அவர் ஒரு ஒழுங்கு முறையை வகுத்தார்.

அன்டார்க்டிக்காவில் ஒரு மலைக்கும்,

பாமீர் பீடபூமியில் உள்ள ஒரு பனியாற்றுக்கும்,

நிலவில் உள்ள ஒரிடத்திற்கும் வாவிலாவின் பெயரைச் சூட்டிச் சிறப்பித்திருக்கிறார்கள்.

வாவிலாவ 25 – 11 – 1887 இல் மாஸ்கோவில் பிறந்தார்.

26-1-1943 இல் இறந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் வாவிலாவ் புகழை, சாதனையை அரசு அங்கீகரித்தது.

ஆயினும் அது ஒரு காலம் கடந்த பரிகாரம் தான். ★

அறிவியல் வினா விடை

? விண்ணில் செலுத்தப்படும் விண்கலங்கள், ரொக்கட்டுக்கள் போன்றவை ஏன் சூரியனின் ஈர்ப்பு விசையால் பாதிக்கப்படவில்லை?

பதில்: சூரியனின் ஈர்ப்பு விசை ஆதிக்கத்தினுட்பட்டு சுற்றிச் சுழல்கிறது பூமி.

இந்தப் பூமியின் நிறையீர்ப்பு வரம்புகளை மீறித் தப்பித்துச் செல்ல ரொக்கட்டுக்களுக்குப் போதிய விடுபடு விரைவு (Escape Velocity) தேவைப்படும்.

இது நொடிக்கு 11.2 கிலோ மீற்றர்கள்.

புவி சுற்றி வரும் விண்கலங்களுக்கோ அந்தந்த உயர வட்டப்பாதைகளுக்குரிய சுற்று விரைவு (Orbital Velocity) கிடையான திசையில் ஊட்டப்படும்.

போதுமான சுற்றுவிரைவில் இயங்குவதனால் சூரியனுக்கு அருகாமையில் கூட வட்டமடித்துத் திரும்பலாம்.

? வானொலி அலைகள் என்றால் என்ன?

பதில்; வானொலி அலைகள் மின்காந்த அலைகளாகும். 10 சென்ரிமீற்றருக்கு மேற்பட்ட அலை நீளமுள்ள மின்காந்த அலைகளை வானொலி அலைகள் என்கிறார்கள். இவை வானொலி, தொலைக்காட்சி, ராடர் ஆகிய சாதனங்களில் பயன்படுகின்றன. ★

அன்றாட வாழ்வில்...

இடுப்பைச்சுற்றி

இடுப்பைச் சுற்றி புடைவையை மிகவும் இறுக்கமாகக் கட்டினால் தோல் புற்று நோய்வரும் என்று மருத்துவக் கல்லூரி டாக்டர்கள் குழு தெரிவித்துள்ளது.

இதுபோல வேட்டியை, 'பெல்ட்'டை இறுக்கமாகக் கட்டும் ஆண்களுக்கும் தோல் புற்றுநோய் வரும் என்று எச்சரித்துள்ளார்கள்.

பூவாசம்,,,

பூக்கள் என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். குறிப்பாக பெண்கள் பூக்களைக் கண்டவுடன் அதனை முகர்ந்து பார்க்காமல் விடமாட்டார்கள்.

பூவின் இதழ்களில் கண்ணுக்குத் தெரியாத சிறு வண்டுகள் இருக்கும்.

பூக்களை முகரும் பொழுது இவ்வண்டுகள் மூக்கினுள் நுகர்ந்து, உள்ளே செல்லுவிடுகின்றது. எனவே தூரத்தில் வைத்து முகர்வது நல்லது.

வெண்டைக் காப்பி

வெண்டை விதையை நன்கு காய வைத்து, வறுத்துப் பொடிசெய்து காப்பி தயாரிக்கலாம்.

சாதாரண காப்பியில் உள்ள நச்சுப் பொருள் இல்லாத காப்பியை விரும்புவோர் இதனைக் குடிக்கலாம்.

அது மட்டுமல்லாமல், இதனைக் காப்பித்தூளுடன் கலந்தும் காப்பி தயாரிக்கலாம். சிறிதளவும் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது.

முகத்தின் அழகிற்கு,,,

புளிப்பில்லாத தயிருடன் சிறிது மஞ்சள் பொடியைக் கலந்து முகத்தில் தடவி வர, முகம் வெண்மையாகவும், மென்மையாகவும் பளபளக்கும்.

வெடிப்பு, பருபோன்றவைகளும் வராது, தொடர்ந்து இரு வாரங்கள் தடவி வந்தாலே நல்ல மாற்றத்தைக் காணலாம்.

முகப்பருக்கள் நீங்க,,,

ஜாதிக்காயைச் சந்தனக் கல்லில் உரைத்து இரவில் தினமும் முகத்தில் பூசி வரப் பருக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

இதுபோலவே முகப்பரு உள்ளவர்கள் செஞ்சந்தனத்தைச் சந்தனக்கல்லில் உரைத்துப் பூசி வந்தால் பருக்கள் மறைந்து விடும்.

உங்கள் கணவனுக்கு,,,

உங்கள் கணவனுக்குத் தக்காளி 'ஜூஸ்' கொடுக்கும் போது முடிந்தவரை 'ஜூஸ்' பிழிந்து விதை நீக்கிக் கொடுப்பது நல்லது.

ஏனென்றால் தக்காளி விதை ஆண்களின் சிறுநீர் அடைப்புக்கு ஒரு காரணமாக இருக்கிறது என்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். ★

மை கறையை நீக்க...

பேனா மை கறைபடிந்த துணிகளைத் துவைப்பதற்கு முன் தயிரில் நனைத்தால் கறை உடனே நீங்கிவிடும். ★

குழந்தை வளர்ப்பு பற்றி....

சிறுவர் சிறுமிகளுக்குத் தரும் பயிற்சி அவர்களைச் சிறந்தவர்களாக்குகிறது. மனோவளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கு உடற்பயிற்சி மூலம் கல்வி புகட்ட வேண்டும்.

வீடுகளை கூட்டிச் சுத்தம் பண்ணுவதிலும் தாய் தந்தையர்களுக்கு உதவியாக சிறுசிறு காரியங்களைச் செய்வதிலும் குழந்தைகள் பயிற்சி பெற வேண்டும்.

வீட்டில் பூஜை அறை ஒன்றை ஏற்படுத்தி அறையையும், பூஜாப் பாத்திரங்களையும் சுத்தம் பண்ணுவதற்கும், குழந்தைகளுக்குப் பயிற்சி தர வேண்டும்.

மலர் பறித்து வந்து மாலை தொடுத்து தெய்வத்திற்குச் சாத்துவதில் குழந்தைகள் மகிழ்ச்சி அடையலாம். ஒவ்வோர் ஊரிலும் ஆலயம் இருக்கிறது. ஆலயங்களைக் கூட்டிச் சுத்தம் பண்ணுவதிலும் கோயில் நந்தவனங்களைப் பராமரிப்பதிலும் குழந்தைகளை மகிழ்ச்சியுடன் ஈடுபடச் செய்யலாம்.

குழந்தைகள் ஒன்றுகூடி காலையிலும் மாலையிலும் ஆலயத்தில் இசையுடன் பாடிப் பஜனை செய்யலாம். குழந்தைகளைக் கொண்டே தெய்வத்துக்கு அபிஷேக ஆராதனை செய்யலாம். தெய்வத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்ட பொருள்களைக் குழந்தைகளுக்குப் பிரசாதமாகவும் வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படுகின்ற செயலையும் அவர்களைக் கொண்டே செய்யலாம்.

கோயில் விழா சமயத்தில் குழந்தைகளைக் கொண்டே இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றில் உள்ள நிகழ்ச்சிகளை நாடகமாக நடிக்கும்படி செய்யலாம். பிடி அரிசி திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு அரிசி சேகரம் செய்யப் பயிற்சி தரலாம். அவ்விதம் சேகரிக்கப்பட்ட அரிசியை ஆண்டுக்கு ஒரு

முறையோ இருமுறையோ பொது இடத்தில் ஊர்க்குழந்தைகள் அனைவரும் ஒன்றுகூடி அவர்களே சமைத்து அவர்களுக்கிடையில் பரிமாறி உண்டு மகிழ்ச்சியடையலாம்.

குடும்பத்துக்கும் ஊருக்கும் பயன்படுகிற குழந்தை நாட்டுக்குப் பயன்படும். குடும்ப காரியங்களையும் கோயில் காரியங்களையும் குழந்தைகள் மகிழ்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் செய்யப் பயிற்சி பெறுவார்களானால் அவர்கள் எதிர்காலத்தில் நாட்டுக்குப் பயன்படும் நல்லவர்களாவார்கள். இங்ஙனம் பயிற்சி பெறும் குழந்தைகள் பண்பாடு உடையவர்களாவார்கள். ★

தொகுப்பு: க. கனகராசா

மனைவிக்காக பத்தியம் இருந்த காந்திஜி

மகாத்மா காந்திஜியின் மனைவி கஸ்தூரிபாய் ஒரு தடவை உடல்நலக்குறைவு அடைந்திருந்தார்.

அப்போது அவருக்கு உப்பு, பருப்பு நீக்கிய உணவுதான் கொடுக்கவேண்டும் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள்.

அதைக் கேட்ட கஸ்தூரிபாய் 'உப்பு பருப்பு நீக்கிய உணவை என்னால் சாப்பிட இயலாது' என்று கூறிவிட்டார்.

அறிவுரை சொல்லி வற்புறுத்திய காந்திஜியிடம் 'உப்பு பருப்பு இல்லாத சாப்பாட்டை நீங்கள் சாப்பிடுவீர்களா? என்று கஸ்தூரிபாய் கேட்டார்.

'நீ குணம் அடையும் வரை நான் உப்பு, பருப்பு நீக்கிய உணவைச் சாப்பிடுகிறேன்'— என்றார் காந்திஜி.

திகைத்துப்போன கஸ்தூரிபாய், 'நான் பத்திய உணவைச் சாப்பிடுகிறேன். நீங்கள் கஷ்டப்பட வேண்டாம்'— என்று சொல்ல,

காந்திஜி 'அதெல்லாம் முடியாது. நான் சொன்னால் சொன்னதுதான்'— என்று கூறி விட்டு,

மனைவியுடன் ஒரு வருடம் உப்பு பருப்பு நீக்கிய உணவைச் சாப்பிட்டார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹொலிவூட் அழைப்பை நிராகரித்த 'மண்ணின் மைந்தன்' சத்யஜித்ரே

உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் சத்யஜித்ரே. வயது 67.

இருதய நோய் காரணமாக படத்தயாரிப்பில் கடந்த பத்து ஆண்டுரே ஈடுபடாது இருந்து வந்தார்.

மீண்டும் இப்போது படத் தயாரிப்பில் ரே முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகிறார்.

தனது 26 ஆவது படத்தை ரே அண்மையில் வெளியிட்டார்.

பெங்காள மொழியிலான இப்படத்தின் பெயர் 'கானசத்ரு'.

இப்படம் அண்மையில் பிரெஞ்சு நாட்டில் நடந்த கேன்ஸ் திரைப்பட விழாவில் வெளியிடப்பட்டது.

இந்த ஆண்டு இறுதிவரை இப்படம் கல்கத்தாவில் திரையிடப்படமாட்டாது என்று ரே அறிவித்திருக்கிறார்.

கல்கத்தாவில் இப்போது கோடைகாலம். அங்குள்ள படமாளிகைகளில் எயர்கண்டிஷன் வசதிகள் கிடையா.

தியேட்டர்களில் மின் காற்றாடிகள்தான் இயங்குகின்றன.

'இது படத்தின் ஒலிப்பதிவு சரியாகக் கேட்கமுடியாதபடி செய்து விடுகிறது'—

இப்படி ரே கூறுகிறார்.

செய்தால அனைத்தும் சரியாகச் செய்ய வேண்டும் என்பதில் தீவிர அக்கறை காட்டுபவர் ரே.

'கானசத்ரு'

'கானசத்ரு' படம் அவரது கதையல்ல.

அவர் தனது திரைப்பட வாழ்க்கையில் முதன்முதலாக வேறு ஒருவர் எழுதிய நாடகத்தைப் படமாக்கியிருக்கிறார்.

'முதன் முதலாக 5 ஆண்டு கால இடைவெளியில் இப்படத்தைத் தயாரித்தேன்.

இருதய நோய் காரணமாக வெளிப்புறப் படப்பிடிப்புக்கு போகக் கூடாது என்று டாக்டர்கள் கட்டளையிட்டுள்ளனர்.

'அதனால் ஸ்டுடியோவுக்குள் மட்டும் படப்பிடிப்பில் கலந்து கொள்ள வேண்டியதாயிற்று.

'ஸ்டுடியோவுக்குள் படப்பிடிப்பை வைத்துக் கொள்வது என்றால், ஒரு நாடகத்தைப் படமாக்குவது நல்லது என்று தீர்மானித்தேன்.

> உலகப்புகழ்பெற்ற இந்தியத் திரைப்பட இயக்குநர் சத்யஜித் ரே.
>
> ஐந்து ஆண்டு கால இடைவெளியின் பின்னர் அவர் எடுத்த 26 ஆவதுபடம் 'கானசத்ரு' அண்மையில் கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது.
>
> அதையொட்டி நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு சத்யஜித் ரே அளித்த பேட்டி இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

'கல்லூரி மாணவனாக இருந்தபோது ஹென்றிக் இப்ஸென் எழுதிய 'மக்களின் எதிரி' என்ற நாடகத்தைப் படித்தேன்.

'அதனை நவீன காலத்துக்கு ஏற்றதாக இந்தியக் கதையாக மாற்றி 'கானசத்ரு' வாக எடுத்தேன்.

இப்படிக் கூறும் சத்யஜித் ரே, இருதய நோயுடன் படப்பிடிப்பை எப்படி நடத்தினார் என்பதைப் பின்வருமாறு விவரிக்கிறார்.

'ஸ்டுடியோவில் அம்பு லன்ஸ் ஒன்றுடன் டாக்டர் ஒருவர் எந்த நேரமும் தயாராக இருப்பார்.

'அடிக்கடி எனது இருதய நிபுணர் ஸ்டுடியோ வந்து போவார்.

எனது ரத்த அழுத்தம், நாடித்துடிப்பு ஆகியன அடிக்கடி எடுக்கப்படும்.

படமும் ஒரு டாக்டர் சம்பந்தப்பட்டபடியால் என்னைக் கவனித்த டாக்டர்களும் படப்பிடிப்பில் அக்கறை காட்டி வந்தனர்'—

சத்யஜித் ரேயின் படங்கள் வெளிநாட்டாரையே கவர்கின்றன. அவர்களுக்காக சத்யஜித் ரே படம் எடுக்கிறார் என்றெல்லாம் திரையுலக வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இதுபற்றி ரே கூறுகிறார்:

எனது ரசிகர்களுக்காகத் தான் நான் படம் தயாரிக்கிறேன்.

எந்த மாதிரியான படம் ஏற்றுமதிக்கு உகந்தது என்பது எனக்குத் தெரியாது.

எந்த மாதிரியான படம் வெளிநாட்டினரால் விரும்பப்படுகிறது என்பதும் எனக்கு தெரியவே தெரியாது.

மேற்கு நாட்டு ரசிகர்களின் மனதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.

நான் 'சங்கீத அறை' (Music Room) என்ற பெயரில் படம் ஒன்றை எடுத்தேன். அதில் இந்திய கர்நாடக இசைக்கும் நடனங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தேன். இந்தியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையை மையமாக வைத்தே படம் தயாரிக்கப்பட்டது.

இந்திப்படம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படமாட்டாது என்று எண்ணினேன். ஆனால் எதிர்மாறாக மேற்கு நாடுகளில் நல்ல வரவேற்பை அப்படம் பெற்றது.

நான் விரும்பும் படங்களில் அதுவும் ஒன்று.

எல்லாக் காலத்திற்கும் ஏற்ற படமாக இது இன்னமும் விளங்குகிறது.

கேன்ஸ் திரைப்படவிழாவில் பரிசு பெறுவதற்கு முன்னரே கல்கத்தாவில் எனது முதல் படம் 'பதர் பாஞ்சாலி' அமோக வெற்றியைப் பெற்றது.

வெளிநாடுகளில் எனது படங்களுக்குக் கிடைத்த வெற்றியினால் தான் நான் திரையுலகில் நின்று பிடிக்க முடிந்தது என்று கூறுவது தவறானது. இது உண்மை அல்ல.

இந்தியர்களுக்கு ஏற்றதாக வுள்ள வசனங்களை மொழி பெயர்ப்பதற்கு நான் மிகுந்த சஷ்டப்படுகிறேன்.

மேலைநாட்டு ரசிகர்களுக்காக நான் படம் எடுப்பதானால் வேறு கதைகளைத் தேடிச் சென்றிருப்பேன்.

இப்படி வலியுறுத்தும் சத்யஜித் ரே, வெளிநாட்டுப்படங்களைத் தயாரிக்கும்படி வந்த அழைப்புக்களை நிராகரித்து விட்டார்.

'நான் ஹொலிவூட் சென்று படங்களைத் தயாரித்திருக்க முடியும். பல அழைப்புக்கள் அங்கு இருந்து எனக்கு வந்தன. அவற்றை நான் நிராகரித்து விட்டேன். எனக்கு மேற்கு நாடுகளில் அக்கறை இல்லை.

மண்ணை நேசிப்பவன்

வங்காள மண்ணை நேசிப்பதன் நான். மண்ணின் மைந்வனாக வாழ, செயல்பட விரும்புகின்றேன்.

ஆனால் படத்தயாரிப்பாளராகப் பிரகாசிக்க சர்வதேச சந்தை எனக்கு உதவுகிறது.

வங்காளப் படங்களுக்கு உள்ளூரில் மார்க்கட் குறைவு. வங்காள மொழி பேசும் பங்களாதேஷ் கூட இந்திய வங்காளமொழிப் படங்களைத் தடை செய்து விட்டது. இந்த நிலையில் வெளிநாடுகளில் எனது படங்களுக்கு உள்ள கிராக்கிதான் என்னைப் படவுலகில் வாழவைக்கிறது.

சத்யஜித் ரேயின் கூற்று இது. ★

பாரதிராஜா படத்தில் மீண்டும் கமலஹாசன்

பாரதிராஜா படத்தில் மீண்டும் கமலஹாசன் நடிக்கிறார்.

அம்மன் கிரியேஷன்ஸ் இப்படத்தைத் தயாரிக்கிறது.

16 வயதினிலே படத்தை இந்த நிறுவனமே தயாரித்தது. அதில் கமலஹாசன் நடித்தார்.

இப்போது கமலஹாசனை வைத்து இன்னொரு படத்தைத் தயாரிக்கிறது, இந்த நிறுவனம்.

பிரமாண்டமான முறையில் உருவாக்கத் திட்டமிட்டுள்ள படத்தின் டைரக்ஷன் பொறுப்பை பாரதிராஜா ஏற்றிருக்கிறார். (எ-4)

சிங்கள சினிமாவில் மீண்டும் 'சுஜாதா'

1950களில் 'சுஜாதா' சிங்களத் திரைப்படம்.....

புதி கீர்த்திசேன ஒரு பட்டிக் கலைஞர். அவருடைய பாட்டனார் கொஸ்வாடி என்னுமிடத்தில் வயலட் என்ற பெயரில் படமாளிகை நடத்தி வந்தார்.

புதி, அந்தப் படமாளிகை வாசலில் நின்று 'சுஜாதா' படப்பாடல் புத்தகப்பிரதிகளை விற்றுக்கொண்டிருந்தார்.

இன்று 'புதி'க்கு புத்தம் புதிய படமாளிகை ஒன்று உள்ளது. அது மட்டுமல்ல, அவர் படத் தயாரிப்பாளருமாகி விட்டார்.

இளம்வயதில் பாட்டனாரின் படமாளிகையில் 'சுஜாதா' படம் நூறுநாள் ஓடியது.

ஒவ்வொருநாளும் அப்படத்தைப் பார்த்துச்சாதனை புரிந்தவர் 'புதி' அந்த அளவு அவர் 'சுஜாதா' பைத்தியமாகி விட்டார்.

'புதி' முதலில் தயாரிக்கப் போகும் படம் 'சுஜாதா' ஆகும். அதே கதையைத் திரும்பவும் படமாக்கப் போகிறார்.

1950 களில் இப்படத்தை தயாரித்தவர் சினிமாஸ் அப்பர் கே. குணரத்தினவே அவரே அண்மையில் 'சுஜாதா' வை மீண்டும் தயாரிக்கும் வைபவத்தை தொடக்கி வைத்தார்.

1950 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 'சுஜாதா' வில் பாடிய பின்னணிப் பாடகர்களே புதிய 'சுஜாதா'விலும் பின்னணி பாடுவர்.

ஆனால் பழைய 'சுஜாதா'வில் பாடிய தென் இந்திய பின்னணிப் பாடகி ஜமுனாராணிக்குப்பதிலாக இலங்கைப் பாடகி ஒருவர் பாடுவார்.

'சுஜாதா' வாகச் சபிதா பெரேரா நடிப்பார். ★

வெள்ளித்திரையில்

சொற்சிலம்பம்

போட்டி இல: 102



சொற்சிலம்பம் இல: 102
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: .....
விலாசம்: .....
.....

— இங்கே வெட்டுக —

முடிவு திகதி: 28 - 06 - 1989

இடமிருந்து வலம்:

1. புண்ணியஸ்தலம் 6. வேள்வித்தீயில் தேவர்கள் இடும் உணவு 7. அப்பாவி 8. அளவிடுதல் 9. துன்புறுத்தல் 10. பறவைகளின் சொண்டு 11. சொல் 13. தர்மம் 14. தாழ்ப்பாள் 16. கிரகங்களில் ஒன்று 17. சாபம் கொடு.

மேலிருந்து கீழ்:

1. இரத்தினக்கல்லில் ஒருவகை 2. மாமிசம் 3. தோல் நீக்கிய உள்ளீடு 4. குரங்கு 6. வரிசையாக நிற்கச் செய்தல் 7. கல்யாணவிருந்தில் இது முக்கியம் 10. எண்ணெய் கிணறுகள் உள்ள நாடு 11. எரிப்பதற்கு இது வேணும் 12. நெல்லுக்கு இடையில் காணப்படும் 13. பாம்பு 15. சாக்குப்பை.

நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்திரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் படும்.

தெருவோரத்து ஞானி

- ந. குகநாதன் -

வானத்தில் கருமேகங்கள் ஒன்று கூடி பேச்சு வார்த்தை நடத்தின. அந்தப் பேச்சு வார்த்தையாளர்களை படம் எடுக்க கமரா பிளாஸ்களாக மின்னல். சற்றுநேரத்திற்கெல்லாம்பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததற்கு அறிகுறியாக இடி இடித்தது. 'சோ' என்று மழை கொட்ட மடிக்கத்தொடங்கியது.

தெருவில் மழையை எதிர்பாராது குடையின்றி வந்தவர்கள், மழையில் நனையாதவாறு தலைமேல் கையும், கைக்குட்டையும் வைத்து ஒதுங்க இடந்தேடி ஓடினார்கள். குடையுடன் வந்தவர்களும் மழையின் கொட்டத்தைச் சகிக்க முடியாமல் ஒதுங்கினார்கள்.

கமலநாதனும் மழையைச் சபித்தபடியே கடை ஒன்றின் ஓரமாக ஒதுங்கிக் கொண்டார். மழையில் முற்றாக நனைந்துபோய் நின்றார். அவர் கையில் ஒரு பை நனையாது பாதுகாப்பாக இருந்தது.

உள்ளே பல ஆயிரங்கள் முடங்கி குளிர்காய்ந்துகொண்டிருந்தன. கமலநாதன் பணப் புழக்கம் கூடியவர். அப்போதும் வங்கியிலிருந்துதான் வந்தார். அந்த நகரின் பிரபல வர்த்தகர்களில் அவரும் ஒருவர்; மழைக்கு ஒதுங்கிய கடை பூட்டப்பட்டிருந்தது. கடை வாசலில் நின்று தெருவையே வெறித்தபடி பார்த்து நின்றார்.

கார்களும், பஸ்களும் நிதானமாக சென்றுகொண்டிருந்தன. மழை இல்லாவிட்டால், மினிபஸ்களின் அவசர கோர்ன்களும், மோட்டார் சைக்கிள்களின் கதறலும் அந்த இடத்தையே சுறுசுறுப்பாக்கிக்கொண்டிருக்கும்.

தெருவைக் குத்தகைக்கு எடுத்த மாணவமாணவிகளும் அந்த இடத்தில் தனிக்காட்சி தான்.

எதிர்ப்பக்கமாக இருந்த கடையிலிருந்து ஒரு இளைஞன் ஓடிவருகிறான். கமலநாதன் ஒதுங்கி நின்ற கடை ஓரமாகவே அவனும் ஒதுங்கி நிற்கிறான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக்கொண்டார்கள். இருவரும் வங்கி 'க்யூ'வில் அடுத்தடுத்து நின்றதால், ஏற்பட்ட பரிச்சயம் தவிர அவர்களிடையே அறிமுகம் இல்லை.

ஷேர்ட்டில் விழுந்திருந்த மழைநீரை உதறிவிட்டுக் கொண்டான் அந்த இளைஞன். 'தம்பிக்கு என்னவேலை' என்று கமலநாதன் கேட்க, வேலையிலிருந்து அரசியல்வரை இருவரும் கதைத்து முடித்தனர். ஆனால், இன்னும் மழைவிட்டபாடில்லை.

மழை மேலும் கூட கடை ஓரத்தில் தூறல் அடிக்கத் தொடங்கியது. மேலும் ஒதுங்கிக் கொண்டார்கள். கடைவாசலில் அழுக்குத்துணிகளுடன் ஒரு ஜீவன், மனித ஜீவன்தான். வறுமையின் சின்னமாக, தரித்திரம் என்ற துஷ்ட தேவதையின் அடிமையாகக் காட்சி தந்தான்.

அவன் ஒரு இளைஞன் என்று தெரியாதபடி, முகத்தில் தாடியும், கண்களில் சோர்வும், உடலில் வாட்டமுமாக காட்சிதந்தான். இளமைக்காலத்துக்கான கனவுகளோ, எதிர்பார்ப்புக்களோ, இலட்சியங்களோ அவனிடம் இல்லை.

அடுத்த நேர உணவுக்கு எங்காவதுபோய் வேலைசெய்ய வேண்டும். அப்போதுதான் வயிறு நிரம்பும். என்ன கஷ்டங்கள் வந்தாலும் உழைத்துச் சாப்பிடுவதையும், நேர்மையாக வாழ்வதையும் இவன் கைவிடவில்லை.

'கொடி கொடிது வறுமை கொடிது' 'அதனிலும் கொடிது இளமையில்வறுமை'

கடுகுக்கதை

அவன் இளமையில் வறுமையை அணு அணுவாக அனுபவிக்கிறான். என்றாலும் அவன் மனதில் விரக்தி என்பதே இல்லை.

இடையிடையே கொட்டாவி விட்டுக்கொண்டான். காலையில் மழைதொடங்கியதால், காலைவேளை சாப்பாடு இல்லை. வெற்றுடல், கிழிந்த வேட்டித்துண்டை கிழிசல் வெளியே தெரியாதபடி மறைத்துக்கட்ட முயற்சித்திருந்தான்.

மழைக்குளிர் மற்றவர்களுக்கெல்லாம் குளிராக உணரப்பட, அவன் மரக்கட்டை போல திறந்த மார்புடன் இருந்தான். அவன் இது வரை காணாத மழையா? வெயிலா? பனியா? எல்லாவற்றையும் அனுபவித்து அவன் உடல் பக்குவப்பட்டு விட்டது.

வேலை தேடிச்சென்று, அவன் பெற்ற அனுபவங்கள் அவனை உடலாலும், உள்ளத்தாலும் பக்குவப்படுத்தியது.

கமலநாதன் அந்த இளைஞனைக் கண்டு முகம் சுளித்தார். 'தம்பி இஞ்ச பாத்தியளே இதில கிடக்கிறவனை. இவனை மாதிரி சோம்பேறியள் இருக்கிறதாலதான் எங்கட நாடு உருப்படுகிறது இல்ல'

என்று நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும் காரணிகள் பற்றி ஆய்வு செய்து முடிவு எடுத்து, அதை அருகில் நின்ற இளைஞனுக்கு விளங்கப்படுத்தினார் அவனும் அதை ஆமோதிப்பதுபோல், தலையை ஆட்டினான். ஆனால்,

அவர்கள் கதைத்தது படுத்திருந்த இளைஞனின் காதிலும் விழத்தான் செய்தது. ஆனாலும், அவன் முகத்தில் எதுவித உணர்ச்சியும் தோன்றவில்லை. இதைப் போல, எத்தனை விமர்சனங்களை அவன் கேட்டு இருப்பான். அவை ஒன்றும் அவன் மனதைப் புண்ணாக்கி விடாது.

மழை ஓரளவு குறைந்திருந்தது. சற்று தூரத்தில் மினி பஸ் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. பஸ்ஸைக் கண்டதும் கமலநாதன் அருகில் நின்ற இளைஞனின் முகத்தில் பதற்றம். சுற்றும் முற்றும் பார்க்கிறான் யாருமில்லை.

கமலநாதனின் கையிலிருந்த பையை வெடுக்கெனப் பறித்துக் கொண்டு மினி பஸ்ஸை நோக்கி ஓடுகிறான். கமலநாதன் நடந்ததை உணர்ந்து திகைத்து நிற்க, கடைவாசலில் படுத்திருந்த இளைஞன் அதைக்கண்டு, சுறுசுறுப்பானான்.

அவனும் கடையிலிருந்து இறங்கி ஓடுகிறான். ஓடி பஸ்ஸை நெருங்குகின்றான். மினி பஸ் புட்போர்ட்டில் நின்ற, இளைஞனின் கையில் பணப்பை. ஏதும் நடக்காதது மாதிரி அவன் நிற்கிறான். அதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி அவன் எதிர்பார்க்காத தருணத்தில் பணப்பையைப் பிடுங்கினான்.

அதற்கிடையே கமலநாதன் போட்ட சத்தத்தால் சனக் கூட்டம் கூடிவிட்டது. பணப்பையைக் கமலநாதனிடம் ஒப்படைக்க அந்த இளைஞன் திரும்புகிறான். சனக்கூட்டம் அந்த இளைஞனை நோக்கி வருகிறது. அவர்களுக்கு அந்த இளைஞன் அவன் கையிலிருந்த பணப்பை இரண்டுமே தெரிகிறது.

'டேய் திருட்டு ராஸ்கல் இஞ்ச தாடா அந்தக் காசை' என்று திட்டிக் கொண்டே பணப்பையைப் பிடுங்குகிறார் ஒருவர். பணப்பை கை மாறியதும், அவன் மீது தர்மஅடிகள் தாராளமாக விழுகின்றன. எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கிறான்.

சற்றுத் தூரத்தில், கமலநாதன் பணப்பையுடன் வருபவரைப் பார்த்தபடி நிற்கிறார். நடந்தவை எல்லாம் அவருக்குத் தெரியும்; என்றாலும் அதைத் தடுக்கவில்லை.

சனக்கூட்டத்தின் வெறி தீர்ந்து விடுகிறது. கூட்டம் கலைகிறது. அந்த இளைஞன் அந்த இடத்திலேயே நின்றபடி வானத்தை அண்ணாந்து பார்க்கிறான். கருமுகில்கள் யாவும் கலைந்த தெளிந்த வானம் அவன் கண்ணுக்குத் தெரிகிறது. அவனது மனமும் தெளிகிறது.

'நடப்பவைக்கு நாம் காரணர் அல்ல'

அவன் வாய் முணு முணுக்கிறது. அவன் மனமோ, உடலோ வேதனைப்படவில்லை. அவன் நடக்கிறான். கமலநாதன் பணப்பையுடன் நிற்கிறார்.

கமலநாதன் அவ் இளைஞனைப் பார்க்க அந்த இளைஞன் கமலநாதனைப் பார்க்கிறான். கமலநாதனைப் பார்த்து அந்த இளைஞன் ஒரு புன்சிரிப்பு சிரித்து, அந்த இடத்தை விட்டு நகர்கிறான்.

கமலநாதனின் மனம் ஊசியால் துளையிடப்பட்டது போல வேதனைப்படவில்லை. தான் செய்த தவறை உணர்கிறார் அவர். அந்த இளைஞனைத் தேடிப் பார்க்கிறார். காணவில்லை. மனம் மிக வேதனையால் தவிக்கிறது. தன் கடையை நோக்கி நடை போடுகிறார்.

வழியில் ஓர் பிச்சைக்காரக் கிழவன் எதிர்ப்படுகிறான் அவனை அழைத்து பணம் கொடுக்கிறார் கமலநாதன். தெருவில் கண்ட வறியவர்களுக்கு எல்லாம் பணத்தைக் கொடுக்கிறார்.

அவர் கடையை அடையும் போது, வெறும் பையுடன், நல்லெண்ணங் கொண்ட மனத்துடனும் இருந்தார்.

அந்தத் தெரு ஓரத்து ஞானி தன் புன்சிரிப்பால் கமலநாதனை மாற்றி விட்டான்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வு முழுமை அடைய

இறை நம்பிக்கை அத்தியாவசியம்

'என்மேல் நம்பிக்கையே இல்லையா?'

நான் சொல்லுவதை நம்ப மாட்டீர்களா?'

'நம்புகிற மாதிரியே இல்லையே?' 'நம்பலாமா?'

'யாரையுமே நம்ப முடிவதில்லையே!'

இவை அன்றாட வாழ்வில் நாம் கையாளும் சில வாக்கியங்கள்.

இன்று நாம் நம்பிக்கையை இழப்பதற்குப் பல காரணங்களைக் கூறலாம். சூழ்நிலை காரணமாகலாம். எம்மைச் சுற்றியுள்ள உலகம் குழப்பமுள்ளதாக அமைதியற்றதாக துன்பத்தில் துவள்வதாகக் காணலாம்.

எங்கு நோக்கினும் இன்னல்கள், எதையும் இயல்பாகச் செய்யமுடியாத நிலை, நினைப்பது நடக்குமா என்ற பயம், இவை நம்பிக்கையைக் குறைத்திருக்கலாம்.

தான் நம்பியவர்கள், தனக்கு ஆதரவு என நினைத்தவர்கள், தன்னைக் கைவிட்டுவிட்டனரே, இவி யாரை நம்புவது என்ற அங்கலாய்ப்பு ஒரு புறம். நல்லவன் போல் நடித்து நயவஞ்சகம் புரிந்து விட்டானே என்ற வெறுப்பு- இவற்றைக் காண்பதால், எண்ணுவதால் எழும் வேதனை.

இதை நம் வாழ்வில் பல வேளைகளில் பல நிலைகளில் நாம் கண்கூடாகக் கண்டு கொள்கிறோம்.

கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நம்மில் நாம் நம்பிக்கை கொள்வதும், பிறரில் நம்பிக்கை வளர்ப்பதும்' எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனில் நம்பிக்கை வளர்ப்பதும் அவசியமாகும்.

மனித வாழ்வில் நம்பிக்கை இன்றியமையாததொன்று. நம்பினோர் கெடுவதில்லை என்பது நான்குமறைத்தீர்ப்பு. எல்லா மதமுமே இறைவன் இருக்கிறார், அவர் வழி நடத்துகிறார் என்று கூறுகின்றது. மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி உண்டு. அது நல்லதையே செய்யும் என்ற நம்பிக்கையில் நாம் வாழ்கின்றோம். அந்த சக்தியை அதை அடையவேண்டுமென நம்பிக்கையோடு வாழ்கின்றோம்.

இறை எண்ணம் எந்தளவு உண்டோ அதைப் பொறுத்தே மனிதன் நல்லவனாகவோ அல்லது தீயவனாகவோ வளர்கிறான், வாழ்கின்றான்.

எனவே நம்பிக்கையின் பொருளாக நாம் இறைவனை ஏற்றுக்கொள்கிறோம். மனிதன் முழுமையடைவற்கு இறை நம்பிக்கை தேவையானது. இல்லையேல் மனிதன் தனக்கு முதலும் முடிவும் எதுவென அறியாமல், வாழ்வை வெறுமையானதாக எண்ணுவான்.



மனிதன் பாவங்களால் சூழப்பட்டு, துவண்டு, வெறுப்படைந்து விரக்தியின் விளிம்பிற்கு சென்றவேளையில் கிறிஸ்துவின் பிறப்பு புதிய வாழ்விற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அரசியல் சுதந்திரத்திற்கும் அப்பாற்பட்ட புதிய நம்பிக்கை தருபவராக கிறிஸ்து பிறந்தார்.

கிறிஸ்தவ மறையானது நம்பிக்கையின் மறையாக, கிறிஸ்தவ வாழ்வானது நம்பிக்கை நிறைந்த வாழ்வாக இருந்து வருகிறது.

கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவருடைய செயல்கள், பணிகள், புதுமை, நமக்கு நம்பிக்கை தருபவனாக அமைகிறது.

நமது அருளடையாளங்களும், திருவழிபாடும் நம்பிக்கையோடு வாழ்வதற்குத் தேவையான தைரியத்தையும் அருளையும் பொழிகின்றன. இவை வாழ்வை நம்பிக்கையின் வாழ்வாக மாற்றுகிறது.

கிறிஸ்தவ வாழ்வில் நம்பிக்கையோடு செயல்படத் தெரிந்தால் பலவீனங்கள், துன்பங்கள் அமைதியற்ற நிலைமாறும். வருகிற துன்பங்களைச் சகித்து ஒருவன் நம்பிக்கையோடு செயற்பட்டால், கிறிஸ்தவ வாழ்வின் பொருளைப் புரிந்து கொள்கிறான்.

மற்றவர்களுக்காக கிறிஸ்துவின் பெயரால் துன்புறும் மனநிலையைப் பெறுகிறான். நம்பிக்கையோடு வாழவேண்டும்என இறைவன் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

- அ. சகாயநாதன் -

நம்பிக்கையைத் தந்தது.

முதல் மனிதன் புரிந்த குற்றத்தின் வேளை முதல், மீட்பரின் திருவருகை வரை, மெசியா பிறப்பார், பிறந்து மீட்பார், வாழ்வை அளிப்பார் என்ற நம்பிக்கையோடு யூதமதம் வளர்ந்து வந்தது.

யூதமதம் எதிர்பார்பின் மறையாக, நம்பிக்கை நிறைந்ததாக இருந்தது. பல நூற்றாண்டுகளாகப் பலவாறு முன்னுரைக்கப்பட்டு, செழிப்பதை ஏற்கும் நம்பிக்கை அனுபவபூர்வமாக மாறுகிறது.

கிறிஸ்து வாழ்ந்து காட்டிய வழியில் நம்பிக்கையோடு நடக்கத் துணிய வேண்டும். அதற்காக நாளும் செபிக்க வேண்டும். எனவே நம்பிக்கையின் மாதர்களாக, தவிப்புக்களைக் களைந்து வாழ முற்படுவோம். ★

புறம் பேசாதீர்கள்!

மனிதன் தன் அவயவங்களினால் அதிகம் பிரயோசனம் பெறும் அங்கம் நாக்காகும், இதனைப் பேணிக்கொள்வது இலகுவான காரியமன்று. என்றாலும் இதனைப் பாதுகாப்பதற்கு சிலவழிகளைக் கையாளல் அவசியமாகும்.

இந்நாவின் கெடுதல்களோ அதிகம்: அவை புறம்பேசல், பொய் பேசல், இழிவுபடுத்துதல், அடுத்தவனை ஏசுதல், கோள் சொல்லல், இருவரை சண்டைக்கு இணைத்துவிடுதல், கெட்டவார்த்தைகளைப் பேசுதல் போன்றவைகளினால் ஏற்படும் பிரச்சினைகள் அதிகம். இவைகளை விட்டு நாவு விலகி இருப்பது அவசியமாகும்.

நாக்கு மனிதனின் மிகப் பெரும் ஆயுதமாகும். இதனால் மனிதன், மனிதனை மரணிக்கச் செய்யவும் முடியும், வாழவைக்கவும் முடியும்.

இதனை இறைவன் தன் திருமறையில், 'பேசக்கூடிய நாவையும் இரு உதடுகளையும் கொடுக்கவில்லையா?' —எனக் கேட்கின்றான்.

மனிதன் செய்யும் மிகப் பெரும் தீமையே அடுத்தவனைப்பற்றி அவன் இல்லாத போது மற்றவரிடம் பிரஸ்தாபிப்பது.

அவ்வப்போது இச்செயல் இன்பம் தருவதாயிருப்பினும் இது மிகத்தீமை பயக்கும் ஒருவிடயமாகும்.

ஒருவன் இல்லாதபோது அவனைப் பற்றிப் பேசுவதானது, அவன் மரணித்த பின்னர் அவனுடைய இறைச்சியைச் சாப்பிடுவது போன்றதாகும்.

இது பற்றித் திருமறை பின்வருமாறு கூறுகின்றது. 'உங்களில் ஒருவருக்கொருவர் புறம்பேசாதீர்கள். அப்படி நீங்கள் பேசுவீர்களாயின் உங்கள் சகோதரன் இறந்த பின்னர் அவனது இறைச்சியைச் சாப்பிட விரும்புவீர்களா? நிச்சயமாக விரும்பமாட்டீர்கள்' எனவே இத்தனை பெரிய குற்றத்திற்கு புறம் பேசுகிறவர்கள் ஆளாகின்றார்கள்.

நபிகள் (ஸல்) அவர்களிடம் சில தோழர்கள் புறம் என்றால் என்ன? எனக்கேட்டனர். அதற்கு (ஸல்) அவர்கள்; 'ஒருவர் இல்லாதபோது அவரைப்பற்றி மற்றவரிடத்தில் அவருடைய குறைகளைப் பேசுவது' —எனக் கூறினார்கள்.

அப்போது தோழர்கள், 'அக்குறை அவரிடம் இருந்தாலும்புறம் ஆகுமா? என்றனர். அதற்கு (ஸல்) அவர்கள், 'நிச்சயம் அவரிடம் அக்குறை இருந்தால் புறம்பேசியதாகவே கருதப்படும். அவரிடம் அக்குறை இல்லாதவிடத்து நீங்கள் அவர்மீது பெரிய பழியைச் சுமத்திவிட்டீர்கள்,— என விடைபகர்ந்தார்.

எனவே குறைவிடுவதும், தவறு செய்வதும் மனிதனின் இயல்பு. அதற்காக அக்குறையை அவர் இல்லாத போது பிரஸ்தாபிப்பது விலக்கப்பட்ட (ஹராமான) ஒன்றாகும்.

இவ்விடயங்களில் நாம் மிகவும் பேணுதலாக எமது நாவைப் பாதுகாத்துக்கொள்ளல்வேண்டும். ★

- அபூ ஸனீஹா -

நபிகள் நாயகம் (ஸல்) அருளியவை

● உமக்கு அநீதி இழைப்பவரை நீர் மன்னித்துவிடும். உம்முடன் உறவை முறித்துக் கொள்பவருடன் நீர் உறவு கொள்ளும். உமக்குத் தீங்கிழைத்தோருக்கு நன்மையே செய்யும். உமக்குத் தீமை பயப்பதாயினும் உண்மையே பேசும்.

● நீர் எங்கிருப்பினும் அல்லாஹ்வை அஞ்சும், தீமைக்குப் பின் நன்மையைச் செய்யும். நிச்சயமாக நன்மை தீமையை அழித்துவிடும். மக்களுடன் நற்பண்போடு பழகும்.

● எவர் மார்க்கக் கல்வியைக் கற்றுச் செல்கின்றாரோ அவர் திரும்பும் வரையும் இறைவழியிற் செல்பவராவார்.

● கல்வி மூவகைப்படும். அவை; தெளிவான வசனங்களும், நிலையான சுன்னத் வழிமுறைகளும், நிதமான கடமைகளும்.

● இரு பண்புகள் இறை விசுவாசியிடம் தென்படமாட்டாது. அவை: உயர்ந்த ஒழுக்கமும் தீயகுணங்களுமாகும்.

இலட்சியக் கனவுகளை மழுங்கடிக்கும்

போதைவஸ்து பாவனை!

பொப்பிச் செடியில் இருந்து முதலில் தயாரிக்கப்படுவது அபின்.

இரண்டாவதாக மோர்ஃபன் தயாரிக்கப்படுகிறது.

மூன்றாவதாக ஹெரோயின் தயாரிக்கப்படுகிறது.

அபினிலும் பார்க்க பத்து மடங்கு வீரியமானது ஹெரோயின்.

ஹெரோயினை மூக்குப் பொடி போடுவது போல சிலர் போட்டுக்கொள்வார்கள்.

வேறு சிலர் நாக்கில் தொட்டுவைத்துச் சுவைத்து அனுபவிப்பர்.

இன்னொருமுறை (Chasing the Dragon) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் 'பேயைத் துரத்தும் முறை' என்பது.

சிகரெட்பக்கட்டில் உள்ள ஈயத்தாளின்மேல் ஹெரோயினை வைத்து கீழே சூடு காட்டி உறிஞ்சுவது.

'சிரிஞ்' மூலம் கையில் உள்ள நரம்பில் ஹெரோயினைத் திரவ ரூபத்தில் ஏற்றிக்கொள்ளுவதும் உண்டு. அடிக்கடி ஏற்றிக்கொள்வதால் நரம்பு தடித்துவிடும். பின்னர் கை நரம்பில் ஏற்றிக்கொள்ளமுடியாது.

இறுதியாக கழுத்தில் உள்ள நாளத்தினூடாக 'சிரிஞ்' மூலமாகத்தானே ஏற்றிக்கொள்வது. இது அதிபரவசநிலை ஒன்றைப் பாவனையாளருக்குக் கொடுக்கிறது. கழுத்தில் இருந்து 'சிரிஞ்'ஐ எடுப்பதற்கு முன்னரே அவர் 'அதிபரவச' நிலையை அடைந்துவிடுவார். 'சிரிஞ்' கழுத்தில் தொங்கிக்கொண்டிருக்கும்.

யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் இப்படிக் கழுத்தில் ஊசி ஏற்றி ஹெரோயின் பாவிக்கும் 40-45 பேர் இருக்கின்றார்கள் என்பதை அறிந்தபோது ஆச்சரியமும் அதிர்ச்சியும் ஏற்பட்டது.

அவர்களில் பெண்களும் இருக்கின்றனர்.

இப்படி போதை பாவனைக்கு ஆட்பட்ட சிலரைப் பேட்டி காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. சிலர் தங்கள் அனுபவங்களைத் தெரிவித்தனர்.

> வட்டுக்கோட்டை விளாத்தித்தோட்டத்தில் வட்டு. இளைஞர் உடல், உள விருத்திச் சங்கமும், வட்டு. மகளிர் இலக்கிய வட்டமும் இணைந்து நடத்திய தியாகி கந்தசாமி நினைவுதினக் கருத்தரங்கில் இடம்பெற்ற 'மதுபோதைப் பொருள் பாவனை' பற்றிய உரை இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

ஒருவரைக் கேட்டேன்: 'ஹெரோயினைப் பாவித்ததும் எப்படி இருக்கிறது?'

'இந்த யாழ்குடா நாட்டில் நான் ஒருவன் மட்டும் தான் இருப்பதுபோன்ற பரவசநிலை ஏற்படுகிறது'- அந்த நபர் பதிலளித்தார்.

இன்னொருவர் சொன்னார்: 'நிலத்திலும் அல்ல, வானத்திலும் அல்ல- இரண்டுக்கும் இடையில் நிற்பது போன்ற பரவச நிலையை அனுபவிக்கக் கூடியதாக இருக்கிறது'-

போதைவஸ்து பாவனையில் ஈடுபடுபவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கிறார்கள்; மற்றவர்களுக்கும் பரப்புகிறார்கள். மற்றப்படி தானுண்டு என்ற மாதிரி தனி உலகில் சஞ்சரித்துக் கொள்வார்கள்.

போதைவஸ்துப் பாவனையில் நம்மவர்கள் அடிமையாவதற்குக் காரணம் என்ன?

முதற்காரணம் தலைமுறை இடைவெளி (Generation Gap):

பெரியவர்கள் பிள்ளைகளுக்கு உரியஇடம் கொடுப்பதில்லை.

நானு, நீயா முந்திப்பிறந்தது? நான் சொல்வதைக் கேட்டு நட - இந்த ரீதியில் பெரியவர்கள் பிள்ளைகளை நடத்துகிறார்கள்.

ஏதாவது ஒரு விஷயத்தில் விரக்தியடையலாம். குறிப்பாகக் கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் விரக்தி முக்கியமானதாகும்.

தனிமை (Lone liness) யும் போதை பாவனை பரவ ஒரு காரணம்.

பிள்ளைகளைத் தனிமையாக இருக்க விடுவது மிகவும் ஆபத்தானது.

இவ்வளவுக்கும் அடிப்படைக் காரணம் ஒன்று தான் அது குழந்தை வளர்ப்பில் பெற்றோர் விடும் தவறுகளே ஆகும்.

பாதிப்பு

போதை பாவனையால் பல வகை நோய்களுக்கு ஆளாக வேண்டி நேரிடுகிறது.

புற்றுநோய், சிரோஸிஸ், அல்சர் மற்றும் மனநோய்களும் ஏற்படுகின்றன,

போதைவஸ்து பாவனையில் ஈடுபடுவோர் பெரும்பாலும் ஒரு 'சிரிஞ்' சையே பாவித்துப் போதை ஊசி போட்டுக் கொள்வர். இதனால் எய்ட்ஸ் நோய் பரவும் அபாயமும் உண்டு.

கசிப்புக் குடிப்பவர், குடிக்கத் தொடங்கி ஐந்து ஆண்டுகளுள் மரணத்தைத் தழுவுவார்.

போதைவஸ்து பாவிப்பவருக்கு, அது ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளில் மரணம் வந்து விடும்.

இலட்சிய வாழ்க்கை

போதைவஸ்து பாவிப்பவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலமே இல்லை. சமூகம் அவர்களை மட்டுமல்ல, அவர்களின் குடும்பத்தையே மதிக்காது.

நமது சமூகத்தில் போதை பாவனைத் தொல்லை பரவாமல் இருக்கக் குழந்தை வளர்ப்பில் அதிக அக்கறை காட்ட வேண்டும். அவர்களுக்குத் தலைமைத்துவப் பண்பை வழங்கவேண்டும்.

இளைய தலைமுறையைப் போதைப் பேயில் இருந்து பாதுகாக்கப் பெற்றோர் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

இலட்சியங்களைப் பாழடிக்கக்கூடிய பயங்கரமான பொருள் போதைவஸ்து.

ஹெரோயினுக்கு அடிமையாக அதனை ஒரே ஒரு முறை பாவித்தாலே போதும்.

பரம்பரைக் கனவுகள், இலட்சியம், பண்பாடு மற்றும் கலாசாரம் ஆகியன பாதுகாக்கப்பட வேண்டுமானால் போதைவஸ்து பாவனை பரவாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ★

- எஸ். சண்முகராஜா -

பற்றற்றவாழ்வுஒன்று தான் ஆனந்தத்தைத் தரும்!

நிரந்தரமான பேரானந்தமே இறைவனின் வடிவம். இறைவனின் சந்நிதியில் முழுமையான அமைதியும் அதில் தோய்ந்த பரிபூரண ஆனந்தமுமே நிலவுகிறது.

எனவேஇறைவன் படைத்த ஜீவராசிகளின் மத்தியிலும், இதேபோன்ற பேரானந்த நிலைதான் நிலவவேண்டும். ஆனால் உண்மை நிலவரம் இதற்கு மாறாகவல்லவா இருக்கிறது...?

இதற்குக் காரணம் நமது மதிப்பீடுகள் தவறான அடிப்படையில் உருவாகி இருப்பதுதான். செல்வத்தில் புரண்டு சுகங்களை அனுபவிப்பது மகிழ்ச்சிகரமானது என்றும்,

வறுமையில் வாடி நோய் நொடிகளை அனுபவிப்பது துன்பம் என்றும் நாம் முடிவு செய்துகொண்டு விட்டிருக்கிறோம்.

இவை ஏற்றத்தாழ்வான இரண்டு வேறுபட்ட நிலைகள் என்றும் கருதுகிறோம். உண்மையில் இவை பிரமைகளே தவிர நிரந்தரமான நிலைமைகள் அல்ல என்பது நமக்கு உறைப்பதில்லை. இந்த இரண்டுக்கும் மேம்பட்ட நிரந்தர நிலையே ஆனந்தம் என்பது.

நாராயணத்தில், 'ஏற்றத்தாழ்வான நிலைகளை நான் ஏற்படுத்தவில்லை. அவை நீங்களாகவே கற்பித்துக்கொண்ட பாவனைகள் என்று பகவான் தெளிவாகக் கூறுகிறார்.

மனிதன் கட்டுண்டு சுகத்திலோ, துக்கத்திலோ உழல்வதற்குக் காரணம் 'பற்று' தான். இந்தப்பற்றை அறுத்தால் ஆனந்தம் எது என்று விளங்கிவிடும்.

சுகதுக்கங்களை அனுபவிப்பதில் தவறில்லை. ஆனால் அவை வெறும் பாவனைகளே என்பதை எப்போதும் உள்ளூர உணர்ந்துகொண்டிருக்க வேண்டும். இவ்வாறு இருந்து பழகிவிட்டால் அவற்றின் பாதிப்பு நம்மை அணுகாது.

சுகம் என்பதைத் தீவிரமாக பரிசீலனை செய்துபார்த்தால் அது இறுதியில் நம்மைத் துக்கத்துக்குத்தான் அழைத்துச் செல்கிறது என்பது விளங்கும்.

இதேபோல் துக்கத்தைப் பற்றி நிதானமாக யோசித்துப்பார்ப்போமானால் நாம் துக்கப்படவேண்டிய அவசியமே இல்லை என்பது புலனாகும்.

நாம் எப்போதும் ஆனந்த நிலையில் இருந்துகொண்டிருக்க வேண்டியவர்கள். நமது அறியாமையினால்தான் சுகப்பட்டுக் கொண்டிருப்பது போலவும், துக்கப்பட்டுக்கொண்டு இருப்பதுபோலவும் பிரமையில் மூழ்கிக்கிடக்கிறோம். ★

பொது அறிவுப்போட்டி இல. 28

1. ஐவகை நிலங்களில் ஒன்று? ... ... மல்லிகை / முல்லை
2. நிலையானது எது? ... ... சத்தியம் / தர்மம்
3. இதற்கும் பொங்கும் தன்மையுண்டு? ... ... கடல் / உள்ளம்
4. எறும்பு ஊரும் வேகம் மணிக்கு? ... ... 720 அடி / 50 அடி
5. போரில் பீஷ்மர் இறந்தது? ... ... 10 ஆம் நாள் / 8 ஆம் நாள்
6. பெண்ணுக்கு அழகு எது? ... ... சிரிப்பு / மௌனம்
7. கடவுளுக்குச் சமமானவர்? ... ... குரு / பெற்றோர்
8. ஸ்ரீ இராமர் வழிபட்ட தெய்வம்? ... ... லிங்கம் / மகாவிஷ்ணு
9. சகுந்தலையின் தாய்? ... ... மேனகை / திலோத்தமை
10. கிரகங்களில் ஒன்று? ... ... வெள்ளி / தங்கம்
11. அணுவராலும் பின்பற்றக்கூடியது? ... ... துறவறம் / இல்லறம்
12. சப்தத்தீவுகளில் ஒன்று? ... ... நயினாதீவு / இலங்கைத்தீவு

பெயர்:- .....

விலாசம்:- .....

.....

பொது அறிவுப்போட்டி இல: 27
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

..... இங்கே வெட்டுக .....

நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 5 - 07 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் மாறும் குருபகவான் தரப்போகும் புதிய பலன்கள்

குருபகவான் ரிஷபத்தில் இருந்து மிதுன ராசிக்கு இம்மாத இறுதியில் பெயர்ச்சியாகிறார்.

ஓராண்டு காலம் மிதுன ராசியில் சஞ்சரிக்கப் போகும் குருபகவான் பன்னிரண்டு ராசிக்காரர்களுக்கு அளிக்கப்போகும் பொதுவான பலன்கள் இங்கு தரப் படுகிறது.

வருகிற செப்டம்பரில் வரும் ராகு - கேது இடப் பெயர்ச்சியையும் அனுசரித்து இப் பலன்கள் வாக்கிய பஞ்சாங்கப்படி கணிக்கப்பட்டுள்ளன.

மேஷம்

தொழில் - உத்தியோகத்தில் புதிய திருப்பங்கள் வரும்; வளர்ச்சி காணப்படும். செலவுகளும் அமைதியின்மையும் நீங்கி விடும்.

கலை, அரசியல், துறையினர் எதிர்பார்த்த நன்மைகளைப் பெறலாம்.

இளம் வயதினருக்குக் கல்வி உத்தியோகம், திருமண முயற்சிகளில் அனுகூலம் பெறலாம்.

எதிர்பார்த்த பணம் வரும். பூர்வீக சொத்துக்கள் சிலருக்கு வந்து சேரும்;

சுய முயற்சியாலும் பொன்னும் பொருளும் மண்ணும் மனையும் பெறலாம்.

செப்டம்பர் 3 முதல் ராகு-கேது பெயர்ச்சியினால் மேட ராசிக்கு நன்மை இல்லை. திசா புத்தி மோசமாக உடையோர் நிலை பாதிப்படையலாம். மற்றப்படி மேட ராசிக்கு மேன்மையே.



ரிஷபம்

ஓராண்டு காலமாய் அட்டமத்துச் சனியால் அல்லல் பட்ட நிலை ஓரளவு மாறும். தொழில் பொருளாதார நிலையின் முடக்கம் கொஞ்சம் நீங்கி விடும்.

உத்தியோகம் சம்பந்தமாக இருந்து வந்த பிரச்சினை ஒய்ந்து விடும். வீடு, நிலம், வாகனங்கள், யந்திரம் சம்பந்தமாக வழக்குகள் இருந்தால் நீங்கி விடும்.

குடும்ப வாழ்வில் தொடர்ந்து வந்த போராட்டங்கள் நீங்கி விடும். எதிர்கால நல்வாழ்வுக்குப் புதியதோர் திருப்புமுனை ஏற்படும்.

வரும் ஓராண்டு காலமும் சனி அட்டமத்தில் சஞ்சரிப்பது நல்லதல்ல. திசா புத்தி மோசமாக உடையோர் பாதிக்கப்படலாம். தொழில், வியாபாரத்தில் பேரிழப்பும் வரலாம். திசா புத்தி நன்கமைந்தோர் மட்டும் வாழ்க்கைப் பொருளாதாரம் தொழில் துறையில் வீழ்ச்சி அடையாமல் தாக்குப்பிடிப்பர். நிலையான தொழிலைக் கைவிட்டுப் புதிய தொழில் முயற்சியில் இறங்கக்கூடாது.

எவினும் கடந்த ஆண்டை விட வரும் ஆண்டில் சகல துறைகளிலும் ஓரளவு முன்னேற்றமான காலம். வருங்காலத்தில் எதிர்பார்க்கும் நன்மைகள் யாவையும் போராடிப் பெறலாம்.

நிதானமாய், சிந்தித்துச் செயற்பட்டால் விபரீத விளைவுகள் வராது. பொறுமையுடன் செயல்பட்டால் வரும் ஓராண்டு காலத்தையும் பெருமையுடன் ஓட்டி விடலாம். மற்றப்படி இந்த ராசிக்கு வியாழமாற்றம் பாதகத்தைச் செய்யாது.

மிதுனம்

வாழ்க்கை, பொருளாதாரம், தொழில்துறையில் முன்னேற்றமான திருப்பங்கள் வரும்.

ஓராண்டு காலமாகத் தொடர்ந்து வந்த வேதனை, சோதனை மறைந்து விரும். குடும்ப வாழ்வு மகிழ்ச்சிகரமானதாக அமையும்.

புதிய சிந்தனைகள் அலை மோதும். புதிய திட்டங்களை வகுத்துக் காலத்தை அனுசரித்து செயற்படுவதால் வெற்றியும் பெறலாம். உடல் நலம், மனத்தெளிவு உருவாகும்.

நண்பர்கள் உதவி இருக்கும். வீடு, நிலம், வாகன வசதிகளைச் சிலர் பெறலாம்.

ராகு-கேது மாற்றம் பணத் தேவையை அதிகமாக்கி அமைதியைக் குறைக்கலாம்.

குறிப்பாக குரு பெயர்ச்சி இந்த ராசிக்கு ஓராண்டு காலமும் உயர்வையே தரும்.



கடகம்

வாழ்க்கை, பொருளாதாரம் மற்றும் தொழில்துறையில் பாதிப்பு வரலாம்.

விரோதம், யாரையும் பகைத்துக் கொள்ளும் நிலையும் ஏற்படலாம்.

இந்த ராசிக்காரருக்குப் பொறுமைதான் பெருந் தீமைகளைத் தவிர்க்கும் கேடயமாகும். கௌரவப் பிரச்சினையால் நிலையான யோகத்தை சிலர் இழந்து விடலாம்.

அதிக செலவினத்தால் சிலர் கடன்படவும் கைப் பொருளை இழக்கவும் நேரிடும்.

சாதகப்படி திசாபுத்தி நன்கு அமைந்தோர் நிலை பெரிதும் பாதிக்காது.

ராகு - கேது மாற்றம் பிரச்சினைகளை உருவாக்கலாம். எதிர்பாராத நிகழ்ச்சிகளால் மன அமைதி குறையலாம். இல்வாழ்வில் இன்னல்கள் ஏற்படலாம். சுற்றத்தாரோடு மனக்கசப்பும் வரலாம்.

பொதுவாக இந்த ராசிக்கு பலவகைகளிலும் பிரச்சினைகளை உருவாக்கும் சனி மட்டும்தான் யோகமளிக்கிறது. வாழ்க்கை, பொருளாதாரம், தொழில் துறையில் நன்மைகளைச் செய்யலாம்.

சிம்மம்

வாழ்க்கை, பொருளாதாரம், தொழில், உத்தியோகம் ஆகிய துறைகளில் முன்னேற்றமான திருப்பங்கள் வரும்;

கடந்த ஓராண்டு காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு எல்லாம் தீர்வு கிடைக்கலாம்.

இளம் வயதினருக்கும், கல்வி - உத்தியோகம் - திருமண முயற்சிகளுக்கும் வெற்றி கிடைக்கும்.

உடல் நலம் தரும். துன்பங்கள் நீங்கும். கடந்த காலத்தில் இருந்த மோசமான நிலை ராகு - கேது மாற்றத்தின் பின் பூரணமாக நீங்க இடமுண்டு.

அடுத்த ஓராண்டு காலமும் யோகமாகும். தொழில் - வியாபாரம் லாபம் தரலாம். புதிய தொழில் முயற்சி வெற்றிதரும். சிலர் வீடு - வாகனம் - நிலம் வசதிகளைப் பெறலாம்.

குழந்தைகளால் உள்ள குழப்பநிலை நீங்கும். அவர்களால் எதிர்பார்த்த நன்மைகளும் சேர்ந்துவிடும்.

குரு பெயர்ச்சி இந்த ராசிக்கு மறுமலர்ச்சி - தொழில் வளர்ச்சிக் காலமாகும்.

கன்னி

பொருளாதாரம், தொழில், உத்தியோகம், வாழ்க்கை ஆகிய துறைகளில் புதிய மாற்றங்கள் வரும். சிலருக்கு இடமாற்றத்தை உருவாக்கும்.

திசா புத்தி மோசமாக உடையோருக்கு உத்தியோகம், தொழில் சம்பந்தமாகப் பிரச்சினைகள் வரலாம். எதையும் நிதானமாய் சிந்தித்துச் செயல்படுவது அவசியம்.

சிலருக்குப் பெற்றோர் நலமும் வேறு சிலருக்கு வாழ்க்கைத்துணை நலத்தையும் பாதிக்கலாம்.

குடும்பத்திலும் தொடர்ந்து செலவுகள் சிலரைக் கடனாளியாக்கக் கூடும். சிலர் வீடு, நிலம், வாகன வசதிகளை இழக்கவும் நேரிடும். நிலையான தொழில் ஸ்தானத்தில் நெருக்கடியாகப் பிரச்சினைகளை உருவாக்காமல் கவனத்துடன் நடப்பது அவசியம்.

ராகு - கேது மாற்றம் பெரிய நன்மைகளைச் செய்து விடாது. செலவுகள் வரலாம். புதிய கடன் படவும் நேரலாம்.

பிள்ளைகளால் எதிர்பார்த்த நன்மை வராமற் போகலாம். எதிர்பார்த்த நல்ல வாய்ப்புக்கள் நழுவிப் போகவும் பலன் உண்டு.

குருபார்வையால் பெருமை குறையாது. அதன் வலிமை குன்றாது. கதிரவன் வரவால் காரிருள் நீங்கும் என்பது போல் குரு பார்வையால் பார்க்கும் இடம் எல்லாம் பிரகாசமானது.

மனம் சோர்ந்து விடாமல் தொடர்ந்து கடமைகளைச் செய்தால் குருபகவான் கெடுதல்களைச் செய்யமாட்டார். என்றாலும் இம்மாற்றம் இந்த ராசிக்குச் சாதகமாக இல்லை.

துலாம்

வாழ்க்கை, பொருளாதாரம், தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்ந்த நிலைக்கு இடமுண்டு.

இளம் வயதினர்க்கும் கல்வி, உத்தியோகம் மற்றும் திருமண முயற்சிகளில் அனுகூலம் அடையலாம். சிலர் வீடு, நிலம், வாகன வசதிகளும் பெறலாம்.

அரிய நல்வாய்ப்புக்கள் எதிர்கால நல்வாழ்வுக்குப் புதிய அடிப்படையாய் அமையும்.

தொழில் துறையில் முன்னேற்றமான காலம் உண்டு.

ராகு - கேது மாற்றம் இவர்கள் வாழ்க்கையில் புதிய திருப்புமுனையாக அமையும். உத்தியோகத் துறையினருக்கு எதிர்பார்த்த மாற்றம் கிடைக்கும்.

சனிபகவான் சஞ்சரிக்கும் இரண்டரை ஆண்டுகளும் அளப்பரிய செல்வங்களை அள்ளி வழங்கும் பலன் உண்டு.

ஜாதகப்படி திசாபுத்தி மோசமாக உடையவர்கள் மட்டும் தான் கொஞ்சம் பாதிக்கப்படலாம்.

மாணவர்கள் மட்டும் கல்வியில் முழு அக்கறை கொண்டு படித்தால்தான் வெற்றிபெற முடியும்.

இல்லம் சிறக்கும். மன மகிழ்ச்சி, உடல்நலம் நன்றாக இருக்கும்.

குருப்பெயர்ச்சி, கடந்த ஓராண்டு காலமாக அட்டமத்துக்குருவால் அல்லற்பட்ட அமைதியற்ற சூழ்நிலையை மாற்றி நன்மை செய்யும்.



விருச்சிகம்

வாழ்க்கை, பொருளாதாரம், தொழில்துறையில் நெருக்கடியான பிரச்சினைகள் உருவாகலாம். பணம் தங்காது. [illegible] பணம் பலமுறை [illegible] யான செலவுகளைக் காலம் கடத்தாமல் செய்ய வேண்டும். பணம் வருவதும் போவதும் ரொக்கட் வேகத்தில் இருக்கும். கடன்பட்டாவது சிலர் வீடு, நிலம், வாகன வசதிகளைப் பெறுவது நல்லதாக இருக்கும்.

குரு அட்டமத்தில் சஞ்சரிக்கும் ஓராண்டு முழுவதும் பொருளாதார நெருக்கடி மிகுந்து வரும்.

திசாபுத்தி மோசமாக உடையோர் புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவது வெற்றியளிக்காது. நிலையான தொழில், உத்தியோகத்தை இழந்து விடாமல் பாதுகாப்பது அவசியம்.

குடும்பம், தொழில் ஸ்தாபனம் ஆகியவற்றில் புயல் வீசாமல் எச்சரிக்கையாக நடக்கும் காலம்.

ஏழரைச்சனி, குடும்பம் தொழில்துறைகளில் மன அமைதியைக் குறைக்கும். மருத்துவச் செலவும் வரலாம். வாகனம், யந்திரம் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் குறித்து உஷாராக இருக்க வேண்டும்.

ராகு - கேது மாற்றத்தின் பின்னர் தொழில் இருப்பிடம் சம்பந்தமாக தொடர்ந்துவந்த போராட்ட சூழ்நிலை மறையும். தொடர்ந்து முயற்சிப்பின் அனுகூலமான காலம் வரலாம்.

குரு பெயர்ச்சியால் திசாபுத்தி மோசமாக உடையவர் மட்டும் தான் பாதிக்கப்படுவர். மற்றவர்கள் கடுமையான செலவுகளால் கடனாளி ஆகலாம்.

தனுசு

வாழ்க்கை, பொருளாதாரம், தொழில் உத்தியோகத்தில் முன்னேற்றமான திருப்பங்களுக்கு இடமுண்டு.

ஓராண்டு காலம் காணப்பட்ட அலைச்சல், அமைதியின்மை ஓரளவு நீங்கும் சாத்தியம் காணப்படுகிறது.

எதிர்கால நல்வாழ்வுக்கு புதியதோர் மாற்றம் உருவாகும் காலம் தென்படும்.

உடல் நலம் தேறும். எதிர்பார்க்கும் காரியங்கள் அனுகூலமாகும் காலம். சிலருக்கு வீடு, நிலம், வாகன சுகம் உண்டு. வியாபாரம், தொழில் வளர்ச்சி காணும். புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும்.

வாழ்க்கையில் முன்னேற்றம் பெறும் நல்ல நேரம் வந்துவிட்டது என்று சொல்லலாம்.

ராகு - கேது மாற்றம் நன்மைகளை அதிகரிக்கும். இல்லம் சிறக்கும். உடல் நலம் பெருகும். நண்பர்கள், உறவினர் மத்தியில் நன்மதிப்பு.

திசா புத்தியும் நன்கு அமைந்தால் இந்த ராசிக்காரர்களின் எதிர்காலம் உண்மையிலேயே ஒளிமயமாகலாம்.

பொருளாதார நெருக்கடி நீங்கும். சிலரை தேடி திடீர் அதிஷ்டம் வரலாம்.

கும்பராசிக்காரர்களுக்கு மறுமலர்ச்சியை இம்மாற்றம் கொண்டு வரப்பலன் உண்டு:

மீனம்

பொருளாதாரம், வாழ்க்கை, தொழில், உத்தியோகம் ஆகிய துறைகளில் புதிய திருப்பங்களுக்கு இடமுண்டு.

தொழில், இருப்பிடம் சம்பந்தமாகச் சிலருக்கு மாற்றங்கள் வரலாம்.

தொழில் ஸ்தானத்தில் புதிய நெருக்கடி உருவாகலாம். தொழில் வளர்ச்சி, குடும்ப மகிழ்ச்சி ஆகியவற்றுக்குப் புதிய முதலீடுகளைச் செய்ய வேண்டி ஏற்படலாம்.

உத்தியோகத்துறையினர் சிலருக்கு எதிர்பாராத மாற்றமும் மன அமைதியின்மையும் கொண்டு வரலாம்.

தொழில் வளர்ச்சிக்கு இடமிருக்கிறது. அதற்காக நிலையான தொழில் உத்தியோகத்தை இழந்துவிடலாகாது.

ராகு - கேது இடமாற்றம் ஓரளவு நன்மை அளிக்க இடமிருக்கிறது.

போட்டிகள், வழக்குகள் குறையும். உட்பூசல்கள் மறையும். புதிய முயற்சிகள் பலன் அளிக்கும்.

எதிர்பார்த்த பணம்வரும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் எதிர்பார்க்கப்பட்ட நல்ல முயற்சிகள் சிறு சமயம் தடைப்படக்கூடும்.

குடும்பம் - தொழில் ஆகிய துறைகளில் பிரச்சினைகள் அலைமோதும் பலன் உண்டு. இதைச் சமாளிப்பதே இந்த ராசிக்காரருக்கு பெரிய சவாலாக அமையலாம். ★

கும்பம்

வாழ்க்கை, பொருளாதாரம், தொழில், உத்தியோகம் ஆகிய துறைகளில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

கலை, அரசியல் துறையினருக்கு செல்வம், செல்வாக்கு, பெரும்புகழ் சேரும். இளம் வயதினருக்கும் கல்வி, உத்தியோகம், திருமணம் முயற்சிகள் வெற்றியளிக்கும்.

எதிர்பார்க்கும் காரியங்கள், நீண்டநாள் முயற்சிகள் அனுகூலமாகும் காலம். சிலருக்கு வீடு, நிலம், வாகன சுகம் உண்டு. வியாபாரம், தொழில் வளர்ச்சி காணும். புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும்.

வாழ்க்கையில் முன்னேற்றம் பெறும் நல்ல நேரம் வந்துவிட்டது என்று சொல்லலாம்.

ராகு - கேது மாற்றம் நன்மைகளை அதிகரிக்கும். இல்லம் சிறக்கும். உடல் நலம் பெருகும். நண்பர்கள், உறவினர் மத்தியில் நன்மதிப்பு.

திசா புத்தியும் நன்கு அமைந்தால் இந்த ராசிக்காரர்களின் எதிர்காலம் உண்மையிலேயே ஒளிமயமாகலாம்.

பொருளாதார நெருக்கடி நீங்கும். சிலரை தேடி திடீர் அதிஷ்டம் வரலாம்.

கும்பராசிக்காரர்களுக்கு மறுமலர்ச்சியை இம்மாற்றம் கொண்டு வரப்பலன் உண்டு:

படிப்பினை தரும் சிறுகதை!

20 - 5 - 89 சஞ்சீவியில் வெளியான 'நன்றி மறந்த சமுதாயமே!' தலைப்பில் நவாலியூர் சி. என். செல்லத்துரை அவர்களின் சிறுகதை சமுதாயத்திற்கு படிப்பினையாக அமைந்துள்ளது.

எமது சமூகத்தின் ஒரு பகுதியினர் படும் அவஸ்தையை கதை சுட்டிக்காட்டியது.

சமூக நிலைமைகளைப் பிரதிபலிக்கும் இதுபோன்ற சிறுகதைகளை வரவேற்கின்றோம்.

—நீதா தாமோதரம்பிள்ளை.

உலக அதிசயங்களைத் தரும் சஞ்சீவி!

உலக அதிசயங்களை ஒவ்வொரு சனிக்கிழமையும் உடனுக்குடன் அறியக்கூடியதாக இருக்கிறது.

சஞ்சீவியில் வரும் ஆக்கங்கள் எல்லாம் மிகச்சிறந்தவை.

சனிக்கிழமை என்றால் சஞ்சீவியைப் பார்க்கவேண்டும். அப்போதுதான் திருப்தியடைகின்றேன்.

களிப்பூட்டும் சஞ்சீவி!

—அனலைதீவு சங்கர்.

வாரத்தில் ஒருமுறை மலரும் சஞ்சீவி மலர் அடுத்த வாரம் வரை களிப்பூட்டுகிறது.

மீண்டும் மீண்டும் படிக்கத்தூண்டுகிற சஞ்சீவியே உன்னிடமுள்ள அதிசயம்தான் என்ன?

—நாச்சியாதீவு அபுஸ்னிஹா உம்முஸ்னிஹா.

மனதை உருக்கிய தேவியின் சபதம்!

10 - 6 - 89 சனிக்கிழமை சஞ்சிகையில் வெளிவந்த 'தேவியின் சபதம்' என்ற சிறுகதையைப் படித்ததும் என் உள்ளத்திலே எழுந்த உணர்வலைகள் கட்டுப்படுத்தமுடியாத காட்டாற்றுவெள்ளமாய் கரைபுரண்டோடியது.

எமது சமுதாயத்திலே புரையோடிக்கிடக்கின்ற சீதனமென்ற கொடிய நோயினால் எத்தனையோ இளம் பெண்கள் பூவிழந்து பொட்டிழந்து வாழாவெட்டியாகி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்திலும்கூட தாசனைப்போன்ற ஆண்கள் இருக்கத்தான் செய்கிறார்களென்பதை நினைக்கும்போது வியப்பாக இருந்தது.

பசுமையான நினைவுகளோடு பஞ்சணையிலே சுகம்காண வேண்டிய பாவையவள் சீதனப்பேயின் சீற்றத்தால் தரிசனத்திற்கு உதவா "சாக்கடைப் பூவாக" தடுத்து நிறுத்தப்பட்டபோது, அவள் உள்ளத்திலே எழுந்த உணர்வலைகளின் பிரதிபலிப்பு, நிச்சயம் சீதனத்தை எதிர்பார்க்கும் ஆண் வர்க்கத்தினரை தலைகுனிய வைத்திருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை!

காலமறிந்து கதை தந்த சஞ்சீவிக்கு என்பாராட்டுக்கள்.

— நயினையூர் இ. சிவனேஸ்.

1. பரலோகத் தின்நீதி மன்றங்களில் - இறை
அறம்கூற எழுந்தங்கு தோன்றுகிறார்
நீதிபதி களாம் தேவர்கள் - அந்த
ஆதிப ரன்நீதி விசாரிக்கின்றார்
2. நீதியின் வழக்காடு மன்றங்களில் - உள்ள
நீதியின் வழக்குரை அரசர்களே
எத்தனை காலந்தான் நீதியற்ற - அந்த
எத்தரை துட்டரை நீங்களெல்லாம்
தப்புவித் தேகாக்கப் போகின்றீர்கள் - இன்னும்
இப்புவி வாழ்பொய்யர் புரட்டருக்கு
தவியான சலுகையும் - ஒத்தாசையும் - தீய
வழியாகச் செய்திடப் போகின்றீர்கள்
3. உண்மையில் நாதியே அற்றவர்கள் - வறுமைத்
தன்மையில் ஏழையாய் உள்ளவர்கள்
சிந்தையில் துன்பமே கொண்டவர்கள் - பெற்ற
தந்தையில் லாமலே தொந்தவர்கள்
அடிமையே ஆகிநல் வாழ்வுகெட்டு - என்றும்
விடிவையே காணாது ஒடுக்கப்பட்டு
தாழ்வுற்று அடக்கப்பட் டுள்ளவர்கள் - புவியில்
வாழ்வற்று உணவுக்கே அலைபவர்கள்
ஆகிய பேர்களைத் தானேநீங்கள் - உங்கள்
கூரிய அறிவினால் தப்புவித்து
காத்திட மீட்டிட வேண்டும்இங்கு - நீதி
ஏற்றிட போற்றிட வேண்டும்நன்கு
4. இவ்வகை யாகவே பாதிப்புற்று - வாழ்வில்
பலவகை தேவைகள் கிடைத்திடாமல்
நலிவுற்று வாழ்வோரை இன்னுமிங்கு - ஒரு
விடிவுற்று இருக்கின்ற ஏழையரை
காப்பதை யும்நீதி செலுத்தலையும் - உங்கள்
யாப்பதைக் கொண்டுமே செய்திடுங்கள்
5. ஆனாலும் நீங்களோ எதனையுமே - அறியா
ஆளாயும் அறியாமை மூடராயும்
தாளிங்கு ஓயாமல் வாழ்கின்றீர்கள் - அறிவின்
வேரிங்கு அற்றுமே நிற் கின்றீர்கள்
நீங்களோ இருளிலே நடப்பதனால் - அந்தத்
தாக்கமோ சமூகத்தில் உள்ளமற்ற
அமைப்புகள் யாவையும் தாக்கிஅவை - இங்கு
நிலைப்புகள் இல்லாமல் வீழ்கின்றன!

வேதாகம சங்கீதம் — 82

தமிழ் வடிவம்: நவாலியூர் சி. என். செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. A/L
(விஞ்ஞானம், வர்த்தகம், கலை)
G. C. E. O/L
TYPING, SHORT HAND வகுப்புகள்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
வகுப்புகள் வெகு சிறப்பாக
நடாத்தப்படுகின்றன.
BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சுஞ்சிவி சுஞ்சிகை

24 - 06 - 1989 சனிக்கிழமை

BOND INSTITUTES
(தனியார் கல்வி நிறுவனங்களின் முன்னோடிகள்)
1983 ஆம் ஆண்டின் பின்பு மீண்டும் முன்னைய உற்சாகத்துடன் அனைத்து வகுப்புகளுக்கும் தரமான ஆசிரியர்களைக் கொண்டு இயங்குகின்றது.

கொமேனி இல்லாத ஈரானின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ஒதுங்கி வாழும் நிலை மாறுமா?

ஈரானில் 2500 வருடகால முடியாட்சியை வீழ்த்தி ஈரானிய மக்களின் சிந்தனைகளிலும், போக்கிலும் கடந்த 10 வருடகாலத்தில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய ஈரானின் ஆத்மீகத் தலைவர் ஆயத்துல்லா ரூஹொல்லா கொமேனியின் (Ayatullah Ruhollah Khomeini) மறைவுக்குப் பின்னர் உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் ஈரானின் நிலை எப்படி இருக்கும் என்ற கேள்வி தற்போது கேட்கப்பட்டு வருகிறது.

தனது ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவை 'பயங்கரவாதிகள்' என்றும் 'மாபெரும் சாத்தான்' என்றும் அடிக்கடி வர்ணித்து வந்த ஆயத்துல்லா கொமேனி தனது மரணசாசனத்திலும் அதனையே குறிப்பிட்டுவிட்டுச் சென்றுள்ளார்.

1979 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அஞ்ஞாதவாசத்தின் பின்பு பாரிஸிலிருந்து அவர் ஈரான் திரும்பியபோது எப்படி லட்சக்கணக்கான மக்களால் வரவேற்கப்பட்டாரோ அதேபோன்று அவரின் இறுதி யாத்திரையும் லட்சக்கணக்கான மக்கள் பங்குபற்றிய ஒரு வைபவமாக சரித்திர வரலாறு படைத்திருக்கிறது.

சர்வதேச அரங்கில் எந்த ஒரு நாட்டுத் தலைவருக்கும் கிடைத்திருக்காத அஞ்சலி ஆத்மீகத் தலைவர் ஆயத்துல்லா கொமேனிக்குக் கிடைத்திருக்கிறது.

இறுதி யாத்திரையின்போது ஏற்பட்ட ஜனநெரிசலில் மட்டும் 8 பேர் கொல்லப்பட்டனர். 440 பேர் காயம் அடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர். 10 ஆயிரத்து 800 பேர் சிறு காயங்களுக்காகச் சிகிச்சை பெற்றனர்.

ஈரானிய ஆத்மீகத் தலைவராக இருந்த கொமேனி தமது 10 வருடகால ஆட்சியில் பெரும் வரலாறு ஒன்றையே விட்டுச்சென்றுள்ளார்.

வாரிசு எவரும் இல்லை

இறக்கும்போது ஆயத்துல்லா கொமேனி தனக்கு என்று ஒரு வாரிசையும் விட்டுச் செல்லவில்லை. ஆயத்துல்லா அலி மொன்ரா சேவி (65வயது) (Ayatullah Ali Monta Sevi) இவரது வாரிசாக பல காலம் கருதப்பட்டு வந்தவர்.

எனினும் தமது மிதவாதப் போக்கினால் சில மாதங்களுக்கு முன்னர் இவர் தமது பதவியை இழக்க நேரிட்டது.

ஈராக்குடனான யுத்தத்தை ஆயத்துல்லா அலி மொன்ரா சேவி கண்டித்து வெளிப்படையாகக் கருத்து வெளியிட்டிருந்தார். இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் தற்போது பிரிட்டிஷ் பிரஜையுமான சல்மான் ருஷ்டிக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையையும் இவர் நியாயப்படுத்த மறுத்திருந்தார்.

வளைகுடா யுத்தம்

பிரச்சினைக்குரிய ஷாட் அல் அராப் (shatt Al Arab) பிராந்தியத்தின்மீது ஈராக் தாக்குதலைத் தொடுத்ததை

கொமேனி

அடுத்து 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஈரான்–ஈராக் யுத்தம் மூண்டது.

யுத்தம் தொடங்கி 2 மாதங்களின் பின்பு யுத்தத்தில் மந்த நிலையே இருந்து வந்தது.

1987 இல் ஈராக் நகரான பஸ்ராவைப் பிடிக்கும் ஈரானிய முயற்சி ஈராக்கால் முறியடிக்கப்பட்டபோது போரில் முதல் தடவையாகத் திருப்பம் ஏற்பட்டது.

1988 ஆகஸ்ட் மாதம் ஈரானும் ஈராக்கும் யுத்தநிறுத்தம் செய்து கொண்டன. இதற்கு இரு வாரங்களுக்கு முன்னர் ஈரானிய சிவில் விமானம் ஒன்றை அமெரிக்கா சுட்டுவீழ்த்தியது. அப்போது விமானத்தில் இருந்த 290பேர் மரணம் அடைந்தனர்.

ஈராக்குடனான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஆயத்துல்லா கொமேனி கைச்சாத்திட்டபோது 'நஞ்சு அருந்துவதைவிட இது மிக மோசமான முடிவு' என்று வர்ணித்திருந்தார்.

இந்த 8 வருடகால யுத்தத்தில் ஈரானுக்கும் ஈராக்குக்கும் 50 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர்கள் நஷ்டம் ஏற்பட்டது. ஈரான் தரப்பில் 9 லட்சம் பேரும் ஈராக் தரப்பில் 3 லட்சம் பேரும் யுத்தத்தில் உயிரிழந்தனர்.

எதிர்கால ஜனதிபதி யார்?

ஆயத்துல்லா கொமேனி சமீபத்தில் நோய்வாய்ப்பட்டிருந்தபோது இருவர் ஈரானின் பலம் வாய்ந்த மனிதர்களாகக் கருதப்பட்டனர். ஒருவர் ஈரானிய சபாநாயகர் அலி அக்பர் ஹஷேமி ரப்சான் யானி (Ali Akbar Hashemi Rafsan jani) இவர் ஈரானின் ஆயுதப்படைகளின் தளபதியாகவும் செயற்பட்டுவருகிறார். மற்றவர் ஆயத்துல்லா கொமேனியின் 43 வயது மகன் அஹ்மெட் கொமேனி (Ahmed Khomeni).

புதிய ஆத்மீகத் தலைவர்

ஆயத்துல்லா கொமேனியின் மறைவுக்குப் பின்னர் 83 பேர் அங்கம் வகிக்கும் முல்லாக்களின் கவுன்சில் கூடி புதிய ஆத்மீகத் தலைவராக அலி கொமேனியை (Ali Khomeni) தெரிவுசெய்துள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஈரானில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும்போது ஜனாதிபதியாகும் வாய்ப்பு சபாநாயகர் ரப்சன் யானிக்கு இருந்து வருகிறது. ஈரானின் பலம் வாய்ந்த மனிதனாக ரப்சான் யானி கருதப்பட்டுவருகிறார்.

கொமேனியின் எழுச்சி

மன்னர் ஷாவின் (Shah Mohammed Reza Pahlavi) ஆட்சிக்காலத்தில் 1962 ஆம் ஆண்டு ஈரானில் நடந்த மத குருமார் வேலை நிறுத்தத்துடன் ஆயத்துலா கொமேனியின் பெயர் பிரபல்யமடைய ஆரம்பித்தது!

ஈரானின் மயில் ஆசனத்தை அப்போது அலங்கரித்த மன்னர் ஷாவினால் கொண்டுவரப்பட்ட மதச் சீர்திருத்தம் ஒன்றே இதற்குக்காரணம்.

குர் – ஆனில் மட்டுமன்றி எந்த ஓர் இறை நூலிலும் சத்தியம் செய்யலாம் என்பதே அந்த மத சீர்திருத்தம். இதனைக் கொமேனி கடுமையாக எதிர்த்தார். இதனைக் கொண்டுவந்து மத குருமாரின் எழுச்சிக்கு மன்னர் ஷா வித்திட்டிருந்தார்.

இந்தப் போராட்டங்களைத் தொடர்ந்து 1963 ஆம் ஆண்டு ஆயத்துல்லா கொமேனி அவரது சொந்த நகரான கொம்மில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

பின்பு மன்னர் ஷாவின் நிலச் சீர்திருத்தங்களை எதிர்த்ததற்காக 6 மாதகாலம் இவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

பின்பு ஈரானைவிட்டு வெளியேறி துருக்கிசென்றார். பின்பு ஈராக் சென்று ஷியா முஸ்லிம்களின் புனித நகரான அன் நயாப் என்ற பாலைவனப் பிரதேசத்தில் 14 வருடகாலம் தங்கியிருந்தார்.

அன் நயாப் நகரில் இருந்தவாறு ஷாவின் ஆட்சிக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட்டார்.

அப்போது அவரை நாடுகடத்தும்படி மன்னர் ஷா ஈராக்கின் சத்தாம் ஹுசேய்ன் அரசைக் கோரினார். இதனை அடுத்து இவர் 1978 அக்டோபர் மாதம் பிரான்ஸ் சென்றார். 1979 பெப்ரவரி மாதம் ஈரான் திரும்பினார். இவர் ஈரான் திரும்புவதற்கு 2 வாரங்களுக்கு முன்னர் 1979 ஜனவரி 16 ஆம் ஆம் திகதி மன்னர் ஷா ஈரானிலிருந்து வெளியேறி எகிப்தை அடைந்தார்.

மன்னர் ஷாவை ஈரானிடம் ஒப்படைக்கக் கோரி தெஹ்ரானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஈரானிய புரட்சிக் காவலர்களின் உதவியுடன் முற்றுகையிடப்பட்டது. 52 அமெரிக்கர்களைப் பணயமாக வைத்திருந்த இந்த முற்றுகை மொத்தம் 444 நாட்கள் – அதாவது மன்னர் ஷா நோய் வாய்ப்பட்டு மரணமான பின்பும் நீடித்தது.

இந்த முற்றுகையே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக மீண்டும் போட்டியிட்ட ஜிம்மி கார்ட்டர் தோல்வியுறக் காரணமாக அமைந்தது எனலாம்.

சர்ச்சைகள்

ஆயத்துல்லா கொமேனியின் 10 வருடகால ஆட்சியில் ஈரான் உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் பல்வேறு சர்ச்சைகளை எதிர்நோக்கி இருந்தது. அவற்றில் குறிப்பிடத்தக்கவை:–

★ 444 நாட்கள் நீடித்த அமெரிக்கத் தூதரக முற்றுகை.

★ 8 வருடகாலம் நீடித்த ஈரான் — ஈராக் யுத்தம்.

★ ஈரானுக்கு இரகசியமாக ஆயுதங்களை விற்று அதனால் கிடைத்த பணம் மூலம் நிக்கரகுவாவில் கொண்ரா கிளர்ச்சியாளர்களுக்கு உதவிய அமெரிக்க நிர்வாக ஊழல்.

★ 'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதிய எழுத்தாளர் ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்தது.

இந்த நெருக்கடிகளை ஆயத்துல்லா கொமேனி எதிர்நோக்கிய போது எந்த ஒரு நாட்டின் நிர்ப்பந்தத்துக்கும் பணிந்துபோனதாகத் தெரியவில்லை.

இப்படியான ஒரு போக்கு இனி வரப்போகும் ஆட்சிபீடத்தில் நீடிப்பதற்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன.

★

'ஆஷஸ்' டெஸ்ட் தொடரில்.....

ஆஷஸ் கிண்ணத்துக்கான இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெறுகின்றன.

மூன்று நாள் போட்டிகளையும் ஆறு டெஸ்ட் போட்டிகளையும் கொண்டதாக அமையும் இப்போட்டித் தொடரில் ஏற்கனவே முடிவடைந்துள்ள ஒருநாள் போட்டிகளில்; இரண்டு ஆட்டங்களில் வெற்றிபெற்றதன் மூலம் இங்கிலாந்து அணி ஒருநாள் போட்டித் தொடருக்கான 'டெக்சகோ' வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

இப்போட்டித் தொடரில் இங்கிலாந்து அணியின் சார்பாகக் கலந்துகொள்ளும் மைக்கட்டிங், டேவிட்கவர், கிரஹாம் கூச், இயன் பொத்தம், ஜோன் எம்பியூரி ஆகிய ஐவரும் இங்கிலாந்து அணியின் தலைவர்களாக விளங்கியவர்கள்.

ஆஸ்திரேலிய வீரரான டொம் மூடி இப்போட்டித் தொடரில் பங்குபற்றுபவர்களில் வயதில் குறைந்த வீரராக விளங்குகின்றார்.

லீட்ஸ் என்னும் இடத்தில் அமைந்துள்ள ஹெடிங்லி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றியீட்டியது.

ஆஸ்திரேலியா அணி முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 601 ஓட்டங்களைப்பெற்றது.

இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 430 ஓட்டங்களை எடுத்தது.

ஆஸ்திரேலியா அணி இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்து அணி 2 ஆவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியின் மூலம் ஆஸ்திரேலிய வீரர் கிறெக் சம்பல் தனது முதலாவது டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமானார். இங்கிலாந்து அணியின் தலைவர்களாகக் கடமையாற்றிய இயன் பொத்தம், மைக்கட்டிங், ஜோன் எம்பியூரி ஆகியோர் முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆடவில்லை.

இரண்டாவது டெஸ்ட் போட்டி இம்மாதம் 22 ஆம் திகதி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகியது.

மூன்றாவது டெஸ்ட் போட்டி ஜூலை மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை பேர்மிங்ஹாம் எட்க்காஸ்டன் (Edgbaston) மைதானத்திலும்,

நான்காவது டெஸ்ட் போட்டி ஜூலை மாதம் 27 ஆம் திகதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி வரை மன்சஸ்டர் ஓல்ட் ட்ரபோர்ட் மைதானத்திலும்,

ஐந்தாவது டெஸ்ட் போட்டி ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி துவங்கி 15 ஆம் திகதி வரை ரொட்டிங்ஹாம் டிரென்ட் பிறிட்ஜ் மைதானத்திலும்,

ஆறாவது டெஸ்ட் போட்டி ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரை லண்டன் ஓவல் மைதானத்திலும் நடைபெறும்.

-மணிவண்ணன்

நடந்துமுடிந்த இந்திய – மேற்கிந்திய டெஸ்ட் தொடரில் வீரர்களின் பெறுபேறுகள் இங்கு அட்டவணைப்படுத்தித் தரப்படுகிறது.

துடுப்பாட்டம்

போ - போட்டிகள், இ - இன்னிங்ஸ், ஆ - ஆட்டமிழக்காத இன்னிங்ஸ், ர - மொத்த ரன்கள், ச - சராசரி, அ - அதிகபட்ச ரன், * ஆட்டமிழக்கவில்லை.

மே. இ. தீவுகள்

	போ	இ	ஆ	ர	ச	அ
ரிச்சர்ட்சன்	4	7	–	619	88.42	194
ஹொயின்ஸ்	4	7	1	280	46.66	112*
லோகி	4	6	1	214	42.80	87
கிரீனிட்ஜ்	4	7	–	243	34.71	117
மார்ஷல்	3	4	1	84	28.00	40*
பிஷப்	4	5	3	55	27.50	30*
ரிச்சர்ட்ஸ்	4	5	–	135	27.00	110
டுஜோன்	4	5	–	83	10.60	33
ஆர்தர்டன்	4	7	2	78	15.60	37
அம்புரோஸ்	4	5	1	54	13.50	16
பெஞ்சமின்	1	1	–	7	7.00	7
வால்ஷ்	4	5	–	20	4.00	6

இந்தியா

மஞ்ச்ரேகர்	4	6	–	200	33.00	108
சித்து	4	7	1	179	29.83	116
ரவி சாஸ்திரி	4	7	1	170	28.33	107
அஜாருதீன்	3	4	–	113	28.25	61
சேதன் சர்மா	4	6	2	86	21.50	21
வெங்சாகர்	4	6	–	110	18.33	62
மோரே	4	6	–	103	17.16	50
அருன்லால்	4	7	–	113	16.14	30
ராமன்	1	2	–	32	16.00	17
கபில்தேவ்	4	6	–	91	15.16	34
அயூப்	4	6	–	78	13.00	32
ஹிர்வானி	3	4	2	3	1.50	1*
வெங்கடரமணா	1	2	2	0	—	0*

பந்து வீச்சு

ஓ - ஓவர்கள், மெ - மெய்டன் ஓவர்கள், ர - கொடுத்த ரன்கள், வி - வீழ்த்திய விக்கெட்டுகள், ச - சராசரி, சி - சிறந்த பந்து வீச்சு.

மே. இ. தீவுகள்

	ஓ	மெ	ர	வி	ச	சி
வால்ஷ்	123.5	35	268	18	14.88	6/62
மார்ஷல்	111.3	20	290	19	15.26	6/55
பிஷப்	137	39	370	16	23.12	6/87
அம்புரோஸ்	93.5	18	273	5	54.60	3/66
ரிச்சர்ட்ஸ்	51	8	128	1	128.00	1/28
பெஞ்சமின்	11	2	27	0	---	--
ஆர்தர்டன்	14	3	38	0	---	--

இந்தியா

கபில்தேவ்	146.5	31	387	18	21.50	6/84
அயூப்	171.4	29	452	14	32.28	4/104
சேதன் சர்மா	97	6	366	8	45.75	3/54
சாஸ்திரி	137	29	339	7	48.42	4/78
ஹிர்வானி	100.3	8	345	6	57.50	2/59
வெங்கடரமணா	11.4	1	58	1	58.00	1/10
மஞ்ச்ரேகர்	1	0	5	0	---	--
ராமன்	4	1	5	0	---	—

பென் ஜோன்ஸனின் கண்ணீர் சாட்சியம்

கனடா அரசு நடத்துகின்ற விசாரணையில் பிரபல ஒட்டப்பந்தய வீரர் பென் ஜோன்ஸன் கண்ணீர் மல்க சாட்சியமளித்தார்.

அவர் சொன்னார்: இளைஞர்களே நேர்மையாக வாழுங்கள். போதைவஸ்து பாவிக்காதீர்கள். ஏமாற்றுவதால் என்ன கிடைக்கும் என்பதை நான் அறிந்து உள்ளேன்.

1987 ரோமில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் தூரத்தை 9.83 வினாடியில் ஓடியும்,

1988 சோல் எலிம்பிக்கில் அதனை 9.79 வினாடியிலும் ஓடி தங்கப்பதக்கம் பெற்றேன்.

(சோல் சாதனை ரத்துச் செய்யப்பட்டது. ரோம் சாதனை இன்னும் ரத்துச் செய்யப்படவில்லை.)

சோலில் இருந்து திரும்பி வந்ததும் நான் போதை வஸ்து பாவிக்கவில்லை என்று பொய் சொன்னேன். வெட்கம் காரணமாகவே பொய் சொன்னேன்.

பென் ஜோன்ஸனின் சட்சியம் இப்படி அமைகிறது.

இதனிடையில் — 1992இல் ஸ்பெயின், பார்சிலோனாவில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் பென் ஜோன்ஸன் கலந்துகொள்ள கனடா அரசு அனுமதிக்கவேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

கனடா மக்க[illegible]தியில் நடத்தப்பட்ட வா[illegible]னொலி-டெலிவிஷன் ஆய்வு ஒன்றில் இத்தகவல் வெளியாகியிருக்கிறது.

கார்ள் லூயி, பிரபல ஒட்டப்பந்தய வீரர்.

அமெரிக்காவைச் சேர்ந்த இவர் 1988 சோல் ஒலிம்பிக்ஸில் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இரண்டாவதாக வந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

தங்கப் பதக்கம் பெற்ற கனடாவீரர் பென் ஜோன்ஸன் போதைவஸ்து பாவித்து விட்டு பந்தயத்தில் கலந்து கொண்டது கண்டுபிடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரிடமிருந்து தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது.

கார்ள் லூயிக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

பென் ஜோன்சனின் நடத்தை குறித்து கனடா அரசு நடத்தும் உத்தியோக விசாரணையில் இவ்விவகாரம் புதியதொரு பிரச்சினையைக் கிளப்பியுள்ளது.

1987 ஒலிம்பிக்ஸில் பங்குபற்றியபோதும் போதை வஸ்து பாவித்திருந்தேன் என்று பென் ஜோன்ஸனே விசாரணையில் சாட்சியமளித்த போது ஒப்புக்கொண்டார்.

1987 இலும் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பென் ஜோன்ஸனே தங்கப்பதக்கம் பெற்றிருந்தார். கார்ள் லூயிக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

இப்போது 1987 ஒலிம்பிக் போட்டியிலும் கார்ள் லூயி வெற்றியீட்டியதாகக் கருதப்பட்டு தங்கப்பதக்கம் வழங்க வேண்டும் என்று அமெரிக்க உடற்பயிற்சிச் சங்கம் ஒலிம்பிக் கமிட்டியைக் கோரியுள்ளது.

★

வீராங்கனையின் தடை உத்தரவு

டென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா இம்மாதக் கடைசியில் விம்பிள்டன் போட்டிகளில் கலந்துகொள்ளவிருக்கிறார்.

ஆனால் அவர் தனது ஆட்டத்தைப் பார்க்க தனது குடும்பத்தினரும் நண்பர்களும் லண்டன் வரத் தடை விதித்திருக்கிறார்.

குடும்பத்தினர் கூட்டத்தினர் மத்தியில் தனது ஆட்டம் சோபிக்காது; என் மனமும் விளையாட்டில் ஈடுபாடு[illegible] நவரத்திலோவா கூறியிருக்கிறார்.

★

உலக விளையாட்டு

ஏஸ்.பி.சீலன்

பொது அறிவுப்போட்டி இல.27

சரியான விடைகள்

1. உதிஷ்டிரன் 2. இதயம் 3. கியூபா 4. லிங்கம் 5. அறிவு 6. வானம்பாடி 7. விழி 8. வாஷிங்டன் 9. இளமை 10. நிழல் 11. உள்ளம் 12. புன்னகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org